Regd. No. M. 4392

வேளாங்கண்ணி

அர்ச் ஆரோக்கிய மாதா தேவாலயத் திருவிழா 1944

28-8-44 முதல் 10-9-44 வரை

●

●

Edited, Printed and Published by R. Krishnamurthy at the "Kalki" Press,
116-119, Sladens Garden, Poonamallee High Road, Kilpauk, Madras.



தூக்கம் . . .

தான் அசௌகரியமாக இருக்கிறோமென்று எண்ணாத ஒருவன்தான் நன்கு தூங்குகிறான். பகல் முழுதும் செய்யும் கடினமான வேலைக்குப் பிறகு ஒவ்வொருவருக்கும் நல்ல நித்திரை மிகவும் அவசியமாகும். பகலில் வேலை செய்வதால் உங்கள் தேகத்தினின்றும் செலவாகும் சக்தியை நீங்கள் தூங்கும் போதுதான் இயற்கையாகவே திரும்பவும் பெறுகிறீர்கள். நீங்கள் சயனிக்கும் அறை போதுமான அளவுக்குக் காற்றோட்ட முள்ளதாக இருக்கவேண்டும். தூசி, புழுதி படியாதவாறு இருத்தல் அவசியம். அறை முழுவதும் ஒரே மரசாமான்களைப் போட்டு அடைத்து வைக்கக் கூடாது. படுக்கச் செல்லுமுன் தூய மெல்லிய ஆடை அணிந்து கொள்ளுங்கள்.

பிருத்வி எங்கும் பரிபூரண
சௌக்கியத்தை நாடுகிறது

கல்கி



ALKI செப்டம்பர் 3, 1944 4 அணா

"அதையேன் கேட்கிறாய்? கொடுத்த லீவையும் ரத்துச் செய்து விட்டான். எல்லோருக்கும் இரண்டு மணி நேர லீவுதான். பதினோரு மணிக்கெல்லாம் கிளம்பி நாங்கள் அல்லாம் போகிறோம்!" என்றான்.

இந்தச் செய்தி லலிதாவுக்குத் தலையில் இடி விழுந்தது போலிருந்தது. குறைந்தது ஒருமாத லீவாவது இருக்கும் என்று நினைத்துச் சந்தோஷப்பட்டுக்கொண்டிருந்த அவளுக்கு, ஒரு நாள்கூட லீவு இல்லை என்றால் எப்படியிருக்கும்?

இந்தச் சமயம் பார்த்துத்தான் பக்கத்து வீட்டுத் தாத்தாவும், எதிர் வீட்டுப் பாட்டியும் ஹரிஹரனைக் குசலம் விசாரிக்க வந்து விட்டார்கள். "என்டாப்பா, வந்தியா! ஐந்து வருஷமாச்சுதடா, உன்னைப் பார்த்து. இப்பொழுதாவது லீவு கொடுக்க அவனுக்கு மனசு வந்ததே!" என்றாள் பாட்டி.

தாத்தா அவனது ராணுவ வாழ்க்கையைப் பற்றிக் கேட்க ஆரம்பித்து விட்டார். ஹரிஹரன் அவர்களுக்கெல்லாம் சிறிதும் முகம் கோணாமல் பதிலளித்துக் கொண்டிருந்தான். இதைப் பார்க்கையில், லலிதாவுக்கு ஆத்திரம் ஆத்திரமாய் வந்தது. "சனியன்கள்! பூஜை வேளையில் கரடி வந்தாற்போல் எங்கிருந்தோ வந்து விட்டதுகளே! இதுகள் வரல்லை என்று யாரழுதா? அவரும் தானாகட்டும்: ஆத்துக்காரி தவிச்சுண்டிருப்பாளே, இருப்பது இரண்டு மணி அவகாசம்தானே, அந்த நேரத்தில் ஆத்துக்காரியுடன் பேசுவோம் என்றிருக்கா? இந்தப் புருஷர்களே இப்படித்தான். ஆத்துக்காரிமேல் துளியாவது பிரேமையிருந்தால் தானே!" என்று அலுத்துக் கொண்டாள்.

ஹரிஹரன் அவர்களுடன் பேசி, அவர்களை ஒரு மாதிரியாய் அனுப்பிவிட்டு லலிதாவை அணுகினான். லலிதாவின் கோபத்திற்குக் கேட்க வேண்டுமா? "ஏன் பேச்சை அதற்குள் முடித்து விட்டீர்கள்? அவர்களுடனேயே பேசிக் கொண்டிருப்பது தானே?" என்று ஆத்திரத்துடன் படபடவென்று பேசினாள்.

"லலிதா, என்ன அசடாயிருக்கிறாய்? வந்தவர்களுடன் பேசாமல் என்ன பண்ணுவது? நான் வேண்டுமென்றா அவர்களை அழைத்துவைத்துப் பேசினேன்? எனக்கு என்னமோ எப்பொழுது நாமிருவரும் பழையபடி வாழ்க்கையை நடத்தப் போகிறோம் என்றிருக்கிறது. என் மனத்திலுள்ள ஏக்கத்தையும் துக்கத்தையும் உனக்கு நான் எப்படிக் காண்பிப்பேன்?" என்றான்.

ஹரிஹரன் வார்த்தைகள் லலிதாவின் மனத்தை உருக்கி விட்டன. "என்னை மன்னியுங்கள்" என்று தன் முகத்தை அவன் மடியில் புதைத்துக்கொண்டு விம்மினாள்.

வாசலில் கார் வந்து நின்ற சத்தம் கேட்ட பிறகுதான் இருவருக்கும் சுயநினைவு வந்தது. "சரி, கார் வந்துவிட்டது. நான் போய் வருகிறேன். கடவுள் கிருபை யிருந்தால் கூடிய சீக்கிரம் சந்திப்போம்" என்று கூறி விட்டு அவளைப் பிரிய மனமில்லாமல் பிரிந்து சென்றான் ஹரிஹரன்.

*

அவன் சென்றதும் அவளுக்குப் பைத்தியம் பிடித்தாற் போலிருந்தது. கட்டிக்கொண்டிருந்த புடவையை ஆத்திரத்துடன் அவிழ்த்துப் போட்டு விட்டு ஒரு கிழிசலைக் கட்டிக் கொண்டாள். அப்படியே படுக்கையில் வந்து சாய்ந்து விட்டாள்.

"ஐயோ, அவர் வரத்தான் வந்தாரே, அவரை நாம் எப்படி நடத்தினோம்? ஆம், அவர் அந்தப் பாட்டியுடனும் கிழவருடனும் பேசிக் கொண்டிருந்ததில் என்ன தப்பு? அதை உணராமல் ஸ்திரீகளின் குணத்தைக் காண்பித்து விட்டேனே! அவர் வந்து இருந்த நேரத்தில், அவர் மனத்திற்குச் சந்தோஷம் உண்டாகும்படி நான் எங்கே நடந்து கொண்டேன்?"

இப்படி எண்ணிப் பார்த்ததும், லலிதாவின் கண்களிலிருந்து கண்ணீர் மாலை மாலையாய் வழிந்தது. இந்த நிலையில் அவள் எவ்வளவு நேரம் படுத்துக் கொண்டிருந்தாளோ, தெரியாது. யாரோ தன்னைத் தொடுவதுபோல் தோன்றவே, திடுக்கிட்டுத் திரும்பினாள்.

முகத்தில் புன்னகை ததும்ப, ஹரிஹரன் நின்றுகொண்டிருந்தான். "லலிதா, இன்னும் ஒரு வாரத்திற்கு விசாரமில்லை. மேலதிகாரிக்கு உடம்பு சரியாயில்லாததினால் பிரயாணத்தை ஒத்திப் போட்டு விட்டார்கள்!" என்றான்.

லலிதா சந்தோஷம் தாங்காமல் அவனது நீட்டிய கரங்களின் மத்தியில் பாய்ந்தாள்.



எந்த உணவுப் பொருள்களை நீ அதிகம் விரும்புகிருயோ

அவற்றினல் அதிக பலத்தைத் திரட்ட முயற்சிக்கவும்!







விருப்பத்துடன் நீங்கள் சாப்பிடும் உணவுப்பொருள்களை அதிக ஊக்கந் தரக்கூடியவைகளாகச் செய்யுங்கள். நமக்குப் பிரியப்பட்ட சில உணவுப் பொருள்கள் அதிக நன்மை அளிப்பதில்லை என்று உங்களுக்குத் தெரியுமா? அவைகள் பசியைத் தணிக்கின்றன. ஆனல் சிறிது ஊக்க மட்டும் அளிக்கின்றன—தேவையான அளவு ஊக்கத்தைக் கொடுப்பதில்லை. இது ஒரு திடுக்கிடக்கூடிய யோசனைதான். ஆரோக்கியம், சந்தோஷம், திறமை—இவைகளெல்லாம் ஊக்கத்தை ஆதாரமாகக் கொண்டுள்ளன. சாப்பாடு நம் தேவைக்கு வேண்டிய ஊக்கத்தைக் கொடுக்காவிட்டால் ஏற்படும் தீமைகள் பல. எல்லா உணவுப் பொருள்களும் சிறிதளவு ஊக்கத்தை அளிக்கின்றன. ஆனல் தினசரி சாப்பிடும் சில உணவுப்பதார்த்தங்கள் சொல்ப ஊக்கமளிக்கக் கூடியவை. இம்மாதிரியான சாப்பாட்டுக்கு ஊக்கத்தைக் கொடுக்கவேண்டுமானல் அதிக ஊக்கமளிக்கக் கூடிய பதார்த்தங்களைச் சேர்க்கவேண்டும். வைடமின் நிறைந்த டால்டாவினல் சமைப்பது அனுகூலத்தைக் கொடுக்கிறது. இயற்கையளிக்கும் ஊக்கத்தைக்கொடுக்கக்கூடிய சத்துப் பொருள்களை டால்டா கொடுக்கிறது. எல்லா உணவுப்பதார்த்தங்களையும் டால்டாவினல் சமையல் செய்வது நலம்.

நல்லொருள்நிரியும் எந்தெந்த பதார்த்தங்கள் ஊக்கமளிக்கக் கூடியவை என்பதை அறிந்திருக்க வேண்டும். டால்டா "குக் புக்" (ஆங்கிலத்தில் மட்டும் எழுதினது) உணவுப்பொருள்களின் தராதரத்தைப் பற்றியும் 150 இந்திய ஆகாரத் திட்டங்களைப் பற்றியும் விவரித்திருக்கிறது. உங்களிடமொரு பிரதி இருக்க வேண்டியது அவசியம். Dept. C133 P.O. Box No. 353 Bombay என்ற விலாசத்திற்கு 4 அணா ஸ்டாம்பு அனுப்புங்கள்.



வைடமின் நிறைந்த **டால்டா** ஊக்கமளிக்கிறது.

HVM. 34-33/40 TM

THE HINDUSTAN VANASPATI MANUFACTURING CO., LTD.

றாலும் மகா உயிர். நடு ராத்திரியானாலும் காப்பி வேண்டுமென்று தோன்றி விட்டால், அவனுக்குக் காப்பி எதிரே வந்து நிற்க வேண்டும். இந்த விஷயமாக இருவருக்கும் சண்டை வராத நாளே கிடையாது.

அதே மாதிரிதான் ஊறுகாய் விஷயத்திலும். சாப்பிட ஆரம்பித்ததிலிருந்து கை யலம்பும் வரை அவனுக்குக் குறைந்தது நாலைந்து தினுசு ஊறுகாயாவது வேண்டும். எவ்வளவு பண்ணினாலும் நாலே நாட்களில் தீர்த்துவிடுவான் ஹரி. லலிதாவால் அடிக்கடி ஊறுகாய் போடுவதற்குக் கஷ்டமாயிருக்கும். "இனிமேல் ஊறுகாயே நான் போடப் போவதில்லை" என்று கோபிப்பாள்.

இவைகளை யெல்லாம் நினைத்துப் பார்க்கும்பொழுது, லலிதாவுக்கு ரொம்பக் கஷ்டமா யிருந்தது.



ஞாயிற்றுக்கிழமை இரவு பூராவும் அவளுக்குத் தூக்கமே வரவில்லை. மறுநாள் பொழுது விடியட்டும் என்று காத்துக் கொண்டிருந்தாள். விடிந்ததுதான் தாமதம்; உடனே எழுந்து பரபரவென்று எல்லா வேலைகளையும் முடித்துக் கொண்டாள். அன்று அவளையு மறியாமல் அவள் வாயிலிருந்து பாட்டு கிளம்பியது. நடையில் ஓர் புதிய ஒய்யாரம் தோன்றியது. எட்டு மணிக்குள் எல்லாம் முடிந்து விட்டது. ரயில் வருவது என்னமோ பதினொரு மணிக்குத்தான் என்று அவளுக்குத் திட்டமாய்த் தெரியும். தெரிந்தாலும் பத்துத் தடவை ரயில்வே 'கைடை'ப் புரட்டிப் பார்த்தாள். அதுவும் போதாதென்று ரயில்வே ஸ்டேஷனுக்கு 'போன்' பண்ணியும் விசாரித்தறிந்து கொண்டாள். பத்து மணிக்கெல்லாம் கணவனுக்கு மிகவும் பிடித்த கறுப்புப் புடவையைக் கட்டிக்கொண்டு, துணைக்குத் தனது ஆயாவை அழைத்துக் கொண்டு ஸ்டேஷனுக்குக் கிளம்பத் தயாரானாள். கிளம்பி வெளியே வரும் சமயத்தில் ஒரு டாக்ஸி வந்து வாசலில் நின்றது. உள்ளே ராணுவ உடையில் மூன்று நான்கு பேர் உட்கார்ந்திருந்தனர். லலிதாவுக்கு ஒன்றுமே புரியவில்லை. "என்ன இது? ரயிலுக்கு மணியே ஆகவில்லை, இதற்குள் ரயில் வந்து விட்டதா, என்ன? வந்திருப்பது அவரா, இல்லை அவரைத் தேடிக்கொண்டு யாராவது வந்திருக்கிறார்களா?" என்று பலவாறு யோசனை யிட்டவளாய் வெளியே வந்தாள். 'டாக்ஸி'யிலிருந்து இறங்கும் தன் கணவனைப் பார்த்ததும்தான் அவளுக்கு உயிர் வந்தது. "லலிதா!" என்று கூவிக் கொண்டே அவன் உள்ளே நுழைந்தான். லலிதா கண்களில் ஆனந்த பாஷ்பம் பொங்க, அவன் கரங்களை ஆவலோடு பற்றிக் கொண்டாள்.

"என்ன மாப்பிள்ளை! ஏது, ரயில் சீக்கிரம் வந்து விட்டதா, என்ன?" என்ற தன் தாயாரின் குரலைக் கேட்ட பிறகுதான் லலிதாவுக்குத் தன் சுய நினைவு வந்தது.


"இல்லை, நாங்கள் ரயிலில் வரவில்லை. நேரே 'பிளேனில்' வந்து விட்டோம்" என்றான் ஹரிஹரன்.

உடனே அவனை நாற்காலியில் உட்காரச் செய்து, உடையைக் கழற்றச் சொல்லி விட்டு, காப்பி, டிபன் கொண்டுவருவதற்காக உள்ளே சென்றாள் லலிதா. அன்று அவளுக்கு என்னமோ, புதிதாய்க் கலியாணமான பெண்ணுக்கு முதல் முதல் அகமுடையானைக் கண்டால் எப்படி இருக்குமோ அப்படி இருந்தது.

காப்பி, பலகாரம் கொடுக்கும் பொழுதுதான் அவளுக்கு அவனுடன் அவன் சாமான்கள் வராதது தெரிந்தது. "உங்கள் சாமான்கள் எங்கே?" என்று கேட்டாள்.

அந்தக் கேள்வியைக் கேட்டதும் ஹரிஹரனுக்கு முகம் மாறியது. "சாமான்கள் என்னுடன் வரவில்லை. எல்லாவற்றையும் 'ஏரோடிரோமி'லேயே வைத்து விட்டு வந்திருக்கிறேன். பதினொரு மணிக்கெல்லாம் நான் அங்கு இருக்கணும்!" என்றான்.

"அது என்ன, அப்படி? அப்படியானால் உங்களுக்கு எத்தனை நாளைக்கு லீவு!"



"அடுத்த திங்கட்கிழமை நான் அங்கு லீவில் வருகிறேன் — ஹரி."

இந்தத் தந்தியைப் பதினாயிரம் தடவை படித்துப் பார்த்தாள் லலிதா. அவளுடைய கண்களையே அவளால் நம்ப முடியவில்லை. "இந்த மாதிரி செய்தியை எப்பொழுது கேட்கப் போகிறோம்?" என்று ஏங்கிக் கிடந்த அவளுக்கு இந்தத் தந்தியைப் பார்த்ததும், தான் காண்பது கனவா, இல்லை நனவா என்று சந்தேகம் தோன்றியதில் என்ன ஆச்சரியம்?

அடுத்த திங்கட்கிழமை! ஆம்; இன்னும் ஏழே நாட்கள்தான். அதற்கப்புறம் — இப்படி நினைத்துப் பார்க்கும்போது, எல்லையில்லாத சந்தோஷத்தினால் அவள் தொண்டை அடைத்துக் கொண்டது. தந்தியை எடுத்து மறுபடியும் வாசித்தாள். அப்பா! இந்த ஆறு வார்த்தைகளுடன் கூட இன்னும் நாலு வார்த்தைகள் கூட அடித்திருந்தால் என்ன? லீவில் வருகிறேன் என்று எழுதியவர், எத்தனை நாள் லீவில் வருகிறேன் என்பதையும் குறிப்பிட்டிருந்தால் என்ன?

அவளுக்கு வேலைகள் ஒன்றும் ஓடவேயில்லை. அவளுடைய மனம் அடுத்த வாரம் வரப் போகும் தன் கணவனை எப்படி வரவேற்பது, அவன் மனதை எப்படித் திருப்திப் படுத்துவது என்பதையே நினைத்துக் கொண்டிருந்தது.

வேலைகளையெல்லாம் ஒரு மாதிரியாய் முடித்துவிட்டு லலிதா தனது அறையில் வந்து உட்கார்ந்தாள். அவளுடைய கட்டிலுக்கு நேரே ராணுவ உடையுடன் அவளுடைய கணவனின் போட்டோ மாட்டப் பட்டிருந்தது. ஹரிஹரன் ராணுவத்தில் சேர்ந்து இந்தியாவை விட்டுச் சென்றது முதல் லலிதாவுக்கு ஆறுதலளித்து வந்தது இந்தப் போட்டோதான்.

லலிதா தன் எதிரில் இருந்த அந்தப் போட்டோவைப் பார்த்தாள். "ஐந்து வருடங்களுக்குப் பிறகு அவரைப் பார்க்கப் போகிறோம். அவர் இப்பொழுது எப்படியிருப்பார்? அவரது குணம், நடையுடை பாவனைகளெல்லாம் எப்படி மாறியிருக்கும்?"—இப்படி நினைத்துக் கொண்டே அவள் ஒரு நீண்ட பெருமூச்சுடன் திரும்பிப் படுத்துக் கொண்டாள். அவளும் அவள் கணவனும் நடத்திய வாழ்க்கை அவள் மனக்கண்முன் தோன்றியது. அவள் தன் கணவனுடன் நடத்திய வாழ்க்கையை நினைக்கும் பொழுதெல்லாம் அவளுக்குத்தான் தன் கடமையைச் சரிவர நிறைவேற்றவில்லை, அவருக்குத் தான் மனமுவந்த பத்தினியாய் நடக்கவில்லையென்று தோன்றியது.

காரணம், ஹரிஹரனுக்குப் பிடித்தவை லலிதாவுக்குப் பிடிக்காமலிருந்ததுதான். உதாரணமாக, அவனுக்குக் காப்பியென்றாலும், ஊறுகாயென்



வைத்தியர் (தன் பிள்ளையிடம்):—அடுத்த வீட்டு ராமுவுக்கு அவன் குழந்தைப் பருவத்திலிருந்து வைத்தியம் பண்ணியும் இன்னும் குணப்படுத்தவில்லை என்று கேட்கிறாயே, பண்ணியிருந்தால் இந்தப் பத்து வருஷமாக உன்னைப் படிக்க வைத்திருக்க முடியுமா? —ஆறுமுகம்.

எங்கள் ஊர் வைத்தியர்

பகீரதன்

அன்று நாலாவது தடவையாக, நமசிவாய வைத்தியர் நாடி சாஸ்திரத்தை வைத்துப் படித்துக் கொண்டிருந்தார். எத்தனை தடவைதான் படிக்கட்டுமே! ஊஹூம், அந்தப் பாழாய்ப் போன நாடி சாஸ்திரம், அவர் மண்டையில் ஏறுவதே இல்லை. அதற்கேற்றாற் போல், அவரிடம் வைத்தியம் செய்து கொள்ள வருபவர்களும், தங்கள் நோய் இன்னதென்று தாங்களே முன்னால் சொல்வதில்லை. அவர் நாடியைப் பிடித்துப் பார்த்து, இது கபவாத சுரம், காமாலை என்று எதையாவது சொல்லும் வரை கல்லுப் பிள்ளையார் மாதிரி இருப்பார்கள். இப்படிச் சோதிப்பதற்கென்றே சில வாலிபர்கள் அவரிடம் வருவதுண்டு. வைத்தியர் அவர்களுக்கு என்ன நோய் என்று சொன்னாலும் அதை அவர்கள் ஒப்புக்கொள்ள மாட்டார்கள். அதற்குப் பதிலாக அவர்கள் "இல்லை, இல்லை" என்று சொல்லிக் கொண்டே பரிகாசமாகச் சிரிப்பார்கள். அப்படிப்பட்டவர்களைக் கண்டால் எந்த வைத்தியருக்குத்தான் கோபம் வராது? நீங்களே சொல்லுங்கள்.

நானும் வாலிபனானதால், இப்படித்தான் அவர் என்னைப் பற்றியும் எண்ணிக் கொண்டார். ஆகவே, அவர் என்னைக் கண்டதும் முகத்தைச் சுளித்துக்கொண்டு, "என்ன, 'எனக்கு நாடி பார்க்கத் தெரியுமா?' என்று தெரிந்து கொள்வதற்காக வந்திருக்கிறீரா?" என்று என்மீது எரிந்து விழுந்தார்.

"இல்லை, நாடி பார்க்க வேண்டாம்; நானே சொல்லி விடுகிறேன். எனக்கு உடம்பு ஒன்றுமே சரியாயில்லை; ஒரு வேலையும் ஓட மாட்டேன் என்கிறது!"

"இவ்வளவுதானா!" என்று சொல்லி, ஏற்கெனவே பழைய ஹார்லிக்ஸ் பாட்டில் ஒன்றில் தயாராய்ச் செய்து வைத்திருந்த சூரணத்தை எடுத்து என்னிடம் கொடுத்தார். "இந்தச் சூரணத்தை காலை, மாலை ஒரு தேக்கரண்டி அளவு எடுத்து ஒரு சேர் ஆட்டுப் பாலில் போட்டுச் சாப்பிடுங்கள்" என்றார்.

நல்ல வேளையாக எங்கள் ஊரில் ஆட்டுப் பால் கிடைப்பது ரொம்ப சுலபமாக இருந்தது. ஆகவே, நான் வைத்தியர் சொன்னபடி ஒரு நாள் தவறாமல் செய்து வந்தேன். என் உடம்பும் குணமாகி விட்டது. இதைப் பற்றி நான் ரொம்ப ரொம்பச் சந்தோஷப் பட்டுக் கொண்டிருக்கும்போது, ஒரு நாள் என் மனைவி, "நீங்கள் ஒன்றும் அந்த வைத்தியர் மருந்தைச் சாப்பிட்டுத் தேறிவிடவில்லை. இதோ பாருங்கள், அந்த மருந்தை!" என்று சொல்லி என்னிடம் அவர் கொடுத்த மருந்தை கொடுத்தாள்.

"பின் எதைத்தான் நான் இத்தனை நாளும் சாப்பிட்டு வந்தேன்?" என்று ஆச்சரியத்துடன் கேட்டேன்.

"இன்னொரு 'ஹார்லிக்ஸ்' புட்டியில் நான் சர்க்கரை போட்டு வைத்திருந்தேன். அதை எடுத்துச் சாப்பிட்டு விட்டீர்கள்?" என்றாள் அவள்.

"அப்படியானால் அந்த வைத்தியருக்கு அழுத காசு தண்டந்தானா? சரி, மருந்தைத் திருப்பிக் கொடுத்து விட்டுக் காசை வாங்கிக்கொண்டு வருகிறேன்!" என்று அவளிடம் சொல்லி விட்டு, நேரே வைத்தியரிடம் சென்று விஷயத்தைச் சொன்னேன்.

"ரொம்ப சரி; வெறும் ஆட்டுப் பாலைக் குடி என்றால் நீர் குடித்திருப்பீரா? மருந்து என்று ஏதோ ஒன்றைக் கொடுத்ததால்தானே நீர் தினசரி ஆட்டுப் பால் குடிக்க ஆரம்பித்தீர்?" என்றார் எங்கள் ஊர் வைத்தியர்.

அதுவும் நியாயந்தானே? என்ன?




நடிகர்:—ஐயோ! மேல் மாடியிலிருந்து கீழே குதிக்க வேண்டுமா? செத்துப் போய் விடுவேனே.

டைரக்டர்:—பாதகமில்லை. இதுதான் கடைசி கட்டம்.

—பாபு.

இப்பொழுது கொஞ்ச நாளாக என் அத்தை பாரு என் அழுகையை அடக்குவதற்கு ஒரு யுக்தி கண்டு பிடித்திருக்கிறாள். நான் அழும் போதெல்லாம் ரேடியோவைத் திருப்பி விடுகிறாள். ரேடியோ பாட ஆரம்பித்ததும் நான் அழுகையை நிறுத்தி விடுகிறேன். "குழந்தை பாட்டுக் கேட்கிறது, பாட்டுக் கேட்கிறது" என்று ரேடியோவை மூடாமலே வைத்துக் கொண்டிருக்கிறார்கள்.

ஆனால் நான் அழுகையை நிறுத்துவதின் உண்மைக் காரணம், பாட்டைக் கேட்டு மோகித்து அல்ல. "நான் அழுகையை வேண்டுமானாலும் நிறுத்திக் கொள்கிறேன். அந்தப் பாழும் ரேடியோ சங்கீதம் வேண்டாம்" என்று சொல்வதற்காகத்தான். ஆனால் இந்தப் பெரியோர்களுக்கு மூளை இருந்தால்தானே?



இந்தப் பெரியவர்களுக்கு மூளை இல்லை என்பதற்கு இன்னொரு உதாரணம் கூறுகிறேன் கேளுங்கள். எங்கேயாவது ஏட்டுச் சுரைக்காய் கறிக்குதவுமா? எங்கம்மாதான் பாக சாஸ்திரப்படி சமையல் செய்கிறாள் என்றால் எங்கப்பா என்னைப் பால சாஸ்திரப்படி வளர்க்க ஆரம்பித்திருக்கிறார். "குழந்தைகளை வளர்ப்பது எப்படி?" என்று பெயர் போட்டிருக்கும் அநேகப் புத்தகங்களை ஊரில் உள்ள எல்லா வாசகசாலைகளிலிருந்தும் வாங்கிக்கொண்டு வந்திருக்கிறார் அப்பா!

அந்தப் பாழும் புஸ்தகங்களிலே, ஒன்றில் போட்டிருக்கிறாப்போல் இன்னொன்றில் போட்டிருக்காது போல் தோன்றுகிறது. "குழந்தை தூங்குவதற்குத் தொட்டிலை ஆட்டு" என்று ஒரு புஸ்தகத்தில் போட்டிருக்கிறது. உடனே அன்றைக்கெல்லாம் தொட்டிலை ஆட்டுகிறார்கள். மறுநாள் வாசிக்கும் புஸ்தகத்தில், "தொட்டிலை ஆட்டாதே. குழந்தை அழுது, அழுது தானே தூங்கும்" என்று போட்டிருக்கிறது. உடனே தொட்டிலை ஆட்டாமல் என் தொண்டை காய என்னை அழும்படி விட்டு விடுகிறார்கள்.

இந்தப் பாழும் புஸ்தகத்தினால் எங்கப்பாவுக்கும், வீட்டில் உள்ள மற்றவர்களுக்கும் ஒரு தடவை சண்டையே வந்து விட்டது. "குழந்தை அழுதால் எதற்காக அழுகிறாள் என்று காரணத்தைக் கண்டு பிடி. உடனே காரணத்தை அகற்று" என்று ஒரு புஸ்தகத்தில் போட்டிருக்கிறது போலிருக்கிறது. ஒரு நாள் நான் எதற்காகவோ அழுது கொண்டிருந்தேன். (எதற்காக அழுதேன் என்று கேட்கிறீர்களா? தினம் நூறு தடவைக்குக் குறையாமல் அழும்போது எதற்காக அழுதேன் என்று எப்படி ஞாபகம் வைத்துக் கொள்ள முடிகிறது? அழுது, அழுது பழக்கமாகப் போய், சில சமயங்களில் காரணமின்றியே அழுகிறேனோ என்று கூடத் தோன்றுகிறது.)

அப்பொழுது என்று வீட்டில் எல்லாரும் சத்தம் போட்டுப் பேசிக் கொண்டிருந்தார்கள். எங்கப்பா குழந்தை அழுவதற்குக் காரணம் எல்லாரும் சத்தம் போடுவதுதான் என்று நிர்மானித்து வீட்டில் உள்ள எல்லாரையும்வெளியே அகற்ற ஆரம்பித்து விட்டார்!

என் பெற்றோர்கள் சம்பந்தப்பட்ட மட்டில் நான் பால் விஷயத்தில் கூடச் ஜாக்கிரதையாக இருக்க வேண்டியிருக்கிறது. ருசி கண்ட பூனை உரிக்கு உரி தாவும் என்று சொல்வார்களே, அதைப்போல ஆகிவிட்டார்கள் எங்கப்பாவும் அம்மாவும்.

ஒரு நாள் நான் பால் குடிக்காமல் அழுதுகொண்டிருந்தேன். பால் மிகவும் ருசியாக இருக்கும் என்று காண்பிப்பதற்காக அப்பா பால் புட்டியில் இருந்த பாலை எனக்குக் குடித்துக் காண்பித்தார். அவர் பாலைச் சற்று ருசி கண்டது எனக்கு அனர்த்தமாய்ப்போய் விட்டது. இப்பொழுதெல்லாம் புட்டிப் பாலை எனக்கென்று கரைத்தாலும் எனக்கு முழுவதும் கொடுப்பது கிடையாது. ருசியாய் இருக்கிறது என்று அப்பாவும், அம்மாவும் மாறி, மாறிக் குடித்து விடுகிறார்கள்! இப்படிக் குடித்து விட்டு, நான் குண்டாக வளரவில்லையே என்று குறை சொல்லுகிறார்கள்!

இப்பேர்ப்பட்ட பெற்றோர்களைக் கண்டு "ஜாக்கிரதை!" என்று எச்சரிக்கத் தோன்றுமா, தோன்றாதா, தயவு செய்து நீங்களே சொல்லுங்கள்!

பெற்றோர்கள், ஜாக்கிரதை!

நாடோடி

[குறிப்பு: இக் கட்டுரையில் வரும் விஷயங்களுக்கு நான் துளிக் கூடப் பொறுப்பாளி யல்ல. இக் கட்டுரையின் முழுப் பொறுப்பும் இரண்டு மாதங்களுக்கு முன்னர்தான் பிறந்த என் பெண் அநுராதாவைச் சேர்ந்தது. அவள் தன் 'ங்கு'ப் பாஷையில் சொன்னதைத்தான் நான் எல்லோருக்கும் புரியும்படியான தமிழ்ப் பாஷையில் எழுதியிருக்கிறேன்.]

கல்கி வாசகர்களே! இரண்டு வாரங்களுக்கு முன்பாக என் தகப்பனார் ரொம்பப் பிரமாதமாக "வைத்தியர்கள், ஜாக்கிரதை" என்று ஒரு கட்டுரை எழுதினாரே, ஞாபகம் இருக்கிறதா? ஆனால் வைத்தியர்களைவிட நாம் கண்டு ஜாக்கிரதையாக இருக்க வேண்டிய ஆசாமிகள் யாராவது உண்டென்றால் அது இந்தப் பெற்றோர்கள் தான் என்று என் பொக்கை வாயால் கூசாமல் கூறுவேன். அப்பா! இந்தப் பெற்றோர்களிடம் அகப்பட்டுக் கொண்டு நான் படும் அவஸ்தையைச் சொல்லி முடியாது. ஒவ்வொரு சமயம் இந்தப் பெற்றோர்களை நினைக்கும்போது குழந்தைகளைப் படைத்த இந்தப் பிரம்மன் ஏன் இந்தப் பெற்றோர்களையும் படைத்தான் என்று தோன்றுகிறது.

வேறு ஒன்றும் வேண்டாம், முதலில் இந்தப் பெயர் விஷயத்தை எடுத்துக் கொள்ளுங்கள்! நான் பிறந்து இரண்டு மாதங்களுக்கு மேல் ஆகப் போகிறது. ஆனால் எனக்கு என்ன பெயர் என்பது இன்னும் நிச்சயமாக வில்லை. ஒரு நாளைக்கு எங்கப்பா என்னை அநுராதா என்று கூப்பிடுகிறார். அடுத்த நாளே நிர்மலா என்று அழைக்கிறார். எனக்கு எந்தப் பெயருக்கு நாக்கை நீட்டுவது என்றோ, ஒரு பொக்கைவாய்ச் சிரிப்பு சிரிப்பது என்றோ தெரியவில்லை.

அப்பாதான் இப்படி என்றால் அம்மா அதற்குத் துளிக்கூடச் சளைத்தவளல்ல. என்னைப் பார்க்க அவள் சிநேகிதிகள் எல்லாம் தினம் ஒருத்தியாக வந்து கொண்டிருக்கிறார்கள். "படித்த பெண்கள்" என்று எங்கப்பா போன வாரம் ஒரு கட்டுரை எழுதினாரே, அதில் வரும் பெண்களைப் போலவே எல்லாரும் இருக்கிறார்கள். ஒவ்வொருத்திக்குக் காது இருக்கிறதா என்பதே சந்தேகமாய் இருக்கிறது. காது இருக்கிறது அவர்களுக்கு அவமானமாக இருக்கிறதோ, என்னமோ, எல்லாப் பெண்களும் தலை மயிரால் தங்கள் காதை மூடிக் கொண்டிருக்கிறார்கள்.

இந்தப் படித்த பெண்கள் ஒவ்வொருத்தியும் எனக்கு என்ன பெயர் என்று எங்கம்மாவைக் கேட்கிறார்கள். அம்மா என்ன பெயர் சொன்னாலும் அவர்களுக்குக் கர்நாடகமாக இருக்கிறது. உடனேயே முகத்தைச் சுளித்துக் கொண்டு, தங்கள் மோவாக் கட்டையைத் தோள் பட்டையில் ஒரு இடி இடிக்கிறார்கள். "ஐயேடி!" என்று அங்கலாய்க்கிறார்கள். உடனேயே எங்கம்மா என் பெயரை மாற்றி வாயில் நுழையாத பெயர் கொடுத்து வருகிறாள். அடுத்த நாளே இந்தப் பெயர் போய் இன்னொரு பெயர் வருகிறது.

இப்படியாக அப்பாவும், அம்மாவும் மாறி, மாறி, தங்களுக்குத் தோன்றின பெயர்களை யெல்லாம் வைத்துக் கொண்டு போகிறார்களே யொழிய, துளியாவது, பெயரை வைத்துக்கொள்ளப் போகிறவளை அவளுக்குப் பெயர் பிடித்திருக்கிறதா, இல்லையா என்று ஒரு வார்த்தை கேட்போம் என்று கிடையாது. பெற்றோர்களின் கொடுமைக்கு இதைவிட வேறு என்ன அத்தாட்சி வேண்டும், கேட்கிறேன். பெற்றோர்கள் கொடுக்கும் பெயரை வைத்துக் கொண்டு பின்னால் அவஸ்தைப்படப் போகிறவள் நானா, அவர்களா? பின்னால் இந்தப் பெயரை நான் மாற்றிக் கொள்ள விரும்பினாலும், ஐந்து ரூபாயோ, பத்து ரூபாயோ கொடுத்தல்லவா மாற்றிக் கொள்ள வேண்டுமாம்?

இந்தக் கோபத்தை நான் என் பெற்றோர்கள் மீது காண்பிப்பதற்கு ஒரு நல்ல வழி கண்டுபிடித்து வைத்திருக்கிறேன். என்னைப் பார்ப்பதற்கு என் பெற்றோர்களின் சிநேகிதர்கள் அடிக்கடி வருகிறார்கள் அல்லவா? அவர்கள் வரும்போதெல்லாம் நான் சிரிக்க வேண்டும் என்று என் பெற்றோர்கள் எதிர்பார்க்கிறார்கள். நான் சிரித்து விட்டால் அவர்கள் படும் சந்தோஷம் சொல்லி முடியாது. ஆனால் எனக்கு என் பெற்றோர்கள் மீதுள்ள கோபத்



தைக் காண்பிப்பதற்காக, வேணுமென்றே அப்பொழுது என்று சிரிக்கவே மாட்டேன். விளக்கெண்ணெய் குடித்தவன்போல் முகத்தை வைத்துக் கொள்வேன். (ஏதோ எல்லாரும் எழுதுவது போல் இந்த வசனம் சொன்னேனே ஒழிய, உண்மையில் விளக்கெண்ணெய் எனக்கு மிகவும் ருசியாகவே படுகிறது.)

“சிரி சிரி” என்று அப்பா என் கையைப் பிடித்து ஆட்டுவார். “சிரி, சிரி” என்று அம்மா உதட்டைத் தட்டுவாள். “சிரி சிரி” என்று என் அத்தை பாரு கன்னத்தைப் பிடித்துக் கிள்ளுவாள். “சிரி, சிரி” என்று சித்தப்பா பாலு (அரட்டைக் கல்லி பாலுதான், வேறு யாரும் இல்லை.) கோணங்கிகள் எல்லாம் செய்து காண்பிப்பார்.

ஆனால் நான் இதற்கெல்லாம் ஒன்றும் மசிய மாட்டேன். பல்லைக் கடித்துக் கொண்டு (ஓஹோ! எனக்கு இன்னும் பல் வளரவில்லையோ! சரி, ‘உதட்டைக் கடித்துக் கொண்டு’ என்று வைத்துக் கொள்ளுங்களேன்?) சிரிக்காமலேயே இருப்பேன். அப்பொழுது பார்க்க வேண்டுமே எங்கப்பா முகத்தை! விளக்கெண்ணெய் குடித்தவர் முகம் எப்படி இருக்கும் என்று பார்க்க விரும்புகிறவர்கள், எங்கப்பா முகத்தைப் பார்த்தால் போதும்!

சிரிப்பு என்றதும் அழுகை வருகிறது, அதாவது என் அழுகை விஷயம் ஞாபகத்துக்கு வருகிறது.

இந்த என் பெற்றோர்களைப் போல அத்தனை அசட்டுப் பெற்றோர்கள் வேறு எங்காவது இருப்பார்களா என்பது சந்தேகம் தான். என்ன நீங்களே, சொல்லுங்கள், ஒரு குழந்தை அழுதால் எதற்காக அழுகிறான் என்று கூடக் கண்டு பிடிக்கத் தெரியாத பெற்றோர்கள் என்ன பெற்றோர்கள் என்று கேட்கிறேன்?

நான் பிறந்த முதல் மாதம் தொப்புள் புண் ஆறாமல் மிகவும் அவஸ்தைப் பட்டுக் கொண்டிருந்தேன். அப்பொழுது நடுவில் நடுவில் வலி பொறுக்காமல், அழுவேன். சில சமயங்களில் எங்கம்மா அதற்காகக் கண்ட மருந்தைப் போட்டு என்னைச் செய்யும் சித்திரவதை பொறுக்காமலும் அழுவேன். அழுதால், தொப்புள் புண் வலிக்கிறது, அதுதான் அழுகிறான் என்று தெரிந்துகொள்ள மாட்டார்களோ? அது தெரியாமல் எங்கப்பா, “குழந்தைக்குப் பசிக்கிறது போலிருக்கிறது. பால் கொடேன்” என்பார். அம்மாவும் உடனே அவசரம் அவசரமாகப் புட்டிப் பாலைக் கரைத்து எனக்குப் புகட்ட ஆரம்பிப்பாள். “இப்படியும் இருப்பார்களா, பெற்றோர்கள்!” என்று நான் சிரிப்பேன். இதைப் பார்த்துவிட்டு, “பார்த்தாயா! குழந்தைக்குப் பசி. அதுதான் அழுதிருக்கிறான். இப்பொழுது பால் உள்ளே சென்றதும் சிரிக்க ஆரம்பித்துவிட்டான்” என்பார் எங்கப்பா!

ஆனால் பால் குடித்ததனால் தொப்புள் புண் வலி அடங்கிவிடுமா? அதனால் நான் வந்ததை விடுவானேன் என்று கிடைத்த பாலை மடக், மடக் கென்று குடித்துவிட்டுக் கடைசியில் ‘வீல்’ என்று கதறி அழ ஆரம்பிப்பேன். வயிறு நிரம்பின பிறகும் அழுகிறானே, ஏதோ வேறு காரணத்துக்காகத்தான் அழுகிறான் என்று தெரிந்துகொள்ளவேண்டாமோ? அது தெரியாமல் எல்லாரும் சேர்ந்து என்னைக் கன்னு பின்னுவென்று திட்டுவார்கள். “அப்பா! நன்னு பால் குடிக்க அலைகிறான்! நான் முழுவதும் குடி என்றாலும் குடித்துக் கொண்டேயிருப்பான் போலிருக்கு” என்று பழிப்பார்கள். சித்தப்பா பாலு என்னைப் பார்த்து “பீப்பாய்” என்று கூப்பிடுவார். இருக்கட்டும், இன்னும் கொஞ்ச காலம் போனால் பேசத்தான் போகிறேன். அப்பொழுது பார்த்துக் கொள்கிறேன்!

நான் எதற்காக அழுகிறேன் என்று என் பெற்றோர்கள் தெரிந்து கொள்ளாததால் நான் தினம் அவதிப்படுகிறேன். நான் பசியால் அழும்போதெல்லாம் என் தொப்புள் புண்ணுக்கு மருந்து போடுகிறார்கள். நான் தூக்கத்தினால் அழும் போதெல்லாம் பாலைப் புகட்டுகிறார்கள். தொப்புள் புண் வலிக்கிறது என்று அழும் போதெல்லாம் என்னைத் தூங்க வைக்கிறார்கள்.

இத்தனையிலும் நான் அழுகை ஓய மாட்டேன். அவர்கள் நான் எதற்காக அழுகிறேன் என்று காரணம் கண்டு பிடிக்கும் வரை நான் எப்படி அழுகையை நிறுத்த முடியும்?

ஞாபகக் குறிப்புகள்



ஆராவமுதன்

ஜனங்கள் தங்கள் பெட்டி, படுக்கையுடன் காலை ஐந்து மணி முதல் ஸோல்ஜர்கள் நடமாடுமிடத்தில் உட்கார்ந்து கொண்டிருந்தார்களானால், அதுதான் சென்னை சென்ட்ரல் ஸ்டேஷன். அவர்கள் இரவு ஒன்பது மணி வண்டிக்குப் போகிறவர்கள்.

அநேகமாக உள்ளே ஒருவனும் இருக்க மாட்டான். அப்படி எவனாவது இருந்தாலும் அவன் நிம்மதியாகத் தூங்கிக் கொண்டிருப்பான். அந்த இடம்தான் அபாயச் சங்கு ஒலித்தவுடனே, விழுந்தடித்துக் கொண்டு ஓடிவந்து உயிர்களைக் காப்பாற்றும் ஏ. ஆர். பி. வார்டன்கள் இருக்குமிடம்!



பொதுஜனங்கள் அசுத்தம் செய்வதற்கென்றே கட்டப்பட்டிருப்பது தான் 'ஷெல்டர்'.

கும்பல் கும்பலாக, நவநாகரிக உடையுடனும், சாதாரண உடையுடனும், எல்லோரும் ஒரே திசையை நோக்கி நின்று கொண்டிருந்தார்களானால் அதுதான் பஸ் ஸ்டாண்டு! அங்கு அஷ்ட கோணல்களோடு கூடிய ஒரு இரும்புக் கம்பியில் எழுத்தே தெரியாத ஒரு இரும்புப் பலகை இருக்கும்.

இந்தக் கும்பலை ஏற்றிக்கொண்டு, கொஞ்ச தூரம் சென்ற பிறகு நின்று விடும் வண்டிதான் 'பஸ்.' அது கரியால் ஓடுகிறது என்பது பெயருக்குத்தான். ஆனால் அதைப் பிரயாணிகள்தான் தள்ளிக் கொண்டு போவார்கள்.

புளிமூட்டை மாதிரி ஜனங்களை அடைத்துச் செல்லும் வண்டி தான் 'டிராம்.' இந்த வண்டியும் பஸ் போல் நின்று விடும். ஆனால் இது நிற்பது எதிரே வரும் டிராம் வண்டிகளுக்கு வழி விடுவதற்காகத்தான்!



ஸோல்ஜரை ஏற்றிக்கொண்டு, மனிதனால் இழுத்துச் செல்லப்படும் வண்டிதான் 'ரிக்ஷா.'

உங்கள் ஜேபியிலிருக்கும் 'பர்ஸ்' திடீரென்று காணாமல் போய்விட்டால், நீங்கள் அப்பொழுது நிற்குமிடம் 'சைனா பஜார்.'

நீங்கள் இழந்த சாமானை எந்தக் கடையிலாவது பார்த்தீர்களானால், அதுதான் 'மூர் மார்க்கெட்.' காணாமற் போன சாமான் எதுவாயிருந்தாலும் இங்கே கிடைக்கும். கடையை விட்டு வரும் பொழுது, நீங்கள் வாங்கின சாமான் உங்கள் கையிலிருக்கிறதா என்று சற்றுப் பாருங்கள்.



ஒரு கையில் கயிறுடனும், மற்றொரு கையில் சிவப்பு 'அட்டை'யுடனும், பக்கத்தில் கோடாலியுடன் கூடிய மனிதனோடும் சென்னை வாசிகள் நின்று கொண்டிருந்தால், அதுதான் 'பயர்வுட் ரேஷன் டிப்போ.' இங்கு சர்வ கோணல்களோடு கூடிய சகலவிதமான கட்டைகளும் கிடைக்கும்.

ஒரு வீட்டில் எட்டுக் குடித்தனமிருந்தால் அதுதான் திருவல்லிக்கேணி.

கொசுத் தொந்தரவு அதிகமாக இருந்தால், அதுதான் மாம்பலம்.

வண்ணானே இல்லாத இடம்தான் வண்ணாரப்பேட்டை. ஸலூனே இல்லாத இடம்தான் அம்பட்டன் வாராவதி.

ராணுவ லாரிகள் வண்டிகள் மீது 'டாஷ்' கொடுக்கும் இடம் மவுண்ட்ரோட்.



புருஷனை ஆக்கி விட்டாய்? நாங்கள் எவ்வளவு சந்தோஷமா யிருக்கிறோம், பார்!” என்றான்.

மாலதி பெருமூச் செறிந்தாள். முகம் வாட்ட மடைந்தது. “இன்றையிலிருந்து உன் வேலையை நிறுத்து. அப்பொழுது தான் அவருக்கு உன் அருமை தெரியும்” என்றாள் அத்தை பெண்.

மறுநாள் காலையில் கோபாலன் எழுந்ததும் வழக்கத்திற்கு மாறாகக் குளிக்கும் அறையில் ஒன்றும் தயாராய் வைக்கவில்லை.



“... என்னை இனிமேல் கோபித்துக் கொள்ள மாட்டாயே?”

கோபாலனுக்கோ, ஆச்சரியமா யிருந்தது. “மாலதி, மாலதி!” என்று கூப்பிட்டுக் கொண்டே சமையலறைக்கு வந்தான்.

அப்பொழுதுதான் மாலதி காப்பி கலந்து கொண்டிருந்தாள். “எங்கே என் சீப்பு?” என்றான்.

“இதோ, வந்து தருகிறேன்” என்று புன் சிரிப்புடன் கூறினாள் மாலதி.

“இதைத்தானே நானும் எதிர்பார்த்தது” என்று அவள் கையிலுள்ள காப்பியை வெடுக்கென்று வாங்கிக் குடித்து விட்டு, “இன்று காப்பி ரொம்ப ஜோர்!” என்றான்.

“என்மேலெல்லாம் கொட்டிவிட்டீர்களே! புடவை எல்லாம் காப்பிக் கறையாகி விட்டதே!” என்றாள் மாலதி.

“உன் கையால் காப்பி சாப்பிடும் ஆனந்தத்தில் ஒன்றுமே தோன்றவில்லை. தினமும் மேஜைக் காப்பி சாப்பிட்டு அலுத்து விட்டது” என்றான் கோபாலன்.

மாலையில் வீடு திரும்பியதும் எதிரில் தலைவாரி நீட்டாக ட்ரெஸ் செய்துகொண்டு அழகாக மாலதி நிற்கவே, கோபாலனுக்கு ஒன்றுமே தோன்றவில்லை. “இது என்ன, நம்முடைய வீடுதானா? அப்படியானால் மாலதி ஏன் இப்படி ஒரே யடியாக மாறிப் போயிருக்கிறாள்! தேவிக்குக் கருணை பிறந்து விட்டதா என்மேல்?” என்றான்.

“என்மேல் தங்களுக்குக் கருணை பிறக்கக் கூடாதா?” என்றாள்.

“என்னைத்தான் உன் கை பொம்மையாக்கி விட்டாயே, மாலதி என்று உன்னை அழைக்கக்கூட உரிமை இல்லாமல்?” என்றான் கோபாலன்.

“பொம்மைக்குப் புத்துயிரளித்து விட்டேன். இனிமேல் கடமை இல்லை; பிரேமைதான்” என்றாள் மாலதி.

“பிரேமையா மாலதி!” என்று சொல்லிக் கொண்டே அவளைத் தூக்கி மேஜைமீது உட்கார வைத்தான் கோபாலன். அங்கே கிடந்த நாற்காலியை மேஜைக்கு அருகே இழுத்துப் போட்டு உட்கார்ந்து கொண்டு, “உன் மேல் படிப்புக்கு நான் இடையூறாக வந்தேன் என்று என்னை இனிமேல் கோபித்துக் கொள்ள மாட்டாயே?” என்று கேட்டான் கோபாலன்.

“படிப்பா? படிப்பு யாருக்கு வேண்டும்? பிரேமை யல்லவா வேண்டும்?”

“உன்னுடைய பிரேமை இன்று ஆபீஸுக்கு அரை மணி நேரமாகி விட்டது!”

“யாருடைய குற்றம் அது?”

“இருவருடையதும்தான்!” என்று சொன்ன கோபாலன் அடுத்த கணத்தில்,

“பிரேமையில் யாவும் மறந்தோம்!”

என்று பாட ஆரம்பித்து விட்டான். அவனுடன் மாலதியும் சேர்ந்து பாடினாள்.

இருக்கட்டும் என்று அவர் பழைய வீட்டி லேயே இருந்து வந்தார்.

கோபாலனும் மாலதியின் மனம் நோகும் படி ஒரு வார்த்தைகூடச் சொல்ல மாட் டான். காலையில் எழுந்து பல் தேய்ப்பது முதல் இரவு படுக்கும் வரையில் அவன் இஷ்டப்படியேதான்.

“பின் தூங்கி முன் எழும் பேதாய்!” என்று வள்ளுவர் கூறியதுபோல் கோபாலன் எழுந்திருப்பதற்கு முன்னாலேயே குளிக்கும் அறையில் பல்பொடி, சோப்பு, வெந்நீர் எல்லாம் தயாராய் வைத்திருப்பாள். அவன் குளித்து விட்டு உள்ளே வந்தால் போட்டுக் கொள்வதற்கு உடைகள், தயாராய் ஸ்டூலின்மேல் வைத்திருக் கும். உடுத்திக் கொண்டு மேஜையின் அருகில் சென்றால் கண்ணாடிக் கெதி ரில் சீப்பு, தைலம் வைத்திருக்கும். பக்கத்தில் தயாராய் ஆவி பறக்கக் காப்பி டபரா, டம்ளர் சகிதம் காட்சி அளிக்கும். “காப்பி ஆற்றுவதற்குப் பாத்திரம் கொண்டா!” என்று சொல்லுவதற்குக்கூட இடமில்லா மல் இருக்கும். “இனி சர்க்கரை கொண்டா!” என்று சொல்வ தற்குக்கூட இடமிருக்காது!

“என்ன? மாலதி! ஏன் இப்படி உடம்பைக் கெடுத்துக் கொள்ளு கிறாய்? வேலைக்காரர்கள் இல்லையா, இவைகளெல்லாம் செய்வதற்கு?” என்பான் கோபாலன்.

“உங்களுக்கு வேலைக்காரர்கள் செய்தால்தான் பிடிக்கும்போலிருக் கிறது. நான் செய்வது பிடிக்கவில்லை என்றால் விட்டு விடுகிறேன். மேலே படிப்பதற்குத்தான் எனக்கு உரிமை யில்லை; இதற்குக் கூட உரிமை கிடையாதா?” என்பாள் மாலதி.

“சே சே! உனக்கு இல்லாத உரிமை யாருக்கு? உன் கைகளெல்லாம் வேலை செய்து, செய்து வாடுகிறதே என்று சொன் னேன்” என்று அவளை அருகில் இழுத்துக் கொள்ளப் போவான் கோபாலன்.

“போதும், இந்தப் பரிகாசம்!” என்று மாலதி உள்ளே ஓடி விடுவாள்.

தன்னை மேலே படிக்க வைப்பான் என் பதற்காக மாலதி கொஞ்ச நாள் கோபால னுடன் பேசாமலே இருந்து பார்த்தாள். அப் பொழுதும் அவன் இடம் கொடுக்க வில்லை.

“இந்தக் கல்யாணம்தான் நமது படிப் பிற்கு இடையூறாக நேர்ந்தது. இவருடைய மனதை அறியாமல் நம்முடைய இஷ்டம் போல் படிக்க விடுவார் என்று ஏமாந்து போனேனே! அவருக்கு மேல் நான் படிக்கக் கூடாதாம். நான் படித்தால் அவருக் கென்ன?”—இந்தக் கோபத்தினா லேயே மாலதி கோபாலனிடம் ஜாஸ்தி பேசுவது கிடையாது. ஆனால், கோபால னுக்குச் செய்யும் வேலைகள் மாத்திரம் வழக் கம்போல் குற்றம் குறைசொல்ல முடியாமல் ஒழுங்காகவே நடைபெற்று வந்தன.



“... இனிமேல் கடமை இல்லை; பிரேமைதான்”

மாலதியின் அத்தை மகள் ஊரிலிருந்து வந்திருந்தாள். அவள் கணவனும் வந்திருந் தான். இருவரும் வெகு தமாஷாக இருப் பார்கள். அடிக்கடி மாலதியை அத்தை மகள் பரிகாசம் செய்வாள். “என்ன பக்தி, என்ன உருக்கம்! அகத்துக்காரருக்கு நீ இப்படி சிசுருஷை செய்தும் அவர் முகத்தி லாவது உன் முகத்திலாவது சந்தோஷத் தையே காணோமே! என்னைப் பார்: நான் அவருக்கு ஏதாவது செய்கிறேனா? அவரவர் களுக்குக் கை கால்கள் எதற்கு இருக்கிறது? நீ ஒரு பொம்மையைப் போலன்றோ உன்



பிரேமையில் மறந்தோம்

செல்லம்

மாலதி புக்ககம் வந்து வருடம் மூன்றாய் விட்டது. இப்பொழுது புக்ககம் வருமுன் இருந்த சந்தோஷம் அவளுக்கு இல்லை.

இத்தனைக்கும் அவளுக்கு மாமியார், நாத்தனார் பிடுங்கல் என்று ஒன்றும் கிடையாது.

கர்னாடகமாயில்லாமல் கோபாலனைக் காதல் மணமே செய்து கொண்டாள். காலேஜில் படிக்கும் போதுதான் அவள் கோபாலனைச் சந்திக்கும்படியான சந்தர்ப்பம் நேரிட்டது. ஒரு நாள் மாடியிலிருந்து மாலதி வேகமாகக் கீழே இறங்கிக் கொண்டிருந்தாள். அகஸ்மாத்தாகக் கால் ஸ்லிப்பரில் புடவை மாட்டித் தடுக்கவே, நாலைந்து படி கீழே உருண்டு விழுந்து மூர்ச்சையாய் விட்டாள். தற்செயலாக அங்கே வந்த கோபாலன் ஓடிப்போய் அவளை எடுத்து மூர்ச்சை தெளிவித்து, வேண்டிய சைத்தியோபசாரம் செய்து வாடகை மோட்டாரில் அவளை வீட்டில் கொண்டுபோய் விட்டான். அதிலிருந்து மாலதியின் தகப்பனாருக்குக் கோபாலனிடம் அறிமுகம் உண்டாயிற்று. மாலதிக்குக் காலேஜ் படிப்பு முடிந்ததும் மேலே இன்னும் படிக்க வேண்டுமென்று ஆசை இருந்தது. ஆனால் தகப்பனாருக்குக் கல்யாணம் செய்து விட்டுப் பிறகு மாப்பிள்ளை இஷ்டப்பட்டால் படிக்க வைக்கட்டும் என்று வரன் வேட்டையாடப் புறப்பட்டார். பெரிய பெரிய இடங்களிலிருந்து வரன்கள் வந்தன. எல்லாம் ஐ. ஸி. எஸ். ஸோம் கலெக்டருமாகத்தான் இருந்தது.



நீதிபதி:—நீ நகையைத் திருடியதாக இப்பொழுது பத்துப் பேர் சாட்சி சொல்கிறார்களே. நீ குற்றவாளி அல்ல என்று எப்படிச் சொல்கிறாய்?

கைதி:—பார்த்ததாகப் பத்துச் சாட்சிகள் தானே சொல்கிறார்கள்? அதைப் பார்க்காதவர்கள் பத்தாயிரம் பேரைக் கொண்டு வரத் தான் தயாராயிருக்கிறேன்!

மாலதியின் இஷ்டம் தெரியாமல் என்ன செய்கிறது?

கோபாலனும் காலேஜ் படிப்பை முடித்துக் கொண்டு மேலே படிக்க முடியாததால் ஒரு கம்பெனியில் அறுபது ரூபாய் சம்பளத்தில் அமர்ந்தான். அவர்கள் குடும்பம் சாதாரணமானதுதான். கோபாலன் மாலதியின்மேல் காதல் கொள்வது சாத்தியமில்லையென்றே ஒரு சகோதரியுடன் பழகுவதுபோல் பழகி வந்தான். ஒரு நாள் மாலதியே கோபாலனிடம் தன் அபிப்பிராயத்தை வெளியிட்டாள். கோபாலனால் நம்பவே முடியவில்லை. "இது நிச்சயம்தானா? விளையாட்டில்லையே!" என்றான்.

"உங்களிடம் என்னைத் தவிர வேறு யாருக்கு விளையாட இடம் உண்டு?" என்றாள் மாலதி.

தன் இஷ்டப்போல் மாலதி கோபாலனையே மணந்தாள். ஒரு விஷயத்தில் மாத்திரம் மாலதிக்கும் கோபாலனுக்கும் வருத்த மேற்பட்டது. "மேலே படிக்கக் கூடாது" என்று கோபாலன் மாலதியைத் தடுத்து விட்டான். அது முதல் மாலதி உற்சாக மிழந்தவளாகக் காணப்பட்டாள். கல்யாணமான புதிதிலிருந்த மனக்கோட்டை இடிய ஆரம்பித்தது.

★

கோபாலனும் மாலதியும் தனிக் குடித்தனம் செய்ய ஆரம்பித்தார்கள். அவர்களுக்குத் தனியாக ஒரு வீடு கட்டிக் கொடுத்தார் மாலதியின் தகப்பனார். சிறிசுகள் சந்தோஷமாக

காந்திஜி பக்த சபா - வெள்ளி விழா

(ஸ்தாபிதம்: 1919)

செயின்ட் மேரிஸ் ஹால்

30-9-44 முதல் 9-10-44 வரை (பத்து தினங்கள்)

30-9-44 சனிக்கிழமை மாலை 5-30 மணிக்கு

கானகலாதர ஸ்ரீ மதுரை மணி ஐயர் — பாட்டு
திருவாங்கூர் சமஸ்தான வித்வான் ஸ்ரீ ராஜமாணிக்கம் பிள்ளை — பிடில்
குற்றாலம் சிவ வடிவேல் பிள்ளை — மிருதங்கம்
மதராஸ் ஸ்ரீ வேணு நாயக்கர் — கஞ்சிரா

1-10-44 ஞாயிற்றுக்கிழமை மாலை 4-30 மணிக்கு

இசைவாணி வசந்த குமாரி — பாட்டு
ஆர். என். கோபால கிருஷ்ணன் — பிடில்
தஞ்சாவூர் கிருஷ்ணமூர்த்தி ராவ் — மிருதங்கம்

1-10-44 ஞாயிற்றுக்கிழமை மாலை 6-30 மணிக்கு

சங்கீத வித்வான் சித்தூர் சுப்ரமண்யம் பிள்ளை (தக்க பக்க வாத்தியங்களுடன்) பாட்டு

(காந்திஜி பிறந்த தினம்) 2-10-44 திங்கட்கிழமை மாலை 6-10 மணிக்கு

சங்கீத ரத்னாகர அரியக்குடி ராமானுஜ அய்யங்கார் — பாட்டு
மைசூர் சமஸ்தான வித்வான் டி. சௌடையா — பிடில்
திருவாங்கூர் சமஸ்தான வித்வான் பாலக்காடு மணி ஐயர் — மிருதங்கம்
திருவாங்கூர் ஆஸ்தான வித்வான் பழனி சுப்ரமண்யம் பிள்ளை — கஞ்சிரா

3-10-44 செவ்வாய்க்கிழமை மாலை 6-10 மணிக்கு

சங்கீதபூபதி மஹாராஜபுரம் விஸ்வநாத ஐயர் — பாட்டு
மைசூர் சமஸ்தான வித்வான் டி. சௌடையா — பிடில்
திருவாங்கூர் ஆஸ்தான வித்வான் பழனி சுப்ரமண்யம் பிள்ளை — மிருதங்கம்
சென்னை வில்வாத்திரி அய்யர் — கடம்

4-10-44 புதன்கிழமை மாலை 6-10 மணிக்கு

திருவாங்கூர் சமஸ்தான வித்வான் ஜி. என். பால சுப்ரமண்யம் — பாட்டு
மைசூர் சமஸ்தான வித்வான் டி. சௌடையா — பிடில்
திருவாங்கூர் சமஸ்தான வித்வான் பாலக்காடு மணி அய்யர் — மிருதங்கம்
சென்னை வேணு நாயக்கர் — கஞ்சிரா

5-10-44 வியாழக்கிழமை மாலை 6-10 மணிக்கு

பால வேணுகான டி. ஆர். மஹாலிங்கம் — புல்லாங்குழல்
திருவாங்கூர் சமஸ்தான வித்வான் ராஜமாணிக்கம் பிள்ளை — பிடில்
திருவாங்கூர் ஆஸ்தான வித்வான் பழனி சுப்ரமண்யம் பிள்ளை — மிருதங்கம்

6-10-44 வெள்ளிக்கிழமை மாலை 6-10 மணிக்கு

இசையரசு எம். எம். தண்டபாணி தேசிகர் — பாட்டு
சென்னை கோவிந்தசாமி நாயகர் — பிடில்
சென்னை எஸ். வி. எஸ். நாராயணன் — மிருதங்கம்
சென்னை வில்வாத்திரி ஐயர் — கடம்

7-10-44 சனிக்கிழமை மாலை 5-30 மணிக்கு

என். நடராஜ், ஏ. ஆர். சகுந்தலா அவர்கள் கோஷ்டியாரால் இந்திய நடனங்கள்

8-10-44 ஞாயிறுக்கிழமை மாலை 5-30 மணிக்கு

கான சரஸ்வதி டி. கே. பட்டம்மாள் — பாட்டு
திருவள்ளூர் சுப்ரமண்யம் — பிடில்
கல்பாத்தி ராமநாத ஐயர் — மிருதங்கம்

வி. வி. சடகோபன், கே. பி. சுந்தராம்பாள், என். சி. வஸந்த கோகிலம்
இவர்களும் கலந்து கொள்ளுவார்கள்

9-10-44 திங்கட்கிழமை மாலை 6-30 மணிக்கு

சபை அங்கத்தினர் 12-வயதுக்குட்பட்ட சிறுவர் சிறுமியரால் கிருஷ்ணார்ஜுன நாடகம்

புரோகிராம் சம்பேசித மாறுதலுக்குட்பட்டது.

சீஸன் டிக்கெட்டுகள் (10-9-44) முதல் அடியில் கண்ட இடங்களில் கிடைக்கும்.

1. காந்திஜி பக்த சபா, 72, ஆசாரப்பன் தெரு, ஜார்ஜ் டவுன். 2. ஹோட்டல் ஸவெரெஸ்ட், பெரியமேட், பார்க் டவுன். 3. வி. என். குமாரசுவாமி அய்யர், தண்டையார்பேட்டை. 4. துர்க்கா பவுண்டரீ, அம்மன் கோவில் தெரு, கொண்டித்தோப்பு.

கலைவள்ளல் ஸி. கே. சுந்தரம், தலைவர். டி. எஸ். எம். நாயுடு, காரியதரிசி.

காலக்ஷேபம்

நல்ல யோசனை

போலீஸ்காரன் (திருடனைப் பார்த்து):—டேய், உன்னை ஓடிப் பிடித்ததில் என் தொப்பி எங்கேயோ விழுந்து விட்டதடா!

திருடன்:— சாமி, நீங்க இங்கேயே இருங்க. நான் போய்த் தேடி எடுத்துக் கொண்டு வருகிறேன்.

போலீஸ்காரன்:—டேய், என்னை ஏமாந்தவனா பார்க்கிறாய்? நீ இங்கேயே இருடா; நான் போய்த் தேடி எடுத்து வருகிறேன்.

—பி. கணேசன்.

★

சோதனைக்குத் தயார்!

உபாத்தியாயர்:—கப்சிப்! ஒருவரும் சத்தம் செய்யக் கூடாது. கீழே விழும் ஊசியின் சத்தந்தான் கேட்க வேண்டும்.

ஒரு மாணவன் (அமைதி ஏற்பட்டபின் உரக்க):—எல்லோரும் தயார்; ஊசியைப் போடுங்கள், ஸார்!

—கே. எம். அப்துல் கரீம்.

★

பூர்த்தி

வக்கீல்:—நான் 'அலிபாபாவும் நாற்பது திருடர்களும்' என்னும் கதையைப் படிக்கும் பொழுதெல்லாம் கொள்ளைக்காரனாகவேண்டுமென்று ஆசைப்பட்டதுண்டு.

நண்பர்:—நீங்கள் அதிர்ஷ்டசாலி, ஸார்! உங்கள் எண்ணம் பூர்த்தியாகி விட்டது.

—எஸ். கே. ஆர்.

★

புரிந்து கொண்டது!

வேலைக்காரன்:—ஐயா! மீசை தாடியுடன் ஒரு வியாபாரி வந்திருக்கிறார்.

எஜமான்:—சரி; அவரிடம் எனக்கு மீசையும் தாடியும் வேண்டாமென்று சொல்லிவிடு.

—கே. வி. ரமணன்.

★

முன் ஜாக்கிரதை

அம்மா:—என்னடா அம்பி, இந்த முரட்டுக் கோட்டையும் நிஜாரையும் போட்டுக் கொண்டு பள்ளிக்கூடம் புறப்படுகிறாய்?

அம்பி:—இன்றைக்குப் பாடம் படிக்கவில்லை, அம்மா! —எம். ஆர். சரோஜா.

விடாக்கண்டர்

வீட்டுக்காரர்:—நம்ப வீட்டிலெல்லாம் நீங்க சாப்பிடுவீங்களா?

விருந்தாளி:—வேண்டாமென்றால்தான் நீங்க விடப் போறீங்களா?

—பி. கே. கிருஷ்ணமூர்த்தி.

★

இவ்வளவுதானே!

ராமய்யர் வண்ணான் வீட்டிற்கு வேகமாக வந்து, அவனைப் பார்த்துச் சற்றுக் கோபத்துடன், "ஏண்டா, நீ துணிகளை வாடகைக்கு விடுகிறாயாமே! வாஸ்தவந்தானா?"

வண்ணான் (பயத்துடன்):— இ....ல்....லை... சாமி....ஆ...மாம்......

ராமய்யர்:—அட மடையா!...என்னிடம் ஏன் இது வரையில் சொல்லவில்லை...ஹூம்... போனால் போகிறது......இனிமேல் எனக்கும் வாடகைக்குத் தர வேண்டும்; தெரிந்ததா?

—ரா. சாம்பமூர்த்தி.

★

நேரம் தவறாமை!

தலைவர்:—இன்று இந்தக் கூட்டத்தில் 'நேரம் தவறாமை' என்பதைப் பற்றிப் பிரசங்கம் செய்வதாக ஒப்புக்கொண்டுள்ள ஸ்ரீ சபாபதி முதலியார் கூட்டத்திற்கு வருவதற்குச் சற்று நேரமாகும். ஆகையால் சபையோர்கள் அதுவரை பொறுத்திருக்கும்படி கேட்டுக் கொள்கிறேன். —கா. கி.

★

நல்ல பெயர்

விருந்தாளி:—இந்தக் கடிகாரம் போகவில்லை போலிருக்கிறதே!

வீட்டுக்காரர்:—ஆமாம்; அதற்கும் பெயர் 'விருந்தாளி' என்று நான் வைத்திருக்கிறேன்.

விருந்தாளி:—ஏன்?

வீட்டுக்காரர்:—எங்கள் வீட்டுக்கு வந்த விருந்தாளிகளும் நகருவதில்லை. அந்தக் கடிகாரமும் போவதில்லை. —மங்களம்.

★

உள் மர்மம்

பிச்சைக்காரன்:—அம்மா! பழையது கிழயது இருந்தா கொஞ்சம் போடம்மா!

வீட்டுக்காரர்:—ஒன்றும் இல்லை; போ!

பிச்சைக்காரன்:—அம்மா கொண்டு வந்து போடுவாங்க சாமி!




வீட்டுக்காரர்:—போடா! எனக்குத் தெரியாமே வீட்டிலே பழையது இருந்துவிடப் போகிறதாக்கும்; நான்தானே கடைசியிலே போட்டுண்டு சாப்பிடுபவன்?

—ஜி. கிருஷ்ணமூர்த்தி.

ளென்றும் வைத்தியர் கர்வம் கொண்டிருந்தார்.

ஒரு நாள் வைத்தியர் தம்முடைய குறையை மந்திரியிடம் வெளியிட்டார். அவருடைய பேராசையைத் தெரிந்துகொண்ட மந்திரி, "ஆகட்டும், பார்க்கிறேன்" என்று சொல்லி அவரை அனுப்பி விட்டார்.



"ஏன்டா, 'பென்ஸில் சீவக் கத்தி வேணும் கத்தி வேணும்' என்று நச்சரித்தாயே, இதற்குத்தானா?"

அவருடைய பதில் வைத்தியருக்குக் கொஞ்சம் கூடப் பிடிக்கவில்லை. "சமயம் வரும் போது பார்த்துக் கொள்கிறேன்!" என்று கோபத்துடன் சொல்லிக் கொண்டே அவர் போய்விட்டார்.

ராஜாவுக்கு ஒரே பிள்ளை. ஒரு நாள் அவன் அரண்மனையில் பாட்டுக் கேட்டுக் கொண்டிருந்தபோது, அவனுக்கு அசாத்தியமான தலைவலி வந்து விட்டது. அதற்குப் பிறகு நடந்த நாட்டியத்தை அவன் பார்த்தானோ இல்லையோ, உடனே அவனுக்குக் கண் வலியோடு ஜுரமும் வந்து விட்டது.

அடுத்த நிமிஷமே அரண்மனை வைத்தியர் வரவழைக்கப் பட்டார். "சமயம் வரவேண்டும்" என்று காத்துக் கொண்டிருந்த வைத்தியருக்குச் சந்தர்ப்பம் வாய்த்தது.

"மகாராஜா! ஒரே வாரத்தில் தங்கள் குமாரனுக்கு வந்திருக்கும் ஜுரத்தை நான் நிறுத்தி விடுகிறேன். ஆனால் ......" என்று ஆரம்பித்தார் பேராசை வைத்தியர்.

"ஆனால் என்ன? சொல்லு சீக்கிரம்!" என்றார் மகாராஜா.

"ஜுரம் நின்றதும் யுவராஜாவின் எடைக்கு எடை எனக்குப் பொன் கொடுக்க வேண்டும்."

இதைக் கேட்டதும், அரசனுக்குக் கோபம் கோபமாய் வந்தது. "சமய சந்தர்ப்பம் தெரியாமல் இப்படிக் கேட்கிறானே, இவனுக்கு எப்படிப் புத்திகற்பிக்கலாம்?" என்று எண்ணிக் கொண்டே அவர் மந்திரி இருந்த பக்கம் திரும்பினார். மந்திரி சிறிது நேரம் யோசித்து விட்டு, "அப்படியே ஆகட்டும்; மருந்தைக் கொடும்" என்றார் வைத்தியரிடம்.

வைத்தியர் சொன்னபடி ராஜகுமாரனின் ஜுரம் ஒரே வாரத்தில் நின்றுவிட்டது. ராஜாவுக்கு ரொம்ப ரொம்ப சந்தோஷம்.

வைத்தியர் மந்திரியைப் பார்த்து, "பொன் எங்கே?" என்று கேட்டார்.

"இதோ!" என்று சொல்லிக் கொண்டே மந்திரி, அங்கிருந்த ஒருவனிடம் தராசைக் கொண்டுவரச் சொன்னார்.

ஒரு தட்டில் ராஜகுமாரனை உட்கார வைத்து, மற்றொரு தட்டில் பொன்னைக் கொட்டச் சொன்னார் மந்திரி. என்ன ஆச்சரியம்! தட்டில் நின்ற பொன், அந்தப் பேராசை வைத்தியருக்குச் சாதாரணமாகக் கிடைத்திருக்கக் கூடிய சன்மானத்தை விடக் குறைவாகவே இருந்தது. அவ்வளவு தூரம் இளைத்துப் போயிருந்தான் ராஜகுமாரன்!



வைத்தியர் முகத்தில் அசடு வழிந்தது. ராஜா மந்திரியின் தந்திரத்தை மிகவும் மெச்சினார். தம் தவறை உணர்ந்த பேராசை வைத்தியர், தம்மை மன்னித்து விடும்படி அரசனை வேண்டிக் கொண்டார்.



பாப்பா மலர்

பேராசை வைத்தியர்

"ராஜ்"



ஒரே ஒரு ஊரில் ஒரே ஒரு ராஜா. அந்த ராஜா அரண்மனையில் மந்திரி பிரதானிகளோடு, பாடகர்கள், நாட்டியக்காரிகள், ஜோஸ்யம் சொல்பவர்கள் முதலியோரும் இருந்தனர். பாடகர்களின் பாட்டைக் கேட்கும் போது சில சமயம் அரண்மனையிலுள்ளவர்களுக்குத் தலைவலி வந்து விடும்; நாட்டியத்தைப் பார்க்கும் போது கண்வலி வந்து விடும்; ஜோஸ்யர்களின் பலனைக் கேட்கும் போது சிலர் காது வலியால் துடியாய்த் துடித்து விடுவார்கள். அதற்காக, மந்திரி ஓர் அரண்மனை வைத்தியரை ஏற்பாடு செய்திருந்தார்.

அரண்மனை வைத்தியருக்கு மாதந்தோறும் ராஜா நிறையச் சன்மானம் கொடுத்துக் கொண்டுதான் வந்தார். ஆனாலும் அது வைத்தியருக்குத் திருப்தி யளிக்கவில்லை. அரண்மனையில் எல்லோருடைய வேலையைக் காட்டிலும் தம்முடைய வேலைதான் பெரிதென்றும், தமக்குத்தான் எல்லோரையும் விட அதிகமாகச் சன்மானம் கொடுக்க வேண்டுமென்றும், தம்மால்தான் அரண்மனையிலிருப்பவர்களெல்லாம் சுக ஜீவிகளாயிருக்கிறார்க

“காமதேனு”

வனஸ்பதி & சுத்தம் செய்யப்பட்ட ஆயில்

•

தற்போதைய விலைகள்

37 பவுண்டு டின்	....	ரூ. 23-4-0
10 பவுண்டு டின்	....	ரூ. 7-4-0
5 பவுண்டு டின்	....	ரூ. 4-0-0
1 பவுண்டு டின்	....	ரூ. 0-14-0

சுத்தம் செய்யப்பட்ட ஆயில்

37 பவுண்டு டின்	....	ரூ. 22-0-0

•

மேற்படி விலைகளுக்கு எந்த ரயில்வே ஸ்டேஷனிலும் இலவச டெலிவரி செய்யப்படும்.

விற்பனை வரி பிரத்தியேகம்.

லோகல் டிப்போக்களில், விற்பனை வரி, முனிஸிபல் வரி, உள்நாட்டு வரி முதலிய காரணங்களால் இவைகளின் விலை சிறிது அதிகமாகலாம்.

தைரியம் படைத்த போர் வீரர்களில் அநேகர் இந்தியாவின் நர்ஸ்களுக்காக தம் உயிரையும் தத்தம் செய்யக் கடமைப் பட்டவர்கள்

சில கேஸ்கள் சாதாரணமானவை. சொஸ்தமடைந்து சில நாட்களுக்குள் தத்தம் யூனிட்டுகளுக்குத் திரும்பக் கூடியவர்களாகின்றனர். ஆனால் கோரமாகக் காயமடைந்த சிலர், வாழ்விற்கும் சாவிற்கும் இடையில் தத்தளித்துக் கொண்டிருக்கின்றனர். அந்நிலையில் ஏ. என். எஸ். நர்ஸ்களின் எல்லையற்ற பொறுமையும் திறம்பட்ட தேர்ச்சியும்தான் அவர்கள் குணமடைய உயர்ந்த சகாயமாக இருக்கிறது. இந்த சேவை மிகவும் சிறந்தது. எந்த ஸ்திரீக்கும் உகந்தது. யுத்தத்தின் கோரம் அதிகமாக ஆக நர்ஸுகளின் தேவையும் அதிகரிக்கிறது. இத்தகைய அரிய சேவைக்குத் தாமே வந்துதவ உரிய சந்தர்ப்பம் இதுவே. முன் அனுபவம் அவசியமில்லை. வேலையில் சேருமுன் சிறு பயிற்சி அளிக்கப்படுகிறது. ஏற்கனவே நர்ஸ் வேலையில் தேர்ந்தவர்கள் நேரடியாக சேர்ந்து விடலாம். அனுபவ முன்னவர்களுக்குச் சம்பள உயர்வு அளிக்கப்படும். திருப்திகரமான சேவையின் முடிவில் சன்மானம் வழங்கப்படும். யோக்யதா பத்திரம் பெற்ற நர்ஸ்கள் ஐ. எம். என். எஸ். நிபந்தனைகளுக்குச் சம்மதமில்லாவிடில் விசேஷ நிபந்தனைப்படி ஏ. என். எஸ்.-ல் சேரலாம். மற்ற விவரங்களுக்கு உங்கள் டிவிஷனிலுள்ள லேடி ஸுப்பரின்டென்டென்ட், செயின்ட் ஜான் அம்புலன்ஸ் ப்ரிகேட், ஒவர்ஸிஸ்க்கு எழுதவும். இந்த விலாஸத்தை அறிந்து கொள்ள முடியாமல் போனால் டைரக்டர் ஜெனரல், இந்தியன் மெடிகல் சர்விஸ், நியூ டெல்லி என்ற விலாஸத்திற்கு எழுதுங்கள்.

ஏ. என். எஸ்.

(ஆக்ஸிலரி நர்ஸிங் சர்விஸ்)

இதில் சேர்ந்து இந்தியாவுக்குச் சேவை செய்யுங்கள்.



AAA. 993

யமகாதகர்!

அன்று கடைசி சீன். காதலர்கள் சந்திக்கும் கட்டம். அதைப் படம் பிடித்துவிட்டால் அநேகமாகப் படம் முடிந்துவிடும். டைரக்டரும் நிம்மதியாக இருப்பார். மேலும், சில நாட்களாகக் கண்ணை மூடிக்கொண்டிருந்த சூரிய பகவான், அன்று கண்களை விழித்துக் கொண்டிருந்தார். படமுதலாளியும் எப்படியாவது அன்று அந்தக் கட்டத்தைப் பிடித்துவிட வேண்டும் என்று குறியாய்க் குறித்துக் கொண்டிருந்தார்.

எல்லா நடிகர்களும் ஆஜராகி விட்டார்கள். கதாநாயகியாக நடிக்கும் வசுமதியை மட்டும் காணவில்லை. டைரக்டருக்கு இருப்பாகவே இல்லை. வசுமதி வீட்டிற்கு, 'டெலிபோன்' செய்தார்; ஆள் அனுப்பினார். என்னத்தைச் சொல்ல? வசுமதிக்கு நன்றாக ஜலதோஷம் பிடித்துக்கொண்டு தொண்டையைக் கட்டிக் கொண்டிருந்ததால் பேச முடியாமல் இருந்தது. அந்தப் பாழாய்ப் போன ஜலதோஷம் வசுமதியை இப்பொழுதுதானா பிடித்துக் கொள்ள வேண்டும்?

எல்லோரும் என்ன நடக்குமோ என்று வேர்க்க விருவிருக்க "உஸ், உஸ்" என்று உட்கார்ந்திருந்தார்கள். டைரக்டருக்குக் கோபம் கோபமாய் வந்தது. அதை அடக்கிக் கொள்வதற்காக அவர் அங்கு மிங்குமாக உலாவிக் கொண்டிருந்தார். அப்பொழுது காதலனாக நடிக்கப் போகும் நடிகர், வைத்த கண் வாங்காமல் அவரையே பார்த்துக் கொண்டிருந்தார். அப்பொழுது டைரக்டர் அவரைப் பார்த்து, "என்னைப் பாரும்; எப்படி நடக்கிறேன் என்று! இப்பொழுதாவது தெரிந்து கொள்ளும்: கோபத்தில் நடப்பது போல் நடிக்க வேண்டும் என்றால் இப்படித்தான் நடக்க வேண்டும். நன்றாய்ப் பார்த்துக் கொள்ளும்!" என்று இரைந்தார்.


அதைக் கேட்ட நடிகர் தலையைப் பலமாக அசைத்துக் கொண்டே மெள்ள அந்த இடத்தை விட்டு நழுவினார். திடீரென்று டைரக்டர் என்னமோ தீர்மானம் செய்து கொண்டவர் போல், தம் அறையை விட்டு வேகமாக வெளியேறினார். காரை எடுத்துக் கொண்டு கிளம்பினார். பலர் பல விதமாகப் பேசிக் கொண்டார்கள். "அடடா! நம்மை வீட்டுக்குப் போகச் சொல்லி விட்டு மனுஷன் போகக் கூடாதோ?" என்று எல்லோரும் வருத்தப்பட்டார்கள்.

டைரக்டர் கார் மறுபடியும் திரும்பி வந்தது. ஆனால் வசுமதியுடன் தான் வந்தார். வந்ததும், வராததுமாகக் காதலனாக நடிப்பவரைக் கூப்பிட்டார். சிறிது நேரம் சென்றது. டைரக்டர் நடுவில் வர, அவர் இரு பக்கங்களிலும் காதலனும் காதலியும் வர, 'செட்'டில் நுழைந்தார்கள். 'மைக்'கைக் கொண்டு வந்து காதலியின் முன் நிறுத்தினார்கள். "மானிடர்" என்று ஒருவர் கத்தினார். உடனே வசுமதி, "நாதா!" என்று கூப்பிட்டாள். எல்லோரும் எருமைக் கன்றுதான் கத்துகிறதாக்கும் என்று நினைத்தார்கள். தொண்டை அப்படிப் பாறையாய்க் கட்டிப்போயிருந்தது அவளுக்கு.

உடனே காதலனாக நடிப்பவர், "ஆ! என்னருமைக் காதலி! என்னை நினைத்து அழுது, அழுது உன் தொண்டை கட்டிக் கொண்டதோ!" என்று ஆரம்பித்தார்!

"ஆமாம்!" என்றாள் வசுமதி தன் அற்புத மகிஷக் குரலில்!

இதைக் கேட்ட எல்லோரும் 'கொல்' லென்று சிரித்தார்கள். டைரக்டர், "இந்த ஜலதோஷம் என்னை என்ன செய்ய முடியும்?" என்பதுபோல், ஒரு புன்சிரிப்புடன் வசுமதியை நோக்கினார். சூரியனும் இந்த யமகாதக டைரக்டருக்குப் பயந்தவன் போல், படப்பிடிப்பு முடிந்ததும் மேகத் திரைக்குள் மறைந்தான்!



"அம்மா! இதை அக்காவுக்குப் போட்டால் எவ்வளவு அழகாயிருக்கும்? அவளுக்கும் ஒரு ஜோடி பண்ண வேண்டும்" என்றாள்.

அதைக் கேட்ட சாரதாவின் மனம் வேதனையடைந்தது. "மீனாவுக்குத்தான் என்ன பாசம்!" என்று அவள் ஆச்சரியப்பட்டாள். அப்பொழுது தன்னையும் மறந்து குழந்தையின் முகத்தை சிறிது நேரம் பார்த்துக் கொண்டிருந்த அவளுக்குத் திடீரென்று ஒரு பயம் உண்டாயிற்று. ராதையைப் போல் தானும் இறந்து போய்விட்டால், "மீனாவின் கதி என்ன ஆகும்?" என்று அவள் எண்ணிப் பார்த்தாள். "தன்னைப் போலவே மீனாவுக்கும் ஒரு சித்தி வாய்த்தால்?" — இதை நினைத்ததும் அவள் உடம்பு ஆடிற்று. ஆத்திரத்தினால் அலமுவுக்குச் செய்த துரோகம் அவள் மனதைப் பிளந்தது.

"அலமு! என் அவசரப் புத்தியினால் உன்னை வேண்டுமென்றே ஒரு ஏழையின் கழுத்தில் கட்டிவேனே, என்னைப் போல் துரோகி யாராவது இருப்பார்களா? அலமு! நீ என்ன நிலைமையில் இருக்கிறாயோ! என்னை எவ்வளவு சபிக்கிறாயோ? — என்னை நீ எவ்வளவு தூஷித்தாலும் ஏற்றுக் கொள்ளுகிறேன்!" என்று அவள் தனக்குத் தானே சொல்லிக் கொண்டாள்.

ஒருநாள் சாரதா கணவனைப் பார்த்து, "குழந்தை அலமு ஏன் கடிதமே போடவில்லை?" என்று கேட்டாள்.

"அந்தத் துக்க சமாசாரத்தைச் சொல்லுவானேன், நீயும் வருத்தப்படுவானேன் என்று இத்தனை காலும் சொல்லவில்லை. அவள் கணவனுக்கு வேலைகூடப் போய்விட்டதாம். குழந்தை ரொம்ப ரொம்பக் கஷ்டப்படுகிறாளாம்" என்றார் வாஸு அய்யர்.

அதைக் கேட்ட சாரதாவின் மார்பு வெடித்து விடும்போலிருந்தது. குற்றம் செய்த நெஞ்சம் அவளை வதைத்தது. குமுறிக்கொண்டு வந்த அழுகையை அடக்கிக் கொண்டாள். "குழந்தையைப் போய் ஒருதடவையாவது பார்த்து விட்டு வரலாம், வாருங்கள்" என்று தன் கணவனை அழைத்தாள் சாரதா.



"இங்கே பாரு! அழுதாயோ, உன்னைப் பூச்சாண்டிகிட்டம் பிடித்துக் கொடுத்து விடுவேன்!"

அய்யரும் அதற்குச் சம்மதித்தார். சாரதாவுக்குக் குதூகலம் தாங்க முடியவில்லை. அலமுவுக்கு விதம் விதமாகப் புடவைகளும், பட்சணங்களும் தயார் செய்து கொண்டாள்.

ஸ்டேஷனுக்கு வந்திருந்த சேகர், அவர்களை வரவேற்று, வண்டியில் அழைத்துக் கொண்டு போனான்.


ஒரு அழகிய பங்களா வாசலில் வண்டி வந்து நின்றது. காவற்காரன் கேட்டைத் திறந்தான். உள்ளே நுழைந்ததும் அலமு, "அம்மா, மீனா!" என்று ஓடி வந்தாள். அலமுவைப் பார்த்த சாரதாவுக்கு ஒன்றும் புரியவில்லை. அவளைப் பார்த்த சந்தோஷம் ஒருபுறம், அவள் அணிந்திருந்த நகைகளையும் புடவையையும் பார்த்த குழப்பம் ஒரு புறமுமாக அவள் திகைத்து நின்று விட்டாள்.

மீனா, அலமுவைக் கட்டித் தழுவிக் கொண்டு, "அக்கா! உன்னை எப்பொழுது பார்க்கப் போகிறேன் என்று துடி துடித்துக் கொண்டிருந்தேன். இந்த பங்களா, கார், நகைகள் எல்லாம் உங்களுடையதுதானா, அக்கா? எவ்வளவு நன்றாயிருக்கிறது!" என்றாள் குழந்தை.

மீனாவின் வார்த்தையையும் சித்தியின் திகைப்பையும் பார்த்த அலமு சாரதாவைத் தனியாக அழைத்துப் போய், "அம்மா! அப்பா இன்னுமா உங்களுக்கு உண்மையைச் சொல்லவில்லை? கல்யாணத்தின்போது அப்பா என்ன காரணத்துக்காகவோ, 'இவர்கள் ஏழைகள்' என்று பெரிய பொய்யாகச் சொல்லி வைத்தார். இங்கு வந்துதான் எனக்கு உண்மை தெரிந்தது" என்றாள்.

சாரதாவால் அதற்குமேல் நிற்க முடியவில்லை. துக்கம் தாங்காமல் அழுகை குமுறிக்கொண்டு வர அருகில் இருந்த கணவன் காலில் விழுந்தாள். "என்னை மன்னிக்கவேண்டும்; என் கெட்ட எண்ணத்தை எப்படியோ தெரிந்துகொண்டு விட்டீர்கள்" என்று கதறினாள்.

"நான் மன்னிக்க வேண்டியதில்லை சாரதா! எழுந்திரு. உன் மனமே உன்னை மன்னித்துவிடும்" என்றார் வாஸு அய்யர்.



டும் ரொம்பப் பொருத்தமாக இருக்கிறதென்றும் அவர் தெரிவித்தார். அதைக் கேட்ட சாரதா சந்தோஷம் தாங்காதவளாய், "அதற்கென்ன, அலமு மகா அதிர்ஷ்டக்காரி. அவள் போகிற இடம் பொங்கிப் பொலியும். சீக்கிரம் முகூர்த்தம் வைத்துவிடுங்கள்" என்றாள்.

அலமுவுக்கு நிச்சயிக்கப்பட்ட வரன் ஏழை என்று சொன்னதும், தன் மனைவியின் முகத்தில் உண்டான மகிழ்ச்சியைப் பார்த்த அய்யருக்கு மனம் கலங்கியது. "ராதை இருந்தால் தன் பெண்ணின் வரன் ஏழை என்று சொன்னதும் இப்படிச் சந்தோஷப் படுவாளா?" என்று அவர் மனம் எண்ணிற்று. தனக்குக் கணவனாக வருகிறவன் ஏழையாயிருந்தாலும் நல்ல குணமுள்ளவன் என்பதைக் கேட்க அலமுவுக்கு மிகவும் சந்தோஷமாயிருந்தது. அவன் எப்படி யிருப்பான்? எப்படிப் பேசுவான் என்பதைப்பற்றியெல்லாம் அவள் எண்ணி எண்ணி ஆனந்தப்பட்டாள்.

சந்திரசேகரனும், அவன் தாயாரும் பெண்ணைப் பார்க்க வந்தார்கள். சேகரின் தாயார் லக்ஷ்மி அம்மாள் ஏழ்மை நிலையில் இருந்தாலும் அவள் முகத்தில் களை சொட்டிற்று. சேகரைப் பார்த்த அலமுவுக்கு எல்லையில்லாத குதூகலம் உண்டாயிற்று. அவர்களுடைய கண்கள் இரண்டு மூன்று தடவை சந்தித்தன. அலமு புளகாங்கிதமடைந்தாள்.


கல்யாணம் முடிந்ததும் லக்ஷ்மி அலமுவையும் தங்களோடு அழைத்துக் கொண்டு போவதாகச் சொன்னாள். அய்யரும் ஆக்ஷேபிக்காமல் அலமுவை அவர்களோடு அனுப்பி வைத்தார். "சனி விட்டது; ரயில் செலவு மிச்சம்!" என்று திருப்தி யடைந்தாள் சாரதா.

ஆனால் மீனுவோ அலமு போகும் சமயத்தில், "அக்கா! அக்கா! என்னைத் தனியாக விட்டு விட்டுப் போகிறாயே, நன்றாயிருக்கிறதா?" என்று கலங்கினாள். அலமு கண்களில் நீர் ததும்ப, "மீனு, அழாதே! கொஞ்ச நாளில் வந்து விட்டுப் போகிறேன்" என்று அவளைச் சமாதானப்படுத்தினாள்.

★

அலமு புக்ககம் போய் மூன்று மாதம் ஆகி விட்டது. "அக்கா எப்பொழுது வரப் போகிறாள்?" என்று மீனு சாரதாவை நாள் தவறாமல் கேட்டுக்கொண்டே இருந்தாள்.

ஒரு நாள் சாரதா மீனுவுக்குப் புது மோஸ்தரில் வலை ஒன்று பண்ணினாள். அதைப் போட்டுக் கொண்டதும்,



கொஞ்சம் சுமார்தான். வாஸு அய்யர் அலமேலுவுக்கு வரன் பார்த்துக்கொண்டிருந்தார். அவருக்கு இப்பொழுதெல்லாம் ஆபீஸ் வேலையோடு, வீட்டில் சமாதானம் பண்ண வேண்டிய வேலையும் சேர்ந்து கொண்டது.

சாயங்காலம் வீட்டிற்குள் நுழையும் போது, உள்ளே அமர்க்களப்பட்டுக் கொண்டிருக்கும். "ஏண்டி அலமு! அந்தப் பாத்திரத்தை நன்றாகத் தேய்த்தால்தான் என்ன? இப்படிக் காரியம் செய்தால் நீ எப்படிப் புக்ககத்துக்குப் போய்க் குடித்தனம் பண்ண முடியும்? ஏன், அழகாயிருக்கிறோம் என்று அகம்பாவமா உனக்கு?" என்று கடுகடுப்பாகச் சொல்லுவாள் சாரதா.

"புக்ககத்தில் காரியம் செய்யாவிட்டாலும் உங்கள் மாதிரி சொல்ல மாட்டார்கள் போலிருக்கிறதே!" என்பாள் அலமு.

"ஊஹும், பதில் சொல்ல நன்றாகத் தெரிகிறது; உருப்பட்டாற் போலத்தான்!" என்று ஆரம்பித்து விடுவாள் சாரதா.

கடைசியில் இருவருக்கும் வாக்கு வாதம் முற்றிவிடும். இருவரையும் சமாதானப் படுத்துவதற்குள் அய்யருக்குப் போதும் போதும் என்றாகிவிடும். சாரதாவுக்குப் பரிந்து பேசினால் அலமுவுக்கு அழுகை வந்துவிடும். அலமு பக்கம் பேசினால் சாரதா சண்டைக்கு வந்து விடுவாள். இருவருக்கும் ஒன்றும் சொல்ல முடியாமல் தவிப்பார் வாஸு அய்யர். அப்பொழுதுதான் அவருக்கு உலகத்தார் சொல்லுவது பொய்யில்லை என்று தோன்றும். தூரத்தில் தெரியும் கானல் ஜலம் என்று நம்பி ஒட்டகம் ஏமாறுவது போல், கொஞ்ச நாள் அமைதியை நம்பி நாமும் ஏமாந்து விட்டோமே என்று எண்ணி வருந்துவார். அதற்காகவே அவர் அவசரம் அவசரமாக அலமுவின் கல்யாணத்திற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்து கொண்டிருந்தார்.

சாரதாவுக்கு நாளுக்கு நாள் அலமுவின் மீது வெறுப்பு அதிகரித்து வந்தது. அத்துடன் இன்னொரு கெட்ட எண்ணமும் சேர்ந்து கொண்டது. அலமுவை இரண்டாயிரம் மூவாயிரம் என்று அதிகமாகச் செலவழித்து, நல்ல இடத்தில் கல்யாணம் செய்து கொடுத்து விட்டால், அப்புறம் மீனுவுக்குத் தன் இஷ்டப்படி சீர் செய்ய முடியாமல் போய்விடுமே என்று அவள் நினைத்தாள். "எவனாவது ஏழையைக் கட்டிக்கொண்டு கஷ்டப் பட்டால்தான் அலமுவின் அகம்பாவம் அடங்கும்" என்றுகூட அவள் நினைத்தாள். அதற்காக அலமுவுக்கு வந்த நல்ல ஜாதகங்களையெல்லாம் அவள் ஏதாவது சாக்கு வைத்துத் தட்டிக் கழித்துக் கொண்டே இருந்தாள்.

ஒரு நாள் வரன் விஷயமாக வாஸு அய்யர் வெளியூருக்குப் போகப் போவதாகச் சொன்னார். "நல்ல வரனாகப் பாருங்கள்!" என்று மேலுக்குச் சொல்லி வைத்தாள் சாரதா. "திரும்பி வர ஒரு வாரம் ஆகும்" என்று சொல்லி விட்டுச் சென்ற வாஸு அய்யர், நாலைந்து நாட்களுக்குள்ளேயே திரும்பி வந்து விட்டார். அவர் முகத்தில் துக்கம் குடிகொண்டிருந்தது. வரன் நிச்சயமாகிவிட்டது என்றும், ஆனால் பிள்ளைக்கு ஒன்றும் சொத்து இல்லையென்றும், கொஞ்சம் படித்து ஏதோ ஒரு ஆபீஸில் வேலையாயிருப்பதாயும், ஜாதகம் மட்







குற்றமுள்ள நெஞ்சம்

உ. சௌந்தரம்

பிறத்தியாருக்கு வாத்தியாராகப் புத்தி சொல்லிவிட்டுத் தானே அதற்கு நேர் விரோதமான காரியங்களைச் செய்வதுதான் புருஷ லக்ஷணம். வாஸுதேவ அய்யரும் அந்த மாதிரிதான். "முதல் தாரத்தின் குழந்தைகள் இருக்கையில், மறு விவாகம் செய்து கொள்ளுபவன் பாடு ரொம்பக் கஷ்டம்" என்றுதான் அவரும் சொல்லிக் கொண்டிருந்தார். அவரைச் சோதிப்பதற்காகத்தானோ என்னவோ, அவர் மனைவி ராதை ஆறு மாதத்துக் குழந்தையான அலமுவை விட்டு விட்டு, நிமோனியா சுரத்தில் காலமானாள்.

வாஸு அய்யர் துக்கம் தாங்காமல் தவித்தார். குழந்தையை வளர்க்க வீட்டிலோ வேறு மனுஷர்கள் இல்லை. கொஞ்ச நாள் பந்துக்களிடத்தில் விட்டு வளர்க்க ஏற்பாடு செய்தார். ஒன்றும் சரியாக வரவில்லை. கடைசியில் அவர் வழக்கம்போல் குழந்தைக்குத் தாயார் வேண்டும் என்பதற்காகவும், பந்துக்களின் முயற்சியைத் தட்ட முடியாமலும் சாரதாவை இரண்டாந்தாரமாக மணந்து கொண்டார்.

சாரதாவும் நல்ல பெண்தான். கல்யாணத்தின்போது குழந்தை அலமுவின் அழகைப் பார்த்து விட்டு, "இந்தக் குழந்தையின் அம்மாவாக இருக்கும் அதிர்ஷ்டம் நமக்குக் கிடைத்ததே!" என்று அவள் நினைத்தாள். சாரதாவின் கல்யாணத்தின் போது அலமுவுக்கு இரண்டு வயது. குறுகுறு வென்று மூக்கும் முழியுமாகத் தங்க விக்கிரகம் போல் இருந்தாள் குழந்தை.

சாரதா வந்து இரண்டு மூன்று வருஷம் வரை குடும்பத்தில் ஒரு சச்சரவும் இல்லாமல்தான் இருந்தது. வாஸு அய்யரும், "உலகத்தில் இளையாள் என்றால் பொல்லாதவள் என்று சொல்வது மகா தப்பு" என்று சொல்லிக் கொண்டிருந்தார். அலமுவும் சாரதாவைத் தன் சொந்தத் தாயாராகவே நினைத்து அவள் மேல் உயிராக இருந்தாள்.

நாளாக ஆக, சாரதாவிற்குத் தனக்கும் ஒரு குழந்தை பிறக்க வில்லையே என்ற எண்ணம் ஒவ்வொரு சமயம் தோன்ற ஆரம்பித்தது. என்ன இருந்தாலும் அலமு மூத்தாள் பெண்தானே? கொஞ்ச நாள் போனால் தாய் சித்தி என்று தெரிந்துவிடப் போகிறது!

அலமு அப்பாவிடம் கொஞ்சும் பொழுது சாரதாவுக்கு என்ன காரணத்தாலோ எரிச்சலாக இருந்தது. கொஞ்சம் கொஞ்சமாக அலமுமீது அவளுக்கு வெறுப்பும் ஏற்பட்டு வந்தது.

அலமுவுக்குப் பத்து வயது ஆன பொழுது, சாரதாவின் குறை நீங்க மீனு பிறந்தாள். அவளுக்குச் சந்தோஷம் தாங்க முடியவில்லை. அலமுவுக்கோ தனக்குத் தங்கை பிறந்ததில் ரொம்பவும் பெருமை.

மீனு பிறந்ததும் உலகத்திற்கே வழக்கமான இளையாள் குணம் சாரதாவிடம் தலைகாட்ட ஆரம்பித்து விட்டது. அலமு குழந்தையைச் சாதாரணமாக ஏதாவது கோபித்துக்கொண்டால் கூட அவள் சண்டைக்கு வந்து விடுவாள். பட்சணம், பாவாடை எல்லாம் மீனுவுக்குத்தான் உயர்ந்ததாக இருக்க வேண்டும் என்று கூட அவள் நினைத்தாள்.

வாஸு அய்யர் ஏது வாங்கினாலும் இரு குழந்தைகளுக்கும் சமனாகத்தான் வாங்குவார். அதைப் பார்த்தால் சாரதாவுக்கு எரிச்சலாகத்தான் இருக்கும். ஒன்றும் சொல்லிக் கொள்ள முடியாமல், "தாயார் இருக்கும் குழந்தைக்கும், தாயில்லாக் குழந்தைக்கும் ஒரே மாதிரியா?" என்று பொருமுவாள். மீனுவோ, "அக்கா! அக்கா!" என்று அலமுவிடம் உயிராக இருந்தாள்.

★

அலமுவுக்குப் பதினைந்து வயதாகி விட்டது. அவள் கடைந்தெடுத்த தந்தப் பதுமை மாதிரி இருந்தாள். மீனு அழகில்

யாக இருக்கிறதா ?" என்று கேட்டேன்: "உள்ளே வேடிக்கை ஒன்றையும் காணோம். அட்டையில் ரொம்ப வேடிக்கை இருக்கிறது. தலைப்பில் ஹாஸ்யப் பத்திரிகை என்று போட்டிருப்பதே பெரிய வேடிக்கை" என்றார். இந்தச் சிரிப்பு நல்ல சிரிப்பா, பொல்லாத சிரிப்பா, நீங்களே சொல்லுங்கள் !

கைலாஸ மய்யருக்கு மாப்பிள்ளையிடமிருந்து கடிதம் வருகிறது. தலை தீபாவளிக்கு இன்னின்ன செய்ய வேண்டும் என்று கடிதம் எழுதியிருக்கிறான். அதைப் பார்த்து அவருக்குச் சிரிப்பு வருகிறது. இது ஆனந்தமா, கோபமா? — அவர் பெண் விசாலம் ஒன்றும் புரியாமல் தவிக்கிறாள்.


நானும்தான் பார்க்கிறேன்: 'சிரிப்பைக் கொண்டு மனதிலிருப்பதைச் சாமர்த்தியமாய் மூடிக் கொள்கிறார்களே, என் சோக ரஸத்தைக் கொண்டோ வீர ரஸத்தைக் கொண்டோ சிரிப்பை ஒருவரும் மறைக்க முடியவில்லை என்று. சிரிப்பை யாரும் அடக்க முடியாது என்பதுதான் இதற்குக் காரணம். திரௌபதி பளிங்கு மாளிகையில் கொஞ்சம் சிரிப்பை அடக்கியிருந்தால், துரியோதனனுக்கு அவ்வளவு கோபம் ஏற்பட்டிருக்குமா, அல்லது பாரதப் போர்தான் தோன்றியிருக்குமா? அபாயச் சிரிப்புக்கு வேறென்ன உதாரணம் வேண்டும் ?

ஸர் ஸ்டாபோர்ட் கிரிப்ஸ் இந்தியாவுக்கு வந்திருந்தபோது, இந்தியத் தலைவர்களைக் கண்டு பேசினார். ஒவ்வொரு தலைவரும் அவரைக் கண்டு பேசிவிட்டுத் திரும்பும்போது, சிரித்துக் கொண்டே போக வேண்டும் என்று கேட்டுக் கொண்டார். அப்படியே எல்லோரும் ஆனந்தமாய்ச் சிரித்துக் கொண்டே வெளியே வந்தார்கள். கிரிப்ஸின் மற்றக் கோரிக்கைகளை ஒப்புக் கொண்டு வராவிட்டாலும் இந்தக் கோரிக்கையை ஒப்புக்கொண்டார்கள் என்பதை நினைக்கும்போது இப்பொழுதும் சிரிப்பு வருகிறது !


சமீபத்தில், காயிதே ஆஜம் ஜின்னா ஹிந்துப் பத்திரிகைகள் வரைமுறையில்லாமல் தம்மைத் தாக்கி வருவதாகவும் நாம் காந்திஜியைச் சந்திக்கும்போது சௌஜன்யமான நிலைமையை ஏற்படுத்த வேண்டாமா என்றும் கேட்டார். அதற்கு ஒரு பத்திரிகை நிருபர், "ஹிந்துப் பத்திரிகைகள் உங்களைத் தாக்குவதாகப் புகார் செய்கிறீர்களே, நீங்கள் லாகூரில் ராஜாஜியைத் தாக்கியிருந்தீர்களே, இது சௌஜன்யமான நிலைமையை ஏற்படுத்துவதாகுமா ?" என்று கேட்டார். ஜின்னா என்ன பதில் சொன்னார் என்று நினைக்கிறீர்கள் ? ஆமாம்; ஒரு புன்னகை செய்தார்! சிரிப்பு என்பது அபாயமான விஷயம் மட்டுமல்ல; அபாயமான நிலைமையிலும் சிரிப்பை உபயோகிக்கலாம் என்றாகிறது.

பத்திரிகைகளில் வெளியாகும் பிரசங்கங்களில் அடிக்கடி (சிரிப்பு) என்று போட்டிருக்கும் காரணம் புரியாமல் நான் விழிப்பதுண்டு. ஏனெனில், பிரசங்கத்தில் அவ்வாறு குறிப்பிட்டிருக்கும் இடத்தில் சிரிக்கும்படியான விஷயம் ஒன்றும் இருப்பதில்லை. ஆனால், அப்படிப் போட்டிருப்பதானது, "எதிர்க் கட்சிக்காரரே! இந்த இடத்தில் நீர் பதில் சொல்வதற்கு ஒரு பாயிண்ட் இருக்கிறது. விழித்துக் கொள்ளும்!" என்று எடுத்துக் கொடுப்பது போலவே எனக்குத் தோன்றுகிறது.

அபாயச் சிரிப்பைப் பற்றி இவ்வளவுதான். இந்தக் கட்டுரையைப் படித்து விட்டுச் சிரிக்க வேண்டாம் என்று சொல்லவில்லை; ஆனால் தயவு செய்து அபாயச் சிரிப்பு மட்டும் சிரிக்காதீர்கள் என்றுதான் கேட்டுக் கொள்கிறேன்.




ஆணியைத் தேடுகிறார்.



இதன் பலன்-மோட்டார் போச்சு;



ஆணி வந்தது!



அபாயச் சிரிப்பு!

★

வி. எஸ். ஆர்.

★

"அபாயம்! நெருங்காதே!" என்று சில மின்சாரக் கம்பங்களில் கொட்டை எழுத்தில் எழுதி இருப்பதைப் பார்த்திருப்பீர்கள். அதை விட அபாயமானது ஒன்று இருந்து கொண்டு, 'இது அபாயம்!' என்று எச்சரிப்பதற்குக்கூட அருகில் ஒன்றும் இல்லாவிட்டால் இதை விடப் பேரபாயம் என்ன இருக்கிறது? இப்படிப் பட்ட பேரபாயம்தான் சிரிப்பு என்பது.

சிரிப்பை அபாயம் என்று கருத வேண்டும் என்று சொல்கிறேனே தவிர, உங்களைச் சிரிக்க வேண்டாம் என்று சொல்லவில்லை. பேஷாகச் சிரியுங்கள். உங்களுக்கு லீவ் வேண்டியிருந்து மேலதிகாரியைப் பார்க்க வேண்டியிருந்தால், சிரித்துக் கொண்டே அவரைப் பாருங்கள்! உடனே லீவ் சாங்ஷன் ஆகிவிடும். தஞ்சாவூரிலிருந்து திரும்பி வந்த அடுத்த வீட்டுக்காரரைப் பார்த்துக் கொஞ்சம் சிரித்து வையுங்கள். அவர் தப்பித் தவறி ஒரு கூடை குடைமிளகாயைக் கொண்டு வந்து கொடுத்தாலும் கொடுக்கலாம்.

சிரிப்பு, அவ்வளவு அபாயமானதா என்று சந்தேகப்படுகிறவர் அந்த வார்த்தையை எடுத்துக் கொள்ளட்டும்! சிரிப்பு என்கிற வார்த்தைக்கு எத்தனை அடைமொழிகள் என்று அவர்கள் கவனிக்கட்டும்! கபடச் சிரிப்பு, கேலிச் சிரிப்பு, குறும்புச் சிரிப்பு, கோபச் சிரிப்பு-அப்பப்பா! வேறு எதற்காவது இம்மாதிரி அடைமொழிகள் உண்டா? அடுத்தாற் போல் கோபம் என்ற வார்த்தையை எடுத்துக் கொள்ளுங்கள். சிரிப்புக் கோபம், குறும்புக் கோபம், மூலைக் கோபம் என்று கேட்டிருக்கிறோமா?

ஒருவர் சிரிப்பது கபடச் சிரிப்பா கேலிச் சிரிப்பா என்று எப்படிக் கண்டு பிடிப்பது? கண்ணைச் சிமிட்டிக் கொண்டு ஒரு தினுசாகச் சிரித்தால் கேலிச் சிரிப்பு என்று கொள்ளலாம் என்கிறார்கள் சிலர். அது என்ன தினுசு என்று அவர்கள் விவரமாகச் சொல்லுவதில்லை. விழிகள் பெரிதாகி, புருவங்கள் உயரக் கிளம்பி, 'ஹா ஹா!' என்று சிரித்தால் அது கோபச் சிரிப்பு என்று சிலர் சொல்லுகிறார்கள். அது மாதிரி சிரிப்பவரை நான் இன்னும் பார்க்கவில்லை. சிரிப்பையே என்ன சிரிப்பென்று கண்டுபிடிக்க முடியாத போது, சிரிப்பிலிருந்து மனதிலிருப்பதைக் கண்டுபிடிக்க முயலுவது ஹிட்லர் வெற்றிக்காகவும், சென்னை வாசிகள் பஸ்ஸில் இடத்திற்காகவும் ஆசைப்படுவதுபோல்தான்.

என் நண்பர் ஒருவர் ஹாஸ்யப் பத்திரிகை ஒன்றைப் படித்துக் கொண்டிருந்தார். அதைப் படித்துவிட்டு விழுந்து விழுந்து சிரித்தார். "பத்திரிகை அவ்வளவு வேடிக்கை



ரிப்பேர் செய்யப்போக... ஆணியைக் காணுமல், காருக்கு அடியில்... விளக்கைக் கொண்டுபோய்...

தனையும் செய்த அவமானத்தை எடுத்துச் சொல்லி யுதிஷ்டிரனும் தயங்கும்படியாகச் சாத்திர மேற்கோள்கள் எடுத்துக் காட்டுவான். யுதிஷ்டிரன் பெருமூச்சு விட்டு ஆலோசிப்பான்.

"பூரி சிரவசும், பீஷ்மரும், துரோணரும், கர்ணனும், அசுவத்தாமரும், பகைவனுக்குத் துணையாக இருக்கிறார்கள். துரியோதனனும் அவன் தம்பிகளும் யுத்தப் பயிற்சி பெற்றவர்கள். பல சிற்றரசர்களும் பெரிய ராஜாக்களும் இப்போது துரியோதனன் பட்சத்தில் இருக்கிறார்கள். பீஷ்மரும் துரோணரும் துரியோதனனை மதிக்கவில்லையாயினும் அவனை விட்டுக் கொடுக்க மாட்டார்கள். யுத்தத்தில் அவனுக்காக உயிரையும் விடக் காத்திருக்கிறார்கள். எல்லா அஸ்திரங்களையும் அறிந்தவனும் அசைக்க முடியாதவனுமான மகாரதனான கர்ணன் சாமர்த்தியசாலி. அபார முயற்சி எடுக்கும் தன்மை கொண்டவன். யுத்தத்தில் வெற்றி நிச்சயமில்லை. அவசரப்படுவதில் பயனில்லை" என்று யுதிஷ்டிரன் சொல்லுவான். இவ்வாறு பாண்டவர்களின் பொறுமையைத் தருமபுத்திரன் காப்பாற்றி வந்தான்.

பிறகு வியாசருடைய உபதேசத்தின் பேரில் புது அஸ்திரங்களையும் தேவர்களின் வரங்களையும் பெறுவதற்காக அருச்சுனன் தவம் செய்ய இமயமலைக்குப் போகப் புறப்பட்டான். யுதிஷ்டிரன் பீமன் இருவரையும் வணங்கி நகுல சகதேவர்களுடைய அனுமதியையும் கேட்டான். பிறகு பாஞ்சாலியிடம் விடை பெறப் போனான். "தனஞ்சய! உன்னுடைய காரியம் மங்களமாக முடிவு பெற வேண்டும். உன்னைப் பெற்ற குந்திதேவி நீ பிறந்த போது உன்னைப் பற்றி விரும்பின தெல்லாம் உனக்கு இப்போது ஆகுக! எங்கள் எல்லாருடைய சுகதுக்கமும் வாழ்வும் மானமும் ஐசுவரியமும் உன்னைப் பற்றி நிற்கின்றன. அஸ்திரங்களுடன் திரும்பி வருவாயாக!" என்று பாஞ்சாலி மங்கள வார்த்தைகள் சொல்லி அனுப்பினாள். ஆனாலும், அருச்சுனன் பிரிவால் மிக்க துயரம் அடைந்தாள்.



அஸ்திரங்களுக்காகத் தவம் செய்யப் போன அருச்சுனன் அடர்ந்த காடுகளைத் தாண்டி இந்திரகீல மலையை அடைந்தான். அவ்விடத்தில் ஒரு கிழப் பிராமணனைக் கண்டான். "குழந்தாய்! வில்லும் கவசமும் பாணமும் கத்தியும் தரித்துக் கொண்டிருக்கிறாய், நீ யார்? இங்கே அஸ்திரங்களால் செய்ய வேண்டியது ஒன்றுமில்லையே? கோபத்தையும் இன்பங்களையும் விட்ட தவசிகளுடைய இருப்பிடத்தில் இந்த க்ஷத்திரிய வேஷம் என்னத்திற்கு?" என்று சிரித்துக்கொண்டே அந்தத் தவசி அருச்சுனனோடு அன்பாகச் சம்பாஷித்தான். பிறகு தன் உண்மை உருவத்தைக் காட்டி, தானே இந்திரன் என்றும் தன் மகனாகிய அருச்சுனனைக் கண்டு மகிழவே வந்ததாகவும் தெரிவித்தான்.

அருச்சுனன் இந்திரனை வணங்கி, "நான் வேண்டுவது அஸ்திரங்கள். எனக்கு அதைத் தருவாயாக" என்றான்.

இந்திரன், "தனஞ்சய! உனக்கு அஸ்திரங்களால் என்ன பிரயோஜனம்? இஷ்டமான போகங்களைக் கேள். மேலான உலகங்களைக் கேள்" என்றான்.

"தேவராஜனே! நான் போகத்தையும் மேலுலகங்களையும் விரும்பவில்லை. பாஞ்சாலியையும் சகோதரர்களையும் காட்டில் விட்டுவிட்டு வந்திருக்கிறேன். நான் கேட்பது அஸ்திரங்களே!" என்று அருச்சுனன் தெரிவித்தான்.

"முக்கண்ணனாகிய சிவபெருமானைத் தரிசித்துச் சித்தி பெற்றால் உனக்குத் திவ்யாஸ்திரங்கள் கிடைக்கும். அந்த மகா தேவனைக் குறித்துத் தவம் செய்" என்று சொல்லி ஆயிரக் கண்ணன் மறைந்தான். அதன் மேல் அருச்சுனன் சிவபெருமானைத் தியானித்து இமயமலைச் சாரலில் நீண்ட காலம் கடுந்தவம் செய்தான்.

* * *

பிநாகமும் அம்புகளும் கையில் எடுத்துக்கொண்டு உமாதேவியுடன் வேட உருவத்தில் பரமசிவனார் அருச்சுனன் இருந்த காட்டை அடைந்தார்.

அப்போது ஒரு காட்டுப் பன்றி அருச்சுனனைத் தாக்க வந்தது. அந்தப் பன்றியைப்



போட்டோ எடுப்பவர் :—"நீங்கள் எல்லாம் நன்றாக விழவேண்டுமென்றால் ஒரு அடி பின்னால் தள்ளி நில்லுங்கள் !"

பிநாகம் வளைத்த சங்கரனும் காண்டீபம் வளைத்த அருச்சுனனும் ஒரே சமயத்தில் அம்பு எய்து கொன்றார்கள்.

"நீ யார்? ஸ்திரீயுடன் இந்தக் காட்டில் ஏன் சஞ்சரிக்கிறாய்? நான் குறி வைத்த பன்றியை நீ எவ்வாறு அடிக்கலாம்?" என்று அருச்சுனன் வேடனாகிய சங்கரனை அதட்டிக் கேட்டான்.

"ஓ வீரனே! மிருகங்கள் நிறைந்த இந்த வனம் காட்டு வாசிகளாகிய எங்களுடையது. நீ சுகத்துக்குரியவனாகத் தோன்றுகிறாய். ஏன் தனிமையாக இந்தக் காட்டில் சஞ்சரிக்கின்றாய்?" என்று பரமசிவன் அருச்சுனனை ஏளனமாகப் பேசி, தான் அடித்த பன்றி என்றும், அதை அருச்சுனன் ஒப்புக் கொள்ளாவிடில் தன்னுடன் சண்டை செய்து வெல்ல வேண்டும் என்றும் சொன்னான்.

அருச்சுனனுக்குப் பெரும் கோபம் வந்தது. சர்ப்பம் போன்ற பாணங்களைச் சங்கரன்மேல் வருஷித்தான். அந்த அம்புமாரிகள் பரமசிவனாகிய வேடன் மேல் விழுந்து விழுந்து பயனற்றுப் போவதை அருச்சுனன் கண்டான். நூற்றுக் கணக்கான நாராசங்களை விட்டான். மழையை மலை ஏற்றுக் கொள்வதுபோல் அவற்றைச் சங்கரனார் பிரசன்ன முகத்துடன் ஏற்றுக் கொண்டார். பாணங்கள் எல்லாம் செலவழிந்து போகவே அருச்சுனன் உள்ளத்தில் பயம் உண்டாயிற்று. பாணங்கள் தீர்ந்து போன பிறகு, வில் நுனியால் வேடனைக் குத்தி அடிக்க ஆரம்பித்தான். அதையும் வேடன் பொருட்படுத்தவில்லை. வில்லை அநாயாசமாக அருச்சுனனிட மிருந்து பிடுங்கிக் கொண்டு வேடன் சிரித்தான். காண்டீபத்தை இழந்த அருச்சுனன் பரபரப்பாகக் கத்தியை எடுத்து யுத்தம் செய்தான். சங்கரன் தலையில் பட்ட கத்தி உடைந்து துண்டு துண்டாயிற்று. பிறகு கற்களை எடுத்து எறிந்து சண்டை செய்தான். அதுவும் பயன்பெறவில்லை. அதன் மேல் முஷ்டி யுத்தம் ஆரம்பித்தான். அதிலும் அருச்சுனன் தோல்வி அடைந்தான். பிறகு மார்போடு மார்பாக ஒருவரை யொருவர் தாக்கி மல் யுத்தம் செய்தார்கள். வேடன் அருச்சுனனை இறுகக் கட்டிக்கொண்டு அவனும் ஒன்றும் செய்ய முடியாதபடி செய்தான்.

ஒன்றும் செய்ய முடியாதவனாகித் திகைத்துப் போன அருச்சுனன் பகவான் மகாதேவரைத் தியானித்தான். தியானித்த வுடனே அவனுக்கு அறிவு உதயமாயிற்று. வேடன் யார் என்பது தெரிந்தது.

"நான் செய்த குற்றத்தைப் பொறுக்க வேண்டும்!" என்று மகாதேவன் காலில் விழுந்து வேண்டிக் கொண்டான்.


* * *

"பொறுத்தேன்" என்று சொல்லிச் சிரித்து, பரமசிவன் அருச்சுனனுக்குத் தான் பறித்துக் கொண்ட காண்டீபத்தையும் மற்ற ஆயுதங்களையும் தன் கையால் திருப்பிக் கொடுத்துப் பாசுபதாஸ்திரத்தையும் வரங்களையும் தந்தான்.

மல் யுத்தத்தில் முக்கண்ணனால் தீண்டப்பட்டதின் பயனாக அருச்சுனனுடைய சரீரம், எல்லாவிதத் தோஷங்களும் நீங்கி முன்னைவிட நூறு மடங்கு தேஜஸ் நிறைந்து பிரகாசித்தது. "நீ சுவர்க்கம் போய் இந்திரனைப் பார்" என்று அருச்சுனனுக்குச் சொல்லிவிட்டு, அவன் பார்த்துக் கொண்டிருக்கும் போதே சூரியன் தகதக வென்று அஸ்தமிப்பது போல் பரமசிவனார் மறைந்தார்.

"நேரில் நான் மகாதேவனைப் பார்த்தும் தீண்டியும் அநுபவித்தேனே? இனி, எனக்கு என்ன குறை?" என்று அருச்சுனன் மகிழ்ச்சிப் பரவசமாக நின்றான். அப்போது இந்திரனுடைய தேர்ப்பாகன் மாதலி தேருடன் வந்து நின்றான். அதில் ஏறி அருச்சுனன் இந்திர லோகம் சென்றான்.

வியாசர் விருந்து



பாசுபதம்



சக்கரவர்த்தி - ராஜகோபாலாச்சாரியார்

வனவாச ஆரம்பத்திலும் பிறகும் சில சந்தர்ப்பங்களில் தரும புத்திரனோடு பீமசேனனும் திரௌபதியும் வாதாடுவார்கள். கோபமே க்ஷத்திரியனுக்கு லக்ஷணம் என்றும் க்ஷத்திரியனுக்குப் பொறுமை தகாது என்றும் அது அவமானத்தில் முடியும் என்றும் நியாயங்களையும் பெரியோர் வாக்குகளையும் பிரமாணமாகக் காட்டிப் பீமசேனனும் பாஞ்சாலியும் வாதிப்பார்கள். தாம் செய்த பிரதிக்ஞையை விட முடியாது, பொறுமையே அனைவருக்கும் மேலான தருமம் என்று யுதிஷ்டிரர் உறுதியாகப் பதில் சொல்லுவார். வனவாசத்தை நிறைவேற்றாமலே உடனே துரியோதனனைத் தாக்கி அவனையும் அவன் துணைவர்களையும் கொன்று ராஜ்யத்தை மீட்கவேண்டும் என்பது பீமனுடைய ஆசை. யுதிஷ்டிரனுக்கு அவன் சொல்லுவான்:

"வேத மந்திரங்களைப் பொருள் செய்து கொள்ளாமல் எழுத்தறிவு மட்டும் அடைந்தவன் திருப்பித் திருப்பி மந்திரங்களைச் சொல்லிக் கொண்டு திருப்தி யடைவதைப்போல் நீர் பேசுகிறீர். உம்முடைய மதி குழப்பமடைந்திருக்கிறது. க்ஷத்திரியனாகப் பிறந்த நீர் பிராமணத் தன்மை அடைந்து விட்டீர். இது பயன் தராது. சாஸ்திரம் என்ன சொல்லுகிறது? க்ஷத்திரியனுக்குக் குரூரமும் கோபமுமே லக்ஷணம். பொறுமை என்பது க்ஷத்திரியனுக்கு விதித்த குணமல்லவே? கெட்ட எண்ணங்களைக் கொண்ட திருதராஷ்டிர புத்திரர்களை வீரர்களாகிய நாம் சும்மா விடலாமா? வஞ்சகப் பகைவரை வெல்லாத க்ஷத்திரியனுடைய பிறப்பு பயனற்றதென்பது என் அபிப்பிராயம். வஞ்சகனைக் கொன்று அதனால் நரகம் அடைந்தாலும் அந்த நரகம் சுவர்க்கத்திற்கு ஒப்பானது. உம்முடைய பொறுமை நெருப்பைக் காட்டிலும் மிக வெப்பமான தாபத்தை உண்டாக்கி என்னையும் அருச்சுனனையும் இரவும் பகலும் தூக்கமில்லாமல் வாட்டுகிறது. நீசர்கள் நம்முடைய ராஜ்யத்தைக் கவர்ந்து கொண்டு அனுபவிக்கிறார்கள். செய்ய வேண்டிய காரியத்தில் பிரவேசிக்காமல் மலைப் பாம்புபோல் செயலற்றுக் கிடக்கிறீர். பிரதிக்ஞையைச் செய்து முடிக்க வேண்டும் என்கிறீர். உலகமெல்லாம் அறிந்த அருச்சுனன் எவ்வாறு உலகத்தாரால் அறியப்படாமல் அஞ்ஞாத வாசம் செய்து முடிக்க இயலும்? இமயமலையை ஒரு பிடி புல்லினால் மறைக்க முடியுமா? சிங்கம் போன்ற அருச்சுனனும் நகுல சகதேவர்களும் எவ்வாறு மறைந்து சஞ்சரிப்பார்கள்? கீர்த்தியைப் பெற்ற இந்தக் கிருஷ்ணை எவ்விதம் மறைந்து சஞ்சரிப்பாள்? இவ்வாறெல்லாம் முடியாத காரியத்தை நாம் செய்தாலும் திருதராஷ்டிர புத்திரன் ஒற்றர்களை உபயோகித்து நம்மை அறிந்து கொள்ளுவான். இது நிறைவேறாத யோசனை. மறுபடியும் பதின்மூன்று வருஷம் காட்டில் நாம் இருக்க வேண்டி நேரிடும். பிரதிக்ஞையை முடிப்பது ஆகாத காரியம். இப்போது பதின்மூன்று மாதம் நாம் காட்டில் இருந்தாயிற்று. சோமலதை யில்லாதிருந்தால் வேறு தழையை உபயோகித்து யாகம் முடிப்பார்கள். பதின்மூன்று வருஷத்திற்குப் பதில் பதின்மூன்று மாதங்களே போதும். இதற்குச் சாஸ்திரம் உண்டு. வஞ்சகத்தில் உண்டான பிரதிக்ஞையைத் தவறினதற்குப் பிராயச்சித்தம் உண்டு. பாரம் சுமக்கும் காளை மாட்டுக்குப் பிடி புல்லைக் கொடுத்தால் அந்தச் சிறு குற்றத்திற்குப் பிராயச்சித்தம் ஆகும். சத்துருவை உடனே வதம் செய்வதென்று நிச்சயம் செய்யும். க்ஷத்திரியனுக்கு வேறு மேலான தருமம் இல்லை."

இவ்வாறு பீமன் அடிக்கடி பேசுவான். திரௌபதியோ, தனக்குத் துரியோதனனும் கர்ணனும் துச்சா

ஆகாச வெடி

"1944-ம் வருஷம் அக்டோபர் 24வ யுத்தம் நின்றுவிடும் என்று கல்கத்தா டிராம் வண்டியில் ஏறிய ஒரு லாமா (பௌத்த சன்னியாசி) கூறினார்."

—கல்கத்தா செய்தி.

ஒரு முகாந்திரமுமில்லாமல் அவர் இப்படிக் கூறலாமா என்று கேட்கப்படுகிறது.

★

"1940-ல் ஜெர்மனிக்கு வெற்றி கிடைத்ததைக் கண்ட ருமேனியா அப்போது ஜெர்மனியுடன் சேர்ந்துகொண்டது. இப்போது நேச நாடுகள் வெற்றியடைவதைக் கண்டு நேச நாடுகளுடன் சேர்ந்துகொண்டது."

—ஒரு செய்தி.

மறுபடியும் ருமேனியா ஜெர்மனியுடன் சேரும்படியான நிலைமையை நேச நாட்டினர் ஏற்படுத்த மாட்டார்கள் என்று நம்புகிறோம்.

★

"அமெரிக்காவில், வெயில் கடுமையாக இருப்பதால் பல பேர்கள் அந்த ஊரை விட்டுக் கிளம்பி வந்துவிட்டனர்." —ஒரு செய்தி.

ஆனால், ஸர் ஆர். கே. ஷண்முகம் செட்டியாரும், ஷராப்பும் இந்தியாவுக்குத் திரும்பி வந்துவிட்டதற்கு இதைக் காரணமாகச் சொல்ல முடியாது.

★

"ஸ்ரீ வெங்கடகப்பாராவைப் பிடித்துக் கொடுத்த காந்திஜி, அவரைப் பிடித்துத் தருபவர்களுக்கு 50 ரூபாய் தருவதாகச் சொன்ன போலீஸை, மேற்படி தொகையைத் தனக்குக் கொடுக்கும்படி கேட்டார்." —ஒரு செய்தி.

ஸ்ரீ வெங்கடகப்பாராவைக் கைது செய்த போலீஸ் மேற்படி குற்றத்துக்காக மகாத்மாவுக்கு 50 ரூபாய்தானா கொடுக்கலாம்?

★

"வெயிலின் கொடுமை தாளாது பால்கனிலிருந்த பல்கேரியப் படை சுதேசம் புறப்பட்டிருக்கிறது."

—யுத்தச் செய்தி.

ஐயோ பாவம்! 'படை பதை'க்கும் வெயில் போலும்!

"மகாகனம் ஸ்ரீனிவாச சாஸ்திரியார் ராமாயணப் பிரசங்கங்கள் செய்வதில் மிகவும் விற்பன்னர்."

—டி. ஆர். வெங்கடராம சாஸ்திரி.

வாஸ்தவம்; நமக்குக்கூட அவருடைய சமீப அரசியல் பிரசங்கங்களைக் கேட்ட பிறகு அப்படித்தான் தோன்றுகிறது.

★

"சென்னை ஸ்மால்காஸ் கோர்ட்டில் காலியாயிருக்கும் நீதிபதி ஸ்தானத்துக்கு யாராவது ஒரு பெண் வக்கீலை நியமிக்க வேண்டுமென்று தீர்மானிக்கப்பட்டது." —ஒரு செய்தி.

பெண் வக்கீல்கள் நீண்ட நேரம் கோர்ட்டுகளில் பேசுவதைத் தடுக்க இதுவும் ஒரு யுக்தியாகும்.

★

"காந்திஜியுடன் சம்பாஷணை நடத்தும் பொருட்டு ஜனாப் ஜின்னா ஓயாமல் இந்தியா தேசப் படத்தை வைத்துப் பார்த்தவண்ணம் இருக்கிறாராம்."

—ஒரு செய்தி.

பார்த்துப் பார்த்து, 'இந்தியா ஒரே தேசம்' என்ற முடிவுக்கு அவர் வந்துவிட்டால் அப்புறம் காந்திஜியுடன் பேச வேண்டிய அவசியமே கிடையாது.

★


"ருமேனியாவில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள தேசிய சர்க்காரின் ஜெனரல் கான்ஸ்டாண்டின் சேனடஸ்கு அடுத்தபடியாக என்ன செய்வார் என்று தெரியவில்லை." —ஒரு செய்தி.

அடுத்தபடி எதையாவது செய்யட்டும். முதலில் அவர் தம்முடைய பெயரை மாற்றி வைத்துக் கொண்டால் சரிதான்!



ஸினிமா ரஸிகர்:—ஸினிமா ஆரம்பித்து அரை மணி நேரந்தானே ஆகியிருக்கும்? கதவைத் திறந்து என்னை உள்ளே விடக்கூடாதா?

கொட்டகை மானேஜர்:—ஐயையோ, முடியாது! நான் கதவைத் திறப்பது தெரிந்தால் உள்ளேயிருக்கும் அத்தனை பேரும் வெளியே வந்து விடுவார்கள்! —சந்தர்.



அபாயகரமான பிரயாணம், ஜாக்கிரதை!

இந்த அறிக்கையை புறக்கணிப்பதால் உங்கள் உயிரையே இழக்கவும் கூடும். இன்று ரயில் வண்டிகளில் ஜன நெருக்கடி அதிகமாக இருப்பதால், சில சமயங்களில் வண்டிக்குள் புகவே முடியாமலிருக்கலாம். ஆனால் ஏறும் படிமீது நின்று வண்டிக்கு வெளியே தொங்கிக்கொண்டு பிரயாணம் செய்யாதீர்கள். அது சட்டவிரோதமானது மட்டுமல்ல, நீங்கள் கீழே விழுந்து காயமடையவும் நேரிடலாம், உயிரை இழப்பதற்கும் ஏதுவாகும். ரயில் வண்டித் தொடருக்கும், ரயில் கணவாய் சுவர்கள் அல்லது கைகாட்டி மரக் கம்பங்களுக்கு மிடையேயுள்ள இடம் மிகக் குறுகியது. ரயில் வண்டி வேகமாகப் போய்க்கொண்டிருக்கையில் உங்கள் உடல் அவற்றிலொன்றின் மீது மோதினால், அப்பிரயாணமே உங்களது கடைசி பிரயாணமாகிவிடும்! புத்திசாலித்தனமான காரியத்தைச் செய்யுங்கள். வண்டியில் இடமில்லாவிடில் ஸ்டேஷனிலேயே தங்கிவிடுங்கள். வீணாக உயிருக்குக் கேடு தேடாதீர்கள். பிரயாணமே செய்ய முடியாவிட்டாலும்கூட, நாடு முழுவதுக்கும் உணவுப் பொருள்கள், துணிமணிகள், விறகு முதலியவை ஏற்றிச் செல்வதே ரயில்வேக்களின் முக்கிய வேலை என்பதை ஞாபகத்தில் வைத்துக்கொள்ளுங்கள்.

பிரயாணத்தை குறையுங்கள்.

அபாயகரமாக பிரயாணம் செய்யாதீர்கள்.

AAA 68]—TM.

இயல்பாகவே ஜப்பானியர்களுக்கு மதப்பற்று கிடையாது. தமக்குச் சௌகரியமானால் இரண்டு மூன்று மதங்களை ஏககாலத்தில் தழுவிக் கொண்டிருப்பது தவறு என்று அவர்கள் கருதுவதில்லை. தற்போது ஜப்பானியர்களால் ஒப்புக்கொண்டிருப்பது 'ஷின்டோயசம்' என்னும் மதம் மட்டுந்தான். அதாவது சக்கிரவர்த்தியை வணங்குவதுதான் அவர்கள் மதம். இந்த மதத்தைத் தான் நம்பி தும் அவர்கள் சுமத்தப் பார்க்கிறார்கள்.

வெற்றி வழியே விடுதலை

AAA 1024 TM

டெரிகிறது. நெருப்புக்குக் காற்று எப்படியோ, அப்படிக் காதலுக்குப் பிரிவு என்று தோன்றுகிறது. அற்பமான பொய்க் காதலா யிருந்தால், பிரிவினால் அது அழிந்து விடுகிறது. உண்மைக் காதலா யிருந்தாலோ, பிரிவினால் அது நாளுக்கு நாள் வளர்ந்து பெரு நெருப்பாய் மூளுகிறது! நரசிம்மன் விஷயத்தில் அப்படித்தான் நடந்து விட்டது. சிவகாமியை விட்டுப் பிரிந்திருந்தால் அவனுடைய காதலை நரசிம்மன் மறந்து இராஜ்ய காரியங்களில் அதிக கவனம் செலுத்துவான் என்று எண்ணினேன். அதற்கு நேர் விரோதமாக நடந்து விட்டது. நரசிம்மன் கடைசியாக அனுப்பிய ஓலையில் என்ன எழுதி யிருக்கிறான் தெரியுமா, சத்ருக்னா! 'இராஜ்யம் என்னத்திற்கு? யுத்தம் என்னத்திற்கு?' என்று எழுதி யிருக்கிறான். சிவகாமியின் காதலுக்காக இராஜ்யத்தையே துறக்க அவன் சித்தமா யிருக்கிறானாம்! நான் கொடுத்த மருந்து. நோயைக் காட்டிலும் கெடுதலாய்ப் போய் விட்டது!"

மகேந்திரர் கலகலவென்று சிரித்த தொனியில் ஏமாற்றமும் கோபமும் கலந்திருந்தன. அவர் மேலும் சொல்வார்:—"நான் எவ்வளவோ யோசனை செய்து போட்ட திட்டங்களை யெல்லாம் காமதேவன் தன்னுடைய மெல்லிய பூங்கணை ஒன்றினால் காற்றில் பறக்கச் செய்து விடுவான் போலிருக்கிறது. சத்ருக்னா! வாதாபி சக்கரவர்த்தியிடம் தோற்றாலும் தோற்கலாம்; கேவலம் மன்மதனுடைய மலர்க்கணைக்கா மகேந்திர பல்லவன் தோற்று விடுவது? ஒரு நாளும் இல்லை!" என்று கூறி மகேந்திர சக்கரவர்த்தி மீண்டும் சிரித்தபோது. அவருடைய சிரிப்பில் எக்களிப்பு தொனித்தது.

"மாமல்லனுக்கு நான் இட்ட கட்டளையை இந்தக் கணமே மாற்றிவிடுகிறேன், சத்ருக்னா! நான் தரும் ஓலையை எடுத்துக்கொண்டு வாயுவேக மனோவேகமாய் நீ காஞ்சிக்குப் போக வேண்டும். தலைக்காட்டிலிருந்து துர்விநீதனுடைய சைன்யம் காஞ்சியை நோக்கி வந்து கொண்டிருக்கிறது. அதை எதிர்த்து நிர்மூலமாக்குவதற்கு நானே இங்கிருந்து போவதாக எண்ணியிருந்தேன். அந்த யோசனையை இப்போது மாற்றிக் கொண்டேன். காஞ்சியிலிருக்கும் தற்காப்புச் சைன்யத்துக்குத் தலைமை வகித்து நரசிம்மன் போர்க்களத்துக்குச் செல்லட்டும். போவதற்கு முன்னால் ஆயனர் வீட்டுக்குப் போய்ச் சிவகாமியைப் பார்த்து விட்டுப் போவதா யிருந்தாலும் போகட்டும். அதற்கு நான் குறுக்கே நிற்கப் போவதில்லை!"

இதைக் கேட்டதும், சத்ருக்னனுடைய முகத்தில் தோன்றிய விசித்திரமான புன்னகை, "என்னிடம் கூடவா உங்களுடைய கபடநாடகம்?" என்று கேட்பதுபோலிருந்தது.



ஆசைப் படுகிறேன். சந்தித்து அவன் என் கழுத்தில் சூடும் வெற்றி மாலையுடன் திரும்பி வந்து உன்னைப் பார்க்க விரும்புகிறேன்!.........''



மகேந்திரர் இவ்விதம் வாசித்து வந்த போது, சத்ருக்னன் தலை குனிந்து பூமியைப் பார்த்த வண்ணம் நின்றான்.

''கேட்டாயா, சத்ருக்னா! இப்பேர்ப்பட்ட புதல்வனைப் பெறுவதற்கு நான் எவ்வளவு பாக்கியம் செய்திருக்க வேண்டும்? இராமனைப் பெற்ற தசரதரை விட நான் பாக்கியசாலி அல்லவா? இராமன் அப்படி என்ன செய்து விட்டான்? இராஜ்யத்தைத் துறந்து சீதையோடும், லக்ஷ்மணனோடும் வனத்துக்குச் சென்றான். இது ஒரு பிரமாத தியாகம் ஆகுமா? இராஜ்யம் ஆளுவதைக் காட்டிலும் வனத்தின் உல்லாச வாழ்க்கையை இராமன் விரும்பியதில் வியப்பு என்ன? அறிவுடைய எவனும் இதைச் செய்யப் பின் வாங்க மாட்டான். ஆனால், தந்தையின் வாக்கைப் பரிபாலனம் செய்யும் பொருட்டுக் காட்டுக்குப் போவதைக் காட்டிலும் போர்க்களத்துக்குப் போகாமல் வீட்டிலேயிருக்க நூறு மடங்கு மன உறுதி வேண்டும். பரிசுத்தமான இளம் உள்ளத்திலே முதன் முதலாகக் காதலித்த பெண்ணைப் பார்க்கப் போகாமல் இருப்பதற்கு அதைக் காட்டிலும் ஆயிரம் மடங்கு திடசித்தம் வேண்டும். இத்தகைய கடும் சோதனையில் நரசிம்மன் தேறியிருக்கிறான் என்பதை நினைக்கும்போது என் உள்ளம் பூரிக்கிறது. ஆனால், நான் அடைந்த படு தோல்வியை நினைக்கும் போது, என் உள்ளமும் உடம்பும் குன்றுகிறது. ஆமாம், சத்ருக்னா! மாமல்லன் என் சோதனையில் தேறி வெற்றியடைந்தான். ஆனால் சோதனையை ஏற்படுத்திய நான் படுதோல்வியடைந்தேன். என்னுடைய நோக்கமும் தோல்வியடைந்தது...''

சத்ருக்னன் அப்போது தலைநிமிர்ந்து சக்கரவர்த்தியைப் பார்த்தான். ''இதையெல்லாம் என்னிடம் ஏன் சொல்கிறீர்கள்? தயவு செய்து நிறுத்துங்கள்!'' என்று கெஞ்சுவதுபோல் அவனுடைய முகத்தோற்றம் இருந்தது.

''யாரிடமாவது சொல்லித்தான் ஆகவேண்டும், சத்ருக்னா! இல்லாவிடில் என் இருதயம் வெடித்து விடும் போலிருக்கிறது. உன்னிடம் சொன்னால் வெளியிலே போகாது. உன் மனதிற்குள்ளேயே அமுங்கி விடும் என்ற தைரியத்தினாலே சொல்கிறேன். ஆமாம்; என்னுடைய நோக்கம் நிறைவேறவில்லை. நரசிம்மனையும் சிவகாமியையும் பிரித்து வைத்திருந்தால், அவர்கள் ஒருவரையொருவர் பார்க்காமலிருந்தால், சிவகாமியின் காதல் வலையிலிருந்து நரசிம்மன் மீண்டு விடுவான் என்று நினைத்தேன். உண்மைக் காதலின் இயல்பை நன்கு உணராததினால்தான் அத்தகைய தவறு செய்தேன். உலகத்திலே நான் அறியாத விஷயம் ஒன்றுமில்லை என்று எண்ணி இறுமாந்திருந்தேன். அதன் தவறை இப்போது உணர்கிறேன். என் வாழ்நாளில் சொந்த அநுபவத்தில் காதலின் இயல்பை அறிந்து கொள்ள எனக்குச் சந்தர்ப்பம் ஏற்படவில்லை. இராஜ்யத்தின் நன்மையைக் கருதியே என் தந்தை எனக்குக் கல்யாணம் செய்து வைத்தார். என்னைவிட நரசிம்மன் பாக்கியசாலி. அவன் மூலமாக இப்போதுதான் உண்மைக் காதலின் தன்மை எனக்குத் தெரிய வருகிறது. காதலை நெருப்பு என்று கூறுவது முற்றும் பொருத்தமானது, சத்ருக்னா! நெருப்பு சொற்பமாயிருந்தால், காற்று அடித்ததும் அணைந்து விடுகிறது. பெரு நெருப்பாயிருந்தால், காற்று அடிக்க அடிக்க நெருப்பின் ஜுவாலை அதிகமாகிக் கொழுந்துவிட்

சத்ருக்னன் தலையிலிருந்த முண்டாசை எடுத்தான். அதற்குள்ளேயிருந்த ஓலைக் கத்தைகள் எட்டையும் எடுத்துத் தயக்கத்துடன் சக்கரவர்த்தியிடம் கொடுத்தான்.

மகேந்திரர் ஓலைகளை வாங்கிக்கொண்டார். ஒரே பார்வையில், அவற்றில் உள்ள எழுத்து மாமல்லருடையது என்று தெரிந்து கொண்டார்.

சற்று நேரம் ஓலைகளைக் கையிலேயே வைத்துக்கொண்டு சிந்தனை செய்தார்.

பிறகு, ஒற்றனைப் பார்த்து, "சத்ருக்னா! இராஜ்யம் ஆளுவதைப்போல் கொடுமையான காரியம் வேறொன்றும் இல்லை. இராஜ்யத்தின் நன்மைக்காக நான் இந்த நீசத்தனமான காரியத்தைக் கூடச் செய்யவேண்டியிருக்கிறது! மாமல்லனுடைய குழந்தை உள்ளத்தைக் கீறிப் பார்க்கும்படியான பயங்கரமான பாவத்தை நான் செய்ய வேண்டியிருக்கிறது!'' என்றார்.

அத்தியாயம் 14

மகேந்திரர் தவறு

சத்ருக்னன் கொடுத்த ஓலைகளைப் படித்து வந்தபோது, மகேந்திரருக்கு அடிக்கடி கைகள் நடுங்கின. பல தடவை பெருமூச்சு விட்டார்.

முதலிலே இரண்டு மூன்று ஓலைகளைச் சற்று சாவகாசமாகப் படித்தார். மற்றதையெல்லாம் விரைவாகப் பார்த்துக்கொண்டு போய் முடித்தார்.

கடைசியில் சத்ருக்னனைப் பார்த்துச் சொன்னார் :—"சத்ருக்னா! இந்த ஓலைகளை நீ கொண்டு வந்திருக்கக் கூடாது. என்னிடம் கொடுத்திருக்கக் கூடாது. இவற்றைக் கொண்டு வந்து கொடுத்ததினால் நீ மாமல்லனுக்கு மட்டும் துரோகம் செய்யவில்லை; எனக்கும் துரோகம் செய்திருக்கிறாய். கெட்ட காரியத்தை ஒருவன் செய்ய வேண்டி வரும்போது, அது எவ்வளவு கெட்ட காரியம் என்று தெரியாமலிருக்க விரும்புவான். இன்னொருவன் குறுக்கே வந்து 'நீ எவ்வளவு கெட்ட காரியம் செய்கிறாய் தெரியுமா?' என்று எடுத்துக் காட்டினால், அவன் பேரில் கோபந்தான் வரும். அந்த மாதிரிதான் உன் பேரிலும் எனக்குக் கோபம் வருகிறது ..."



"பல்லவேந்திரா! மன்னிக்க வேண்டும்..." என்றான் சத்ருக்னன்.

"உன்பேரில் தவறு ஒன்றுமில்லை. சத்ருக்னா! மன்னிப்புக் கேட்பதற்குரிய காரியம் எதுவும் நீ செய்யவில்லை. உன்னுடைய கடமையையே நீ செய்தாய். என் மனத்துக்கு அது அவ்வளவு வேதனை தரும் காரியம் என்பது உனக்கு எப்படித் தெரியும்? அரண்மனைத் தோட்டத்திலே ஒரு அழகான பூஞ்செடி முளைத்தது. அரண்யத்தின் நடுவிலே ஒரு மனோகரமான மலர்க் கொடி முளைத்தது. இரண்டும் இளந்தளிர்கள் விட்டு வளர்ந்தன. உரிய காலத்தில் அரும்பு விட்டுப் பூத்துக் குலுங்கின. அந்தப் பூஞ்செடியையும் மலர்க் கொடியையும் வேரோடு பிடுங்கி நெருப்பிலே போட்டுப் பொசுக்கும் பொறுப்பு எனக்கு ஏற்பட்டது. சத்ருக்னா! அது எவ்வளவு கொடுமையான, குரூரமான பொறுப்பு என்பதை இந்த ஓலைகளிலிருந்து அறிகிறேன்..."

மகேந்திர பல்லவர் பெருமூச்சு விட்டு விட்டு, "சத்ருக்னா! மாமல்லனின் கோமள இருதயத்தை நான் எவ்வளவு தூரம் புண்படுத்தியிருக்கிறேன், தெரியுமா? எவ்வளவு தூரம் அவன் மன உறுதியைச் சோதித்திருக்கிறேன், தெரியுமா? இந்த ஓலையில் அவன் எழுதியிருக்கிறதைக் கேள்" என்று கூறி ஓலையிலிருந்து பின்வரும் பகுதியை வாசித்தார்:—

"'என் ஆருயிரே! உன்னை வந்து வந்து பார்ப்பதற்கு என் உயிர், உடல், ஆவி அனைத்தும் துடிதுடித்துக் கொண்டிருக்கின்றன. இந்தக் காஞ்சிக் கோட்டையைப் போல் நூறு மடங்கு கட்டுக் காவலும் உள்ள கோட்டைக்குள்ளே என்னை வைத்திருந்தாலும், எல்லாக் கட்டுக் காவலையும் மீறிக்கொண்டு உன்னிடம் நான் பறந்து வந்து விடுவேன். கடல்களுக்கு நடுவிலுள்ள தீவில் இராவணன் சீதையைச் சிறை வைத்ததுபோல் உன்னை யாராவது வைத்திருந்தால், நான் அங்கும் உன்னைத் தேடி வந்தடைவேன். சொர்க்க லோகத்திலே இந்திரனும், பாதாள லோகத்திலே விருத்திராசுரனும் உன்னைச் சிறைப்படுத்தியிருந்தாலும், நான் உன்னை வந்து அடைவதைத் தடைப்படுத்த முடியாது. ஆனால் இதையெல்லாம் காட்டிலும் பெரியதாகிய ஒரு தடை வந்து குறுக்கிட்டிருக்கிறது. அது என் தந்தையின் கட்டளைதான். தாம் திரும்பி வரும் வரையில் அல்லது மறுபடி சொல்லி அனுப்பும் வரையில் காஞ்சிக் கோட்டையை விட்டு வெளியே போகக் கூடாதென்று மகேந்திரபல்லவர் எனக்குக் கட்டளையிட்டிருக்கிறார். சிவகாமி! இந்த உலகத்தில் என்னால் செய்ய முடியாத காரியம் ஒன்று உண்டு என்றால், அது என் தந்தையின் கட்டளையை மீறுவதுதான். நெற்றிக் கண் படைத்த சிவபெருமான் என் முன்னால் பிரத்தியட்சமாகி, மகேந்திர பல்லவரின் கட்டளைக்கு விரோதமாக ஒரு காரியத்தைச் செய்யச் சொன்னால், ஒரு நாளும் அதை நான் செய்யமாட்டேன். அவ்வளவு தூரம் என் பக்திக்குப் பாத்திரமான மகேந்திர பல்லவர் இப்போது என்னை எப்பேர்ப்பட்ட கொடுமைக்கு ஆளாக்கிவிட்டார் தெரியுமா? என்னுடைய உயிரைக் காட்டிலும் எனக்குப் பிரியமான காதலிகள் இருவரையும் நான் சந்திக்க முடியாதபடி செய்து விட்டார். அந்த இரண்டு காதலிகளில் ஒருத்திதான் ஆயனச் சிற்பியின் மகள் சிவகாமி. அவளை அரண்ய மத்தியில் உள்ள தாமரைக் குளக் கரையில் நான் சந்திக்க விரும்புகிறேன். இன்னொரு காதலி யார் தெரியுமா? அவள் பெயரை உனக்குச் சொல்லட்டுமா? சொன்னால், நீ அசூயையடையாமல் இருப்பாயா? அவள் பெயர் ஜயலக்ஷ்மி. அந்தக் காதலியை நான் இரத்த வெள்ளம் ஓடும் யுத்தகளத்தின் மத்தியில் சந்திக்க



பெரும்பாலும் அவருடைய காலத்தைக் கழித்துக் கொண்டு வந்தார்.

* * *

மேற்கூறிய விதம் சத்ருக்னன் தான் அறிந்து வந்த வரலாற்றையெல்லாம் கூறி முடித்த பிறகு, சக்கரவர்த்தி, "சத்ருக்னா! இதுவரையில் நீ கூறியது எதுவும் நீயே நேரில் வரும்படியான அவ்வளவு முக்கிய விஷயம் அல்ல. இன்னும் ஏதோ முக்கிய சமாசாரம் இருக்க வேண்டும்" என்றார்.

"ஆம், பிரபு!"

"அது என்ன?"

"சில ஓலைகள் கிடைத்தன. அவற்றைத் தங்களைத் தவிர யாரும் பார்க்கக் கூடாதென்று நேரில் கொண்டு வந்தேன்."

"என்ன? ஓலையா? என்ன ஓலை?" என்று சக்கரவர்த்தி வியப்புடன் கேட்டார்.

"பல்லவேந்திரா! ஒரு வேலை நான் செய்தது தவறாயிருந்தால் மன்னிக்க வேண்டும்......"

சக்கரவர்த்தி துள்ளி எழுந்து, "மூடனே! அப்படி ஏதாவது செய்து விட்டாயா? துர்விநீதனுக்குப் புலிகேசி அனுப்பிய ஓலையை........." என்று கூறியவர், சட்டென்று நிறுத்தி "என்ன ஓலை உன்னிடம் கிடைத்தது? சீக்கிரம் சொல்லு! எங்கே அது?" என்று கர்ஜித்துக் கொண்டே கையை நீட்டினார்.

"பல்லவேந்திரா! மன்னிக்க வேண்டும். நான் சொல்லும் ஓலை யுத்தத்தைப் பற்றியதல்ல. புலிகேசிக்குத் துர்விநீதனோ, துர்விநீதனுக்குப் புலிகேசியோ அனுப்பியதல்ல......"

"நல்ல வேளை! எங்கே அப்படி ஏதாவது அசட்டுத்தனமாய்க் குறுக்கிட்டுக் காரியத்தைக் கெடுத்து விட்டாயோ என்று பயந்து போனேன். பின்னே, எந்த ஓலையைச் சொல்கிறாய்?" என்று கேட்டார்.

"பல்லவேந்திரா! நான் கொண்டு வந்திருப்பது காதல் ஓலை!"

"ஆ!" என்ற வியப்பொலியுடன் சக்கரவர்த்தி தமது பீடத்தில் அமர்ந்தார். அவருடைய புருவங்கள் நெரிந்தன; நெற்றியில் சுருக்கங்கள் காணப்பட்டன.

சிரமப்பட்டு அமைதியை வருவித்துக் கொண்ட குரலில், முயன்று ஆவலை அடக்கிக் கொண்ட குரலில், "எங்கே? எடு ஓலையைப் பார்க்கலாம்!" என்றார்.





நந்தி ஏதேதோ வெகு நேரம் விசாரித்துக் கொண்டிருந்தார். அந்த இளம் பிக்ஷு சத்ருக்னனை வெறித்து வெறித்துப் பார்த்ததிலிருந்து சத்ருக்னனுடைய சந்தேகம் உறுதிப்பட்டது. எனவே, அன்று இளம் பிக்ஷு சத்ருக்னனுக்கு அளித்த உணவை அவன் உடனே சாப்பிடாமல் நதியின் வெள்ளத்தில் கொஞ்சம் போட்டுப் பார்த்தான். அதைச் சாப்பிட்ட மீன்கள் உடனே நீல நிறமாக மாறிச் செத்துத் தண்ணீரில் மிதந்ததைக் கண்டு, உணவை முழுதும் எறிந்து விட்டு, செத்தவன்போல் நதிக் கரையில் விழுந்து கிடந்தான். நாகநந்தியும் இளம் பிக்ஷுவும் சற்று நேரத்துக்கெல்லாம் அங்கு வந்து சத்ருக்னனைச் செத்தவனாகக் கருதி நதியின் வெள்ளத்தில் இழுத்து விட்டார்கள். சத்ருக்னன் சிறிது நேரம் தண்ணீருக்குள்ளேயே சென்று பின்னர் செடி கொடிகள் அடர்ந்த இடத்தில் கரையேறினான். அன்று இரவு நாகநந்திக்கும் இளம் பிக்ஷுவுக்கும் தெரியாதபடி அந்த புத்த விஹாரத்தையும் அதை அடுத்திருந்த குன்றுகளையும் சுற்றிப் பார்த்தான். குன்றுகளில் குடைந்திருந்த இரகசியக் குகைகளுக்குள் பலவகைப் போர்க் கருவிகள் சேகரித்து வைக்கப்பட்டிருப்பதைக் கண்டான். குன்றுகளைச் சுற்றி வந்தபோது ஒரு இடத்தில், கேட்டவுடனே இருதயம் நின்று போகும்படியான அவ்வளவு கோரமான சீறல் சத்தத்தைக் கேட்டான். அது என்ன சத்தம், எங்கிருந்து வருகிறது என்பதைக் கண்டு பிடிக்க அவன் ஆனமட்டும் முயன்றும் முடியவில்லை.

மறு நாள் உதயத்தில் புத்த பிக்ஷு அந்த இரகசிய புத்த விஹாரத்திலிருந்து புறப்பட்டு, சமுத்திரம் போல் அலை மோதிக் கொண்டிருந்த திருப்பாற் கடல் என்னும் ஏரிக்கரை வழியாக வடக்கு நோக்கிச் சென்றார். அவர் அறியாதபடி அவரைப் பின் தொடர்ந்து சத்ருக்னனும் சென்று, கடைசியில், ஆயனரின் அரண்ய வீட்டை அடைந்தான். அங்கே புத்த விக்ரகத்தின் பின்னால் ஒளிந்திருந்து நாகநந்திக்கும் ஆயனருக்கும் நடந்த சம்பாஷணையைக் கேட்டான். அதிலிருந்து; ஆயனரையும் அவர் மகளையும் அங்கிருந்து அழைத்துப் போவதில் நாகநந்தி சிரத்தை கொண்டிருப்பது தெரிய வந்தது. அதோடு, நரசிம்ம பல்லவரைப் பற்றி நாகநந்தி கூறிய அவதூறுகளையும் அவன் வேண்டா வெறுப்பாகக் கேட்கும்படி நேர்ந்தது.

தான் இல்லாதபோது ஆயனரைக் கவனித்துக் கொள்வதற்காகக் குண்டோதரன் என்பவனைச் சத்ருக்னன் விட்டு விட்டுப் போயிருந்தான். அவன் ஆயனரிடம் சிற்பக் கலையும் சித்திரக் கலையும் கற்கும் சீடனாக அமர்ந்து ஆயனர் வீட்டிலே இருந்து வந்தான். அவன் விசேஷமாகச் செய்தி ஒன்றும் சொல்லவில்லை. மாமல்லபுரத்திலிருந்து ஆயனர் அரண்ய வீட்டுக்குத் திரும்பி வந்ததிலிருந்து அங்கு அன்னியர் யாரும் வரவில்லை. சாரதி கண்ணபிரானும் அவன் மனைவி கமலியும் மட்டும் சில தினங்கள் வந்திருந்தார்கள். அவர்களும் அதிக நாள் அங்கே தங்கியிருக்கவில்லை. பிக்ஷுவும் சத்ருக்னனும் அங்கு வந்து சேர்ந்த அதே நாள் காலையில் பரஞ்சோதியும் கண்ணபிரானும் வந்து விட்டுப் போனதையும் குண்டோதரன் தெரியப் படுத்தினான்.

காஞ்சியில், நரசிம்ம வர்மரின் போக்கு வரவுகளைக் கவனித்து வரும்படி, கண்ணபிரானுடைய தந்தையையே சத்ருக்னன் ஏற்படுத்தியிருந்தான். நரசிம்ம வர்மர் சக்கரவர்த்தியின் கட்டளையைப் பரிபூரணமாக நிறைவேற்றி வைத்ததாக அவர் மூலம் தெரிய வந்தது. சென்று எட்டு மாதத்தில் காஞ்சியை விட்டு மாமல்லர் வெளியே போகவேயில்லை. காஞ்சிக் கோட்டையை முற்றுகைக்கு ஆயத்தம் செய்வதிலேயே

சிவகாமியின் சபதம்

கல்கி

அத்தியாயம் 13

சத்ருக்னன் வரலாறு

பாபாக்னி நதிக்கரையில் பல்லவ சைன்யத்தின் பாசறையில் ரிஷபக் கொடி கம்பீரமாகப் பறந்த கூடாரத்தின் உள்ளே மகேந்திர சக்கரவர்த்தி வீற்றிருந்தார். அவருக்கெதிரே சக்கரவர்த்தியின் அந்தரங்க ஒற்றனாகிய சத்ருக்னன் நின்று கொண்டிருந்தான். அவனைப் பார்த்தால் வெகுதூரம் பிரயாணம் செய்து வந்தவனாகக் காணப்பட்டது. உடம்பெல்லாம் சொட்டச் சொட்ட வியர்த்திருந்தது. எட்டு மாதத்துக்கு முன்னால் அவனைப் பார்த்ததற்கு இப்போது அடையாளம்கூடக் கண்டு பிடிக்க முடியாதபடி அவனுடைய உருவம் மாறிப் போயிருந்தது.

சக்கரவர்த்தி, சத்ருக்னனை உற்றுப் பார்த்துவிட்டு, "யார், சத்ருக்னனா?" என்று கேட்டார்.

"அடியேன்தான், பல்லவேந்திரா!"

"ரொம்பவும் மாறிப் போயிருக்கிறாய்!"

"ஆமாம், பிரபு!"

"சில பேர் கஷ்டங்களினாலும் உழைப்பினாலும் மெலிந்து போவார்கள்......"

"சக்கரவர்த்தியின் சேவையில் எவ்வளவு கஷ்டங்களை அனுபவித்தாலும் என் தேகம் புஷ்டி யடைகிறது, பிரபு!"

"சந்தோஷம், சத்ருக்னா! எட்டு மாதத்துக்கு முன்பு உன்னிடம் ஏதோ முக்கியமான காரியத்தை ஒப்படைத்ததாக ஞாபகம். என்ன காரியம் என்று நினைவில்லை, உனக்கு நினைவிருக்கிறதா?" என்று மகேந்திரர் கேட்டார்.

சத்ருக்னன் முகத்தில் புன்னகை தோன்றியது. "நன்றாக நினைவிருக்கிறது, பிரபு! வேறு நினைவே எனக்குக் கிடையாது!" என்றான்.

"அது என்னவென்று எனக்கும் ஞாபகப்படுத்து, பார்க்கலாம்!" என்றார் சக்கரவர்த்தி.

"நாகநந்தி பிக்ஷுவை இடைவிடாது பின்தொடரச் சொன்னீர்கள்."

"ஓஹோ! அப்புறம்?"

"ஆயனரைக் கவனிப்பதற்கு ஆள் போடச் சொன்னீர்கள்."

"அவ்வளவுதானா?"

"இன்னும் ஒரு கடினமான வேலையும் கொடுத்தீர்கள், பிரபு! அதைச் சொல்ல யோசனையாயிருக்கிறது."

"தாராளமாய்ச் சொல்லு! அது என்ன, அப்பேர்ப்பட்ட காரியம்?"

சத்ருக்னன் மிக மெல்லிய குரலில், "குமார சக்கரவர்த்தியின் போக்கு வரவுகளைக் கவனிக்கும்படி சொன்னீர்கள்!" என்றான்.

"ஆ! உண்மைதான்; ஞாபகம் வருகிறது. வேறு ஏதாவது சொன்னேனா?"

"ஏதேனும் முக்கியமான தகவல் கிடைத்தால், நம்பிக்கையான ஆள் மூலம் அனுப்பச் சொன்னீர்கள்."

"அப்புறம்?"

"ரொம்ப முக்கியமான செய்தியாயிருந்தால் என்னையே நேரில் வரச் சொன்னீர்கள்."

"அப்படியானால், ரொம்ப முக்கியமான செய்தி கொண்டு வந்திருக்கிறாய் போலிருக்கிறது."

"ஆம், பல்லவேந்திரா! வேறு யாரிடமும் அனுப்ப முடியாத செய்தி; அதனால்தான் நானே வந்தேன்."

"ஒவ்வொன்றாகச் சொல், பார்க்கலாம்! முதலில், நாகநந்தியைப் பற்றிச் சொல்லு."

அதன்மேல் சத்ருக்னன் நாகநந்தியைத் தான் பின் தொடர்ந்தது பற்றிச் சொன்னான். அந்த வரலாறு வருமாறு:—

நாகநந்தி பரஞ்சோதியிடம் ஓலை கொடுத்து அவனை நாகார்ஜுன மலைக்குப் போகும்படி அனுப்பிய பிற்பாடு, தெற்கே கிளம்பிப் போனார். சத்ருக்னனும் அவரைப் பின் தொடர்ந்து போனான். கெடில நதிக் கரையில் அடர்ந்த காடும் சிறிய குன்றுகளும் சூழ்ந்த ஓர் இடத்தில் கட்டியிருந்த புத்த விஹாரத்தை அடைந்து சில தினங்கள் தங்கினார். அங்கேயிருந்த புத்த பிக்ஷுக்கள் சிலருக்கு ஏதேதோ செய்தி சொல்லி நாலாபுறமும் அனுப்பினார். அவர்களில் ஒருவர் உறையூருக்கும் இன்னொருவர் தலைக்காட்டுக்கும் சென்றதாகத் தெரிந்தது.

பிறகு, நாகநந்தி மறுபடியும் தெற்கு நோக்கிப் பிரயாணமானார். கொள்ளிடத்தையும் காவேரியையும் கடந்து நாகப்பட்டினம் சென்றார். அங்கேயிருந்து புத்த பிக்ஷுக்கள் இருவரை இலங்கைக்குக் கப்பலில் அனுப்பிவிட்டு மதுரைக்குப் பிரயாணமானார். மதுரைக்கு நாகநந்தியும் சத்ருக்னனும் போன சமயம், மாறவர்ம பாண்டியன் கடும் நோய் வாய்ப்பட்டு 'இன்றைக்கோ, நாளைக்கோ' என்றிருந்தான். அடுத்தபடி பட்டத்துக்கு வரவேண்டிய இளம் பாண்டியனுடைய கட்டளையினால் அசலூர்க்காரர்கள் எல்லாரும் சிறையில் அடைக்கப் பட்டார்கள். நாகநந்தியும் சத்ருக்னனும் ஒரே சிறையில் இருக்கும்படி நேர்ந்தது. சத்ருக்னன் தனக்கு உறையூர் என்றும், ஸ்தல யாத்திரை கிளம்பி வந்ததாகவும் நாகநந்தியிடம் சொன்னான். அவன் பேச்சை அவரும் நம்பியதாகவே தோன்றியது. இவர்கள் சிறையில் இருக்கும்போதே மாறவர்மன் காலமாகிச் சடையவர்மன் சிம்மாசனம் ஏறினான். பின்னர் இவர்களுக்கு விடுதலை கிடைத்தது. நாகநந்தி புதிய பாண்டியனைச் சந்தித்தார். அவர்களுக்குள் பல தினங்கள் பேச்சு வார்த்தை தொடர்ந்து நடந்தது. இதற்கிடையில், மாமல்லருக்குப் பெண் கொடுக்கும் விஷயமாகக் காஞ்சிக்குப் போயிருந்த தூதர்கள் திரும்பி வந்தார்கள். மறுபடியும் சில நாள் நாகநந்திக்கும் சடையவர்மனுக்கும் சம்பாஷணை நடந்த பிறகு, பாண்டியன் நாடெங்கும் படை திரட்டும்படி கட்டளை பிறப்பித்தான்.

நாகநந்தி பிறகு மதுரையிலிருந்து கிளம்பி வடக்கு நோக்கிப் பிரயாணமானார். சிறையிலே அவருடன் சிநேகமானதை முகாந்திரமாகக் கொண்டு சத்ருக்னனும் அவரோடு புறப்பட்டான். வழியெல்லாம் புத்த பிக்ஷு பெரும் சிந்தனையில் ஆழ்ந்தவராய்க் காணப்பட்டார். சாலையில் வடக்கேயிருந்து வந்த பிரயாணிகளையெல்லாம் தொண்டை மண்டலத்தில் ஏதாவது விசேஷம் உண்டா என்று கேட்டுக் கொண்டு வந்தார். அவர் மிகவும் சாமர்த்தியமாகக் கேள்வி கேட்டுக் கொண்டு வந்த போதிலும், இதுவரை வாதாபிப் படைகள் காஞ்சி நகரத்துக்கு வராதது அவருக்கு ஆச்சரியம் விளைவித்ததாகத் தோன்றியது. காவேரியையும் கொள்ளிடத்தையும் தாண்டி அவர்கள் கெடில நதிக் கரையில் இருந்த புத்த விஹாரத்துக்கு வந்து சேர்ந்தார்கள். இதற்குள்ளாகச் சத்ருக்னனுக்குப் புத்த பிக்ஷு தன்னை ஒற்றன் என்று தெரிந்து கொண்டிருக்கிறார் என்ற சந்தேகம் உண்டாகியிருந்தது. அச்சமயம் அந்த புத்த விஹாரத்தில், ஏற்கெனவே காஞ்சி இராஜ விஹாரத்தில் இருந்த இளம் புத்த பிக்ஷு மட்டுந்தான் இருந்தான். அவனை நாக

சேராத கடிதம்

நிகழும் 1944-ம் வருஷம் செப்டம்பர் மாதம் 7உ-க்கு, கடந்த ஆகஸ்டுமீ 19உ எழுதிக்கொள்வது:—

தம்பி! அநேக ஆசீர்வாதம். செப்டம்பர்மீ 6உ இரவு 12 மணிக்கு ஜனிக்கப்போகும் உனக்கு நான் உன்னுடைய மூத்த சகோதரன் என்ற முறையில் சில புத்திமதிகள் சொல்ல விரும்புகிறேன். காந்தி-ஜின்னா புண்ணியத்தால் இந்திய சரித்திரத்திலேயே மிகப் பிரசித்தி வாய்ந்த தினம் என்ற நல்ல பெயரை நான் அடையவிருந்தேன். என்னுடைய துரதிருஷ்டமோ, இல்லை உன்னுடைய நல்ல அதிர்ஷ்டம் தானோ, அந்தப் பெயர் எனக்குக் கிடைக்காமல் போய் விட்டது.



" ஆகஸ்டுமீ 19உ காந்திஜியும் ஜின்னாவும் கூடி 'பாகிஸ்தானை'ப் பற்றிப் பேசி ஒரு சமரச முடிவுக்கு வந்தார்கள். அந்த முடிவின் பலனாய் பிரிட்டிஷ்காரர்கள் திணறிப்போய் வேறு சாக்குப் போக்குச் சொல்ல முடியாமல் இந்தியா தேசத்துக்குச் சுதந்திரம் அளித்து விட்டார்கள்" என்று இந்திய சரித்திரத்திலேயே பொன்னெழுத்தில் பொறிக்கப்படவேண்டிய அரிய சந்தர்ப்பம் வீணாகி விட்டது. என்னுடைய ஆசையில் பாழாய்ப் போன அந்த 'ஜுரம்' மண்ணை வாரிப் போட்டுவிட்டது.

நடந்ததை நினைத்து வருத்தப்படுவதில் என்ன பயன்? போகட்டும்; நீயாவது அந்த நல்ல பெயரை அடையவேண்டுமென்பது தான் என் ஆசை. தமக்கு ஜுரம் நீங்கி விட்டதென்றும் செப்டம்பர் 7உ யன்று சந்திக்கலாமென்றும் ஜனாப் ஜின்னா காந்திஜிக்குக் கடிதம் எழுதியிருக்கிறார். எனவே, நாட்டின் விதி உன்னிடம்தான் ஒப்படைக்கப்பட்டிருக்கிறது. "காந்தி-ஜின்னா 7உ சந்தித்தார்கள். ஆனால் திருப்திகரமான ஒரு முடிவுக்கும் வரவில்லை" என்று பண்ணிவிடாதே. "நான் செய்வது நல்லோர் செய்யார்" என்ற பழமொழியை ஞாபகத்தில் வைத்துக் கொண்டு நல்ல பெயரைச் சம்பாதித்துக் கொள்.

இப்படிக்கு,
உன் அன்புள்ள சகோதரன்,
ஆகஸ்டு 19உ 1944.



தஞ்சை காங்கிரஸ் தலைவர் ஸ்ரீ வி. டிவ ராஜன் அவர்களின் குமாரர் சிரஞ்சீவி பி. வநான்யனுக்கும் ஸ்ரீ டி. எஸ். எஸ். ராகவன், ஐ. ஸி. எஸ். அவர்களின் குமாரி சௌபாக்யவதி பத்மாவுக்கும் ஜூலை 12-ம் தேதி சென்னையில் விவாகம் சிறப்பாக நடந்தேறியது.



சேலம் ஸ்ரீ ப. மா. பழனிசாமி பண்டாரம் அவர்களின் குமாரன் சிரஞ்சீவி எம். பி. கயகரத்தினத்திற்கும், பவானி திரு செங்கோட பண்டாரம் அவர்களின் குமாரி சௌபாக்யவதி சுப்புலக்ஷ்மிக்கும் ஜூலை மாதம் 3-ம் தேதி யன்று பவானியில் விமரிசையாகத் திருமணம் நடந்தது

வான சஞ்சாரம்

"இசைத் தேனீ"

ஆகஸ்டு 24ல் திருச்சி நிலையத்தில் பாடிய என். ஜி. சீதாராமன் குருவுக்கேற்ற சிஷ்யராகவே விளங்கினார். அவர் முசிறி சுப்ரமணிய அய்யரின் சிஷ்யரல்லவா? ராகங்களையும் உருப்படிகளையும் நின்று நிதானித்து நிம்மதியாய்ப் பாடினார். சாதாரணமாய்க் காணப்படும் பிர்க்கா நிறைந்த ஓட்டமான சங்கீதமாயில்லை. முக்கியமாய் பைரவியிலும் காம்போதியிலும் ஒவ்வொரு பிடியும் அழுத்தமும் தெளிவும் கொண்டிருந்தது. வாசஸ்பதி ராகம் மிகவும் ரஞ்சகமாயிருந்தது. ஆனால் நாதநாமக்கிரியாவில் பாடிய 'மாயாதீத' என்ற பதத்தில் எல்லோரும் நன்கு அறிந்த சில பிடிகளும் ஒதுக்கல்களும் காணப்படவில்லை.

25ல் அதே நிலையத்தில் சீர்காழி என். கே. சதாசிவம் பிள்ளை செய்த கச்சேரி நல்ல அழகுபாணி வாய்ந்ததாயிருந்தது. மத்யம கால நடை; நல்ல ஸ்தாயி; சஞ்சாரங்களும் பிருவான பிடிகளும் நிறைந்திருந்தன. பந்துவராளி ராகத்தில் அழுத்தமான கமகப் பிடிகளும் காணப்பட்டன.

முசிறி சுப்ரமணிய அய்யர் 26ல் சென்னை நிலையத்தில் செய்த கச்சேரியை பழைய ஞானங்களை வைத்துக் கொண்டுதான் அனுபவிக்க வேண்டி வந்தது. விஜயஸ்ரீ என்ற அபூர்வ ராகம் பாடியது மேன்மைதான். அசாவேரியும் பரவாயில்லை. அவரிடம் பிரத்யேகமாய் எதிர்பார்க்கப்படும் மேனசக்ர ராகமாலிகையும் பாடினார். சாரீரம் அவர் இஷ்டப்படி அதிகம் ஒத்துழைக்கவில்லை. அதற்காக அதை அடக்கி அதி சன்னமாகக் காட்டிவிட்டார்.

ஆண் பிள்ளைகளின் சங்கீதத்தில்தான் கனமும், சக்தியும், பிருவும் அதிகமிருக்கும் என்று யாரும் கர்வம் கொள்ளவேண்டாம். ஸ்திரீகளிலும் அப்படிப்பட்டவர்கள் இருக்கிறார்கள் என்று 27ல் சென்னை நிலையத்தில் வித்வேஸ்வரம்மா நிரூபித்துவிட்டார். அவர் சாரீரம் விரம் பேசியது. மோஹனம் பிலஹரி ஸ்ரீரஞ்சனி முதலிய ராகங்களை செய்ய பிருவுடன் கையாண்டார். 'நா ஜீவாதார' 'நனுபாலிம்ப' என்ற கிருதிகளை அழுத்தம் திருத்தமாய்ப் பாடினார்.

28ல் திருச்சியில் செம்மாதேவி குருஸ்வாமி பிள்ளை வாசித்த நாகஸ்வரம் மிகவும் ரஸிகத்தக்கதாயிருந்தது. அடாணா நாடையும் அழகு பிடிகளுடன் கொண்டிருந்தது. [illegible]. செஞ்சுருட்டி, தோடி முதலிய ராகங்கள் நீண்ட நீளமாயிருந்தன. அன்று முகாரியும் அபேக்ஷமாயிருந்தது.

அன்று திருச்சி நிலையத்தில் கேட்ட ஸ்ரீ தஞ்சாவூர் நாராயணசாமி பிள்ளையவர்களின் கச்சேரி எல்லாவற்றையும் தூக்கி யடித்தது. ராகங்களில் சஞ்சாரங்களெல்லாம் மிக ஒழுங்காயும் படிப்படியாயும் பாணியாயும் இருந்தன. கௌரி மனோஹரி, கல்யாணி, காம்போதி இவை அதிகச் சிறப்பு வாய்ந்திருந்தன. சில பாடகர்களைப் போல் மேலேயே சுற்றிக்கொண்டிருக்காமல் கீழ் ஸ்தாயிகளிலும் நன்கு அனுபவிக்கும்படி பாடினார். 'எல்லாம் சிவன் செயல் என்று கவலையை விடு மடநெஞ்சே' என்ற உருப்படியை அழுத்தமாயும் சௌக்கியமாயும் உருக்கமாயும் பாடி மனதைக் கவர்ந்தார்.

29ல் சென்னையில் வேதாசலம் செட்டியார் செய்த கச்சேரி எதிர்பார்த்ததற்கு மேலாகவே யிருந்தது. சங்கராபரணமும், சாவேரியும் சிறப்பாய் விளங்கின. அவர் பாடிய மணிரங்கு ராகத்துக்கும் அதில் "நாத நீ செவி வாராய்" என்ற உருப்படிக்குமே முதல் ஸ்தானம் கொடுக்க வேண்டும்.



ஸ்ரீ வேதாசலம்

கேட்டுப் பாருங்கள்!

செப்டம்பர் 3ல் சென்னையில் ஸ்ரீ ஆர். என். கோபாலகிருஷ்ணனின் வயலினுக்கும், திருச்சியில் ஸ்ரீ கே. பி. சிவானந்தம் பிள்ளையின் வீணைக்கும் உங்கள் ரேடியோப் பெட்டியைத் திறந்து வைக்கலாம்.

4ல் சென்னையில் ஸ்ரீ எம். என். ரங்கராஜுவின் பிர்க்கா சங்கீதம்; திருச்சியில் மைலம் வஜ்ரவேலு முதலியாரின் தமிழிசை. உங்களுக்கு எது இஷ்டமோ, அதைக் கேட்கலாம்.

5ல் சென்னையில் ஸ்ரீ என். சோமசுந்தரமும் ஸ்ரீமதி எம். கல்பகமும் பாடுகிறார்கள்.

6ல் சென்னையில் ஸ்ரீ என். சங்கரன் பாட்டு மத்தியானம் ஒரு மணிக்கும், இராத்திரி எழு மணிக்கும் நடக்கிறது. வித்வத் ததும்பும் உயர்ந்த சங்கீதம் என்று கேள்வி.

திருச்சியில் அன்று மாயவரம் முத்துசாமி ஐயரின் இனிய வயலின் கச்சேரி.

சென்னையில் இரவு 8-மணிக்குச் சித்தூர் சுப்ரமணியப் பிள்ளை பூர்வ கல்யாணி சத்தில் ராகம், தானம், பல்லவி சக்கைப் போடு போடுகிறார்.

7ல் ஸ்ரீமதி ஏ. ஆர். சுந்தரம் பக்க வாத்தியங்களுடன் கச்சேரி செய்கிறார். திருச்சியில் சித்தூர் சுப்ரமணியம் [illegible].

8ல் திருச்சியில் திருவாடுதுறை என். ஆர். நடராஜ சுந்தரம் பிள்ளையின் நாகஸ்வரம்; பிரமாதமான வாசிப்பு.

9ல் சென்னையில் "அறிவிக்கப்படும்" கச்சேரி; திருச்சியிலும் அதுவேதான்.

விதமான விடுதலையையும் எப்படிப்பட்ட அரசாங்கத்தையும் சிபார்சு செய்கிறாரோ, அதை இந்தியாவுக்கும் கொடுத்தால் போதும் என்று நாம் மனப்பூர்வமாகச் சொல்கிறோம்.

ஒரு தேச மக்கள் சுதந்திரத்தை அநுபவிப்பதற்கு என்னென்ன நிபந்தனைகள் உண்டு என்பதை நமது பிரதம மந்திரி சர்ச்சில் சமீபத்தில் இதாலிக்குப் போயிருந்தபோது வெகு அழகாக எடுத்துச் சொன்னார். அந்த நிபந்தனைகள் வருமாறு:—

“ஒரு நாட்டின் அரசாங்கத்தைக் குறை கூறவும், எதிர்க்கவும், குற்றங்கள் கண்டு பிடிக்கவும் அந்நாட்டு ஜனங்களுக்குப் பூரண உரிமை இருக்கிறதா? ஜனங்களுக்கு ஒரு அரசாங்கத்தைப் பிடிக்கவில்லையென்றால் அதை அப்புறப் படுத்திவிட்டு வேறு அரசாங்கத்தை அமைப்பதற்குச் சட்ட பூர்வமான ஏற்பாடு இருக்கிறதா? சர்க்கார் அதிகாரிகளின் பலாத்காரத்துக்கோ, ஜனங்களின் பலாத்காரத்துக்கோ, கட்சிக் கட்டுப்பாட்டுக்கோ உட்படாத நியாய ஸ்தலங்கள் இருக்கின்றனவா? ஏழைகளுக்கும் பணக்காரர்களுக்கும் தனி மனிதர்களுக்கும் சர்க்கார் உத்தியோகஸ்தர்களுக்குமிடையே நடு நிலைமையான நியாயம் வழங்கப் படுகிறதா? போலீஸ்காரர்களோ, நாஜி-பாஸிஸ்ட் கட்சி அமைப்புகளைச் சேர்ந்த குண்டர்களோ இடீரென்று வந்து ஒருவனுடைய தோளைத் தட்டி, வழக்கு விசாரணை ஒன்றுமில்லாமல் அவனைக் கொண்டு போய்ச் சிறையில் அடைத்து விடலாம் என்ற பயம் இல்லாமல் வாழ முடியுமா?”

ஒரு நாடு சுதந்திரத்துக்குத் தகுதியா என்று தீர்மானிப்பதற்கு மேற்கண்டவைதான் நிபந்தனைகள் என்று கனம் சர்ச்சில் — பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தின் பிரதம மந்திரி சர்ச்சில்தான் — சொல்கிறார். அந்த நிபந்தனைகளை அப்படியே நாம் ஒப்புக் கொள்கிறோம். அவற்றை நிறைவேற்றி வைக்கும்படி கேட்டுக் கொள்கிறோம். அப்படிச் சர்ச்சிலால் நிறைவேற்ற முடியாவிட்டால், கொஞ்சம் விலகி நின்று நமக்கு ஒரு சந்தர்ப்பம் கொடுக்குமாறு கேட்டுக் கொள்கிறோம்.

இவ்வளவையும் எழுதிய பிறகு நமக்கு ஒரு பயங்கரமான சந்தேகம் உதிக்கிறது.

சர்ச்சில் இதாலியில் சொன்ன மேற்கூறிய வாக்கியங்களை இந்தியாவிலே நாம் பிரசுரிக்கலாமா? அப்படிப் பிரசுரித்ததற்காக நமக்குச் சென்னை மாகாண பிரஸ் அட்வைஸரிடமிருந்து எச்சரிக்கை வருமா? அல்லது பெரிய பெரிய பத்திராதிபர்கள் அடங்கிய பிரஸ் அட்வைஸரி கமிட்டியார் நமக்கு ஒரு பலமான கடைசி எச்சரிக்கை அனுப்புவார்களா? அல்லது அவர்களுடைய சிபார்சை மீறி இன்னும் பெரிய நடவடிக்கைதான் எடுத்துக் கொள்ளப்படுமா?

இந்தப் பயங்கர சந்தேகங்களின் காரணமாக நமது நேயர்களைக் கேட்டுக் கொள்கிறோம்:— சர்ச்சிலின் பேச்சை மறந்து விடுங்கள்! அவர் இதாலிக்குப் போகவே இல்லை, போயிருந்தாலும் மேற்கண்டவாறு பேசவில்லை, பேசியிருந்தாலும் மேலே அது அச்சடிக்கப் படவில்லையென்பதாக எண்ணிக் கொள்ளுங்கள்.

சர்ச்சிலின் பேச்சைப் பற்றி யோசிப்பதைக் காட்டிலும், கல்கத்தா டிராம் வண்டியில் திபேத் லாமா என்ன சொன்னார் என்பதைப் பற்றிச் சிந்தியுங்கள்.

“இராமருக்குச் சீதை என்ன சொன்னான்?” என்று கேட்ட பாட்டிக்கு, “கன்னத்தில் அறைந்து கைச் செம்பைப் பிடுங்கச் சொன்னான்!” என்று திருடன் பதில் சொன்னதையும் எண்ணிப் பாருங்கள்!

அரங்கத்திலும் அதே காரியத்தை பிரிட்டிஷ் அமெரிக்கத் துருப்புகள் செய்து வருகின்றன.

பிரான்ஸில் நார்மண்டி கடற்கரையில் முதல் முதலில் பிரிட்டிஷ் — அமெரிக்கத் துருப்புகள் இறங்கியபோது, அது உண்மையில் இரண்டாவது போர்முனைதானா என்றே அநேகர் சந்தேகப்பட்டார்கள்.

அது இரண்டாவது போர்முனைதான் என்று ஏற்பட்டதுடன், பிரான்ஸிலேயே மூன்றாவது போர்முனையும் சமீபத்தில் ஆரம்பமாகி விட்டது.

பிரிட்டிஷ் அமெரிக்கப் படைகள் எதிர்பார்த்ததைக் காட்டிலும் அதிக விரைவாகவே முன்னேறின. ஜெர்மன் எதிர்ப்பு எதிர்பார்த்ததைக் காட்டிலும் குறைவாயிருந்தது.

இந்த நிலைமையில், புரட்சி நடத்துவதில் சற்றும் இளைப்பும் இல்லாதவர்களான பாரிஸ் நகரத்து மக்கள் ஏகமாகக் கிளம்பி ஜெர்மன் படைகளை அந்த நகரிலிருந்து கிளப்பி விட்டார்கள். பிரிட்டிஷ் அமெரிக்கப் படைகளின் சேனாதிபதி ஈஸன்ஹவர் தமது பரிவாரங்களுடன் பாரிஸ் மாநகரில் வெற்றி ஊர்வலமும் விட்டு விட்டார்.

இப்போது பிரிட்டிஷ் — அமெரிக்கப் படைகள் ஜெர்மன் எல்லையை அடைவதற்கு இன்னும் எவ்வளவு மைல் இருக்கிறது என்று தினம் கணக்கு வெளியாகிக் கொண்டிருக்கிறது!

* * *

பிரான்ஸிலே, பிரிட்டிஷ்-அமெரிக்க-கனடாப் படைகள் யுத்தம் செய்து ஜெர்மானியர்களைத் துரத்தி வருகின்றன. கூடிய சீக்கிரத்தில் பிரான்ஸ் முழுதும் ஜெர்மனியிடமிருந்து விடுதலை யடையலாம்.

விடுதலை யடைந்த பிறகு, பிரான்ஸின் நிலைமை எப்படி யிருக்கும்?

இந்தப் பிரச்னையைக் கிளப்பி முடிவு பெறுவதற்கு பிரிட்டிஷ் — அமெரிக்கப் படைகளைப் பின் தொடர்ந்து தளபதி டிகாலும் பிரான்ஸுக்குள் போய் விட்டார்.

பாரிஸ் விடுதலை யடைந்ததும் தளபதி டிகால் பிரெஞ்சு மக்களுக்கு விடுத்த அறிக்கையைப் படிக்கும்போது நமக்கே ரோமாஞ்சனம் உண்டாகிறது. மார்பைத் தட்டிக்கொண்டு, ''பிரான்ஸ் வாழ்க!'' என்று கோஷிக்கத் தோன்றுகிறது.

''பிரெஞ்சு மக்களே! உங்கள் மகிமை என்ன? உங்கள் வீரம் என்ன? உங்கள் தேகத்தில் ஓடும் இரத்தம் எப்பேர்ப்பட்ட இரத்தம்? கிளம்புங்கள்! ஜெர்மனிக்குள்ளே நேசப் படைகள் புகும்போது நாம் முன்னணியில் நிற்போம். எல்லாருக்கும் முன்னால் நாம் பெர்லினுக்குப் போய்விடுவோம்!'' என்கிறார் தளபதி டிகால்.

''சமாதான மேடையில் நமக்கு இல்லாத ஸ்தானம் வேறு யாருக்கு? நம்மைக் கேட்காமல் யார் என்ன செய்ய முடியும்?'' என்று கர்ஜிக்கிறார்.

''ஜப்பானுடனும் நாம் வீரச் சண்டை போடுவோம்!'' என்று வாளை உருவுகிறார்.

சமாதான மகாநாட்டில் பிரிட்டனுக்கும் அமெரிக்காவுக்கும் ருஷியாவுக்கும் சமமான ஸ்தானத்தை டிகால் பிரான்ஸுக்கும் கோருகிறார். எல்லாவற்றையும் யோசிக்கும்போது, அவருடைய கோரிக்கை நிறைவேறினால் அதில் ஆச்சரியம் ஒன்றும் இராது.

* * *

இவ்வாறு நேற்று வரையில் ஜெர்மனியுடன் சேர்ந்திருந்து கொலை பாதக யுத்தம் நடத்திய தேசங்கள் எல்லாம் சுதந்திரம் பெற்று நேச நாடுகளுடன் சம உரிமையும் சம அந்தஸ்தும் பூண்டு வாழப்போகின்றன!

பிரான்ஸ், இதாலி, ருமேனியா, பல்கேரியா முதலிய தேசங்களுக்குச் சுதந்திரம் உண்டா என்ற பிரச்னையை யாரும் கிளப்பக் காணோம். அவையெல்லாம் சுதந்திரத்துக்கு லாயக்கானவை. சுதந்திரத்துடனே வாழப் போகின்றன என்பது தீர்ந்துபோன விஷயமாகக் கருதப்படுகிறது.

அந்த நாடுகளில் இப்போதே சுதந்திர அரசாங்கங்கள் ஏற்பட்டு நடந்து வருகின்றன.

ஆனால், இந்த யுத்தத்தில் ஆதி முதல் ஈடுபட்டு, தன் சக்திக்கு மேற்பட்ட ஒத்தாசை செய்து வந்திருக்கும் இந்தியாவின் கதி என்ன?

இந்தியாவுக்குச் சுதந்திரம் உண்டா? விடுதலை உண்டா? சமாதான மகாநாட்டில் மற்ற நேச நாடுகளுடன் சம பீடம் உண்டா?

பிரான்ஸுக்கும் இதாலிக்கும் பிரிட்டிஷார் கொடுக்கப்போகும் சுதந்திரத்தையும் அந்தஸ்தையுமாவது இந்தியாவுக்குக் கொடுக்கப்போகிறார்களா?

நெருக்கடியான சமயத்தில் பிரிட்டனை முதுகிலே குத்திய இதாலிக்கு நமது பிரதம மந்திரி சர்ச்சில் எந்த

இதை மூன்று வருஷத்துக்கு முன்பே நாம் சொன்னோம்.

"கல்கி"யின் இரண்டாவது இதழிலேயே, "ருஷியா யுத்தத்தில் சேர்ந்து விட்டபடியால், யுத்த நிலைமை மாறி விட்டது. ஆகையால் நமது யுத்தக் கொள்கையையும் மாற்றிக் கொள்ள வேண்டும்" என்று எழுதியிருந்தோம்.

"தர்மக் கட்சியானது ஜயிக்கிற கட்சி என்றும் நிச்சயமாகி விட்ட பிறகு, நாம் எதற்காக யுத்தத்திலிருந்து விலகி நிற்க வேண்டும்?" என்றும் கேட்டிருந்தோம்.

காங்கிரஸின் யுத்தக் கொள்கையை மாற்ற வேண்டும் என்று நாம் சொன்னபோது, ஏதோ ருஷியாவுக்கு நாம் பிரமாத உதவி செய்து புரட்டப் போகிறோம் என்பதற்காகச் சொல்லவில்லை. நம்முடைய உதவி ருஷியாவுக்குத் தேவையாகவும் இருக்கவில்லை.

நமக்கு நாமே உதவி செய்து கொள்வதற்காகத்தான் யுத்த முயற்சியில் சேர வேண்டும் என்றோம்; அதற்காகத்தான் அரசாங்கப் பொறுப்பை ஏற்றுக் கொள்ள வேண்டும் என்றோம்.

அந்தக் காலத்தில் இதை அநேகர் ஒப்புக் கொள்ளவில்லை.

ஹிட்லர் செய்த தவறைத்தான் இந்த நாட்டிலும் அநேகர் செய்தார்கள்.

ஹிட்லரானது தமது தவறைப் பிற்பாடு ஒப்புக் கொண்டார்.

"இவ்வளவு சிறு பின்லாந்துடன் ருஷியா ஒரு வருஷம் சண்டை போட்டு ஜயிக்க முடியாமல் திண்டாடியதைக் கண்டு நான் ஏமாந்து போய்விட்டேன். அது பெரிய பிரம்மாண்டமான 'காமொப்ளேஜ்' (Camouflage) வேலை என்று இப்போது தெரிகிறது" என்றார்.

ஆனால், நமது தேசத்தில் அநேக புத்திசாலிகள் அதைக் கூட ஒப்புக் கொள்ளவில்லை. திடீரென்று ஒரு நாளைக்கு ருஷியாவும், ஜெர்மனியும் சிநேகமாகிவிடப் போகிறது என்றே நம்பிக் கொண்டிருந்தார்கள். ருஷியப் படைகள் ருஷியாவின் எல்லைக்கு வந்ததும் கிழக்கு அரங்கத்தில் யுத்தம் நின்றுவிடும் என்று ஆவலோடு நம்பிக் கொண்டிருந்தார்கள்.

ஆனால் இவர்களுடைய ஆசையும் நம்பிக்கையும் நிறைவேறுகிற வழியாகக் காணோம். ருஷியப் படைகள் ருஷியாவின் எல்லைக்கு வந்து நின்றுவிடவில்லை. அவை வடக்கே ஜெர்மனியைச் சேர்ந்த பிரஷ்யாவுக்குள் புகுந்திருக்கின்றன. மத்தியில் போலந்துக்குள் புகுந்து முன்னேறி வருகின்றன. தெற்கே, ருமேனியாவுக்குள்ளும் வெகுதூரம் புகுந்திருக்கின்றன.

இதன் பயனாக, ருமேனியாவில் ஒரு ஆச்சரியமான மாறுதலைக் காண்கிறோம். ருஷியாவை ஜெர்மனி தாக்கியபோது ருமேனியா ஜெர்மனியுடன் சேர்ந்தது. சேர்ந்ததோடில்லை; ஜெர்மன் படைகளுடன் ருமேனியப் படைகளும் ஸ்டாலின் கிராட் வரையிலும் படையெடுத்துச் சென்று போரிட்டன.

இப்போது அதே ருமேனியாவானது ஜெர்மனியின் பேரில் போர் தொடுத்திருக்கிறது. ருமேனியப் படைகள் ருஷியப் படைகளுடன் சேர்ந்து ஓடுகிற ஜெர்மன் படைகளை வேகமாகத் துரத்துகின்றன!

இதுவரை ருஷியாவுக்குப் பரம விரோதியாயும் ஜெர்மனிக்கு அத்தியந்த சிநேகமாயும் இருந்த ருமேனிய சர்க்கார் இன்றைக்கு ருஷியாவுடன் அத்தியந்த சிநேகம் பூண்டு உறவு கொண்டாடுகிறார்கள். ருஷியாவும் அந்த ருமேனியாவின் சிநேகத்தை அங்கீகரித்திருக்கிறது!

இதையும் பார்த்துவிட்டு, நமது நாட்டில் தேசியத் தலைவர்கள் தங்களுடைய கொள்கையை மாற்றிக் கொள்ளும் விஷயத்தில் காட்டும் தயக்கத்தையும் நினைத்தால், நமக்குச் சிரிப்பும் அழுகையும் கலந்து வருவதில் வியப்பு என்ன?

இந்தியா விடுதலை பெறுவதற்காக பிரிட்டிஷ் சர்க்காருடனோ, ஜனாப் ஜின்னாவுடனோ ஓர் உடன்படிக்கை செய்து கொண்டால், அந்த உடன்படிக்கையே [illegible] காலத்துக்கும் [illegible] என்பதாக எண்ணி அவஸ்தைப் படுவர்களைக் குறித்து நாம் அனுதாபப்படுவதா? ஒரு குரல் ஒப்பாரி வைத்து அழுவதா?

* * *

ருமேனியா மட்டுந்தானா? பின்லாந்தும் ருஷியாவுடன் சமாதானத்துக்குத் தயாராயிருக்கிறது. பல்கேரியா "இதோ நானும் தயார். ஓடுகிற ஹிட்லரின் முதுகிலே அடிக்க!" என்று அலறிக் கொண்டிருக்கிறது.

இன்னும் ஜெர்மன் பிடியிலிருந்து வரும் ஹங்கேரியும், "இதோ நானும் தயார்!" என்று முனகுகிறது.

இவ்விதம் கிழக்கு அரங்கத்தில் ஹிட்லரின் தோல்வி அவருடைய முதுகில் பெரிய கொட்டாப்புளி கொண்டு எழுத்தில் எழுதப்பட்டு வருகையில், மேற்கு

லாமா சொன்னார்!

கல்கத்தா வீதியிலே, மின்சார வண்டியிலே, திபேத் நாட்டு லாமா (மதகுரு) என்ன சொன்னார் என்றால்:—

அவரவர்களுடைய சட்டைப் பையில் பணம், கிணம் ஏதாவது இருந்தால் அதைப் பத்திரமாக வைத்துக் கொள்ளச் சொன்னார்!

நேற்றைக்கு யாராவது செத்துப் போயிருந்தால், இன்றைக்கு அவர்கள் செத்து இரண்டாவது நாள் என்று சொன்னார்.

அப்புறம், நம்முடன் ஐந்து வருஷமாகக் குலாவி வரும் உலக யுத்தமானது நாளது அக்டோபர் 24உ திடீரென்று நின்று போய்விடும் என்றார்!

பிறகு, இந்திய மக்கள் எப்போதும் போல் வாயில் விரலை வைத்துக் கொண்டு நிற்பார்கள் என்றார்!

திபேத் லாமாவின் யுத்த ஜோசியம் பலிக்குமோ, பலிக்காதோ நாம் அறியோம். எல்லாம், இன்னும் ஒரு மாதம் பொறுத்திருந்து பார்த்தால் தானே தெரிந்து போகிறது.

ஒருவேளை அந்த ஜோசியம் பலிக்குமானால், அதிலே பிரமாதமான ஆச்சரியம் ஒன்றும் நமக்கு இராது. கேவலம் ஒரு மாதம் கழித்து நடக்கப் போவதைச் சொல்வது அப்படி என்ன அதிசயமான ஜோசியம்? இரண்டாயிரம் வருஷத்துக்குப் பிறகு நடக்கப் போவதைச் சொல்வதல்லவா ஆச்சரியமான, அபூர்வமான ஜோசியம்?

நமது குறள் ஆசிரியர் திருவள்ளுவர் அந்த மாதிரி ஜோசியம் சொல்லியிருக்கிறார். நாளது 1944-ம் வருஷத்தில் அடால்ப் ஹிட்லர் தோற்றுப் போவார் என்பதை அந்தப் பொய்யா மொழியார் ஆயிரத்துத் தொள்ளாயிரம் வருஷத்துக்கு முன்பே சொல்லியிருக்கிறார்! என்ன சொல்லியிருக்கிறார் என்றால்:—

"வினைவலியும் தன் வலியும்
மாற்றான் வலியும்
துணைவலியும் தூக்கிச் செயல்!"

அதாவது, ஒரு மனுஷன் யுத்தம் தொடங்கும்போது தன்னுடைய பலத்தையும் யோசிக்க வேண்டும்; எதிராளியினுடைய பலம் எவ்வளவு என்பதையும் சிந்திக்க வேண்டும். இரண்டுக்குமுள்ள தாரதம்மியத்தை யோசித்துப் பார்த்து விட்டுத்தான் ஒருவன் யுத்தம் தொடங்க வேண்டும் என்றார் திருவள்ளுவர்.

அப்படி எதிராளியின் பலத்தைத் தெரிந்து கொள்ளாமல் யுத்தம் தொடங்கினால் தோற்றுப்போக வேண்டியது தான் என்றார் பொய்யா மொழியார்!

ஆகவே, ஹிட்லருடைய தலையிலே தோல்விதான் எழுதியிருக்கிறதென்று நிச்சயமாக முடிவு கட்டினார்!

இரண்டாயிரம் வருஷத்துக்கு முன்பு வள்ளுவர் சொன்னது மட்டுமில்லை. அவருடைய வாக்கை ஆதாரமாகக் கொண்டு, நாமும் மூன்று வருஷத்துக்கு முன்னாலேயே ஹிட்லரின் தோல்வியைப் பற்றி ஜோசியம் சொன்னோம்.

"மாற்றான் வலியை உணர்ந்து யுத்தம் தொடங்கவேண்டும்" என்னும் வள்ளுவர் வாக்குக்கு மாறாக ஹிட்லர் ருஷியாவின் மீது படை எடுத்தபோது அதைச் சொன்னோம்.

ருஷியாவின் ராட்சஸ பலம் எத்தகையது. ருஷியாவின் மூல பலம் எவ்வளவு பெரியது என்பதை அறிந்து கொள்ளாமலே ஹிட்லர் அந்தப் பெரிய யுத்தத் தவறைச் செய்தார்.

"மாற்றான் வலி"யை அறிந்து கொள்ளாமல் எப்போது ஹிட்லர் ருஷியாவில் காலை வைத்தாரோ, அப்போதே அவருக்கு "வினை வலி" இல்லை என்பதும் ஸ்பஷ்டமாகி விட்டது!

அவருடைய தலையிலே பிரம்மாண்டமான கொட்டை எழுத்தில் "தோல்வி" என்று எழுதியிருப்பது தெளிவாகப் புலப்பட்டு விட்டது.

ஜெர்மன் சோல்ஜர்களின் அதிசயமான வீரம், ஜெர்மன் தளபதிகளின் ஆச்சரியமான இராணுவ தந்திரம், ஜெர்மன் விஞ்ஞானிகளின் மகத்தான அறிவு, கட்டுடையும் சாதுரியத்தையும் தொடாத ஹிட்லரின் தேசிய வெறி, அவர் கடைசி காலத்துக்கு நம்பியிருக்கும் இரகசிய ஆயுதங்கள் — இவ்வளவும் வீணே என்பது அன்றைக்கே தெரிந்து போய் விட்டது.

எங்கும் அமோக வெற்றி!

கிருஷ்ணா பிக்சர்ஸ்

பிரபாவதி

★

5வது வாரம்

மதுரை	...	சிந்தாமணி
கோவை	...	ராஜா
திருநெல்வேலி	...	பாபுலர்
பாண்டிச்சேரி	...	ரத்னா

3வது வாரம்

பெங்களூர்	...	சிடி டாக்கீஸ்
வேலூர்	...	டாஜ் டாக்கீஸ்

2வது வாரம்

கள்ளிக்கோட்டை	...	ராதா பிக்சர் பாலஸ்
கூனூர்	...	கணேஷ் டாக்கீஸ்

28-8-44 முதல்
திருவனந்தபுரம்
நியூ தியேட்டரில்
நடைபெறுகிறது

முருகன் டாக்கீஸ் ரிலீஸ்!

★

டிஸ்டிரிப்யூடர்ஸ்:

முருகன் டாக்கி பிலிம் கம்பெனி
மதுரை — பெங்களூர் — பெஜவாடா

கும்பகோணம்

டி. எஸ். ஆர்.

கம்பெனியின்
உயர்ந்த

- அத்தர்
- அரகஜா
- புனுகு
- ஜவ்வாது
- ஊதுவத்தி
- குசாங்கம்
- தைலங்கள்
- பன்னீர்
- பாக்குத்தூள்

முதலியன

●

விலாசங்களுக்கு எழுதவும்

●

மதராஸ் ஸிடி ஏஜெண்டுகள்:

மெஸர்ஸ். புஷ்பவனம் ஸ்டோர்ஸ்
பைக்ராப்ட்ஸ் ரோடு, திருவல்லிக்கேணி

●

பாலக்காட்டுக்கு லோகல் ஏஜெண்டுகளும்
கோயமுத்தூருக்கு ஸ்டாக்கிஸ்டுகளும்
தி சதர்ன் இந்தியா ஏஜன்ஸீஸ்
அவநாசி ரோடு — கோயமுத்தூர்

வந்து நிறுத்தி விடுவார்கள் என்று எதிர்பார்க்கிறோம்.

மற்றும் சில ஜில்லாக்களில் மிகச் சொற்பத் தொகை வசூலாகி யிருப்பதற்கும் சரியான காரணம் தெரியவில்லை. ஜனங்களின் ஊக்கக் குறைவு காரணமா யிருக்க முடியாது. செட்டிமார் நாடு உள்ளிட்ட ராமநாதபுரம் ஜில்லா பத்தாயிரம் ரூபாய்தானா கொடுக்க முடியும்? மனது வைத்தால், இந்த ஒரு ஜில்லாவே கஸ்தூரிபா நிதிக்குத் தமிழ்நாட்டின் பங்கு ஏழு லட்சமும் கொடுத்து விடலாம். ஆங்காங்கே நிதி வசூலில் ஈடுபடக்கூடிய பொறுப்பு வாய்ந்த தொண்டர்கள் இல்லாமைதான் காரணமா யிருக்க வேண்டும். காரணம் எதுவா யிருந்தாலும், அதை நிவர்த்தி செய்து இந்த மகத்தான தர்ம கைங்கரியத்துக்குத் தங்களுடைய கடமையைச் செய்வது அந்தந்த ஜில்லாவிலுள்ள பொது மக்களின் கடமையாகும். தங்களிடம் யாரும் வந்து கேட்கவில்லையே யென்று அவர்கள் காத்திருக்க வேண்டாம். ஆங்காங்குள்ள சர்க்கா சங்கத்துக் காதி வஸ்திராலயங்களில் தொகையைக் கட்டி ரசீது பெறலாம். அல்லது மாகாண நிதிக் கமிட்டியின் தலைவரான ஸர் அல்லாடி கிருஷ்ணசாமி ஐயருக்கு நேரே மணியார்டர் செய்துவிடலாம். ஞாபகம் இருக்கட்டும்: இன்னும் ஒரே மாதந்தான் பாக்கி யிருக்கிறது.

பெயரை மாற்றி வை!

"இந்தக் காரியத்தை மட்டும் நான் செய்து முடிக்காவிட்டால், என் பெயரை மாற்றி அழை!" என்று வீம்புக்குச் சொல்வதுண்டு. "பெயரை மாற்றி வைத்துக் கொள்கிறேன்" என்றும் சில வீறாப்புக்காரர்கள் சொல்வார்கள். "ஸவுத் இன்டியன் லிபரல் பெடரேஷன்" என்றும், சுருக்கமாக "ஜஸ்டிஸ் கட்சி" என்றும் சொல்லப்பட்டு வந்த கட்சிக்கு அந்த கதி நேர்ந்தது பற்றி யாரும் ஆச்சரியப்படமாட்டார்கள். ஏனெனில், இந்தக் கட்சியானது "நியாயக் கட்சி" என்ற பெயரை வைத்துக் கொண்டது கொஞ்சமும் நியாயமில்லை யென்பது அந்தக் கட்சியில் இன்னும் மிச்சமிருந்து சேலத்தில் கூடிய சில பேருக்கு நன்றாய்த் தெரிந்துதானிருக்கவேண்டும். அந்தக் கட்சி என்னென்ன நோக்கத்துக்காக ஆரம்பிக்கப்பட்டதாகச் சொல்லப்பட்டதோ, அதெல்லாம் நிறைவேறவில்லை என்பதையும் அவர்கள் உணர்ந்திருக்க வேண்டும். ஆகவே தான், "வேண்டாம்! பழைய பெயர் வேண்டாம்! வேறு பெயர் வைத்துக் கொள்கிறோம்" என்று அவர்கள் தீர்மானித்தார்கள். தீர்மானித்து, "திராவிடர் கழகம்" என்னும் புதுப் பெயரையும் கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள். ஆனால், துரதிர்ஷ்ட வசமாக இந்தப் பெயரையும் அவர்கள் மாற்றிக் கொள்ள நேரிடலாமென்று நாம் அஞ்சுகிறோம். முதலாவது, இந்தக் காலத்தில் "திராவிடர் என்பவர் யார்?" என்று தீர்மானிப்பது சுலபமான காரியமல்ல; முடியவே முடியாத காரியம். தென்னிந்தியர்களை யெல்லாம் "திராவிடர்" என்று வைத்துக் கொள்வதா யிருந்தால் வைத்துக் கொள்ளலாம்; ஆனால் சேலத்தில் கூடிய சிலரைத் தவிர மற்றத் தென்னிந்தியர்கள் அதற்குச் சம்மதிக்க மாட்டார்கள். மேலும், "கழகம்" என்னும் வார்த்தையைப் பெரும்பாலான தமிழர்களே சரியாக உச்சரிக்க முடியாது. ஆந்திரர்களும் கன்னடக்காரர்களும் அந்த வார்த்தையை நினைக்கவே முடியாது. மலையாழிகள்—இல்லை, மழையாளிகள்—இல்லை, இல்லை!—மலையாளிகளால்தான் அதை உச்சரிக்க முடியும். ஆகக்கூடி இன்னொரு தடவையும் மேற்படி கட்சிக்குப் புது நாமகரணம் செய்ய வேண்டியதாய்த்தா னிருக்கு மென்று நாம் அஞ்சுவதில் வியப்பில்லை யல்லவா?

தீபாவளி உண்டா?

இந்த வருஷம் தீபாவளிப் பண்டிகை உண்டா, இல்லையா? கட்டாயம் உண்டு. அப்படியானால், "கல்கி" தீபாவளி மலரும் அவசியமாக உண்டு. இந்த வருஷத்துத் தீபாவளி மலரைப் பற்றி இப்போது நாம் சொல்லக் கூடிய தெல்லாம் என்ன வென்றால், தோற்றத்திலும் விஷயத்திலும் முன் இரண்டு இதழ்களையும் இது தூக்கி யடிக்கும் என்பதுதான். இதைப் பற்றி நிச்சயமாகத் தெரிந்து கொள்ள விரும்பினால், ஆங்காங்குள்ள "கல்கி" ஏஜண்டுகளிடம் இப்போதே உங்கள் ஆர்டரைப் பதிவு செய்துவிட வேண்டும். விலையைப் பற்றிக் கவலைப் பட வேண்டாம். மலரைப் பார்த்ததும் என்ன விலை கொடுத்தாலும் தகும் என்று நீங்களே சொல்லப் போகிறீர்கள். பின், விலையைப் பற்றி இப்போது என்னத்திற்கு அவசரம்?

ஐந்து ரூபாய் பரிசு: *சென்ற இதழில் வெளியான "வாஸ்தவம்தான்!" என்னும் காலக்ஷேபத் துணுக்குக்குப் பரிசு பெற்றவர்: டி. எம். கனகசபை, வால்டாக்ஸ் ரோட், சென்னை.*

கல்கி

மலர் 4 | தமிழ்த்திரு நாடு தன்னைப் பெற்ற தாயென்று கும்பிடடி பாப்பா —பாரதியார் | இதழ் 5

என்ன சேதி?

ஒரே மாதம்

தமிழ் மக்கள் தங்கள் தேச பக்தியையும் தர்ம புத்தியையும் சுயமரியாதையையும் நிலைநாட்டிக் கொள்வதற்கு இன்னும் ஒரே மாதந்தான் பாக்கியிருக்கிறது. இந்த செப்டம்பர் மாதத்திற்குள்ளாகத் தமிழ்நாட்டில் அன்னை கஸ்தூரிபா நிதிக்கு ஏழு லட்சம் ரூபாய் சேர்ந்தாக வேண்டும். சென்ற ஆகஸ்டு 26உ வரையில் ரூ. 3,67,000 தான் சேர்ந்திருக்கிறது. மேற்படி தேதி வரையில் ஜில்லா வாரியான வசூல் விவரம் பின்வருமாறு :—


சென்னை நகரம்	ரூ. 1,25,000
கோயமுத்தூர்	67,000
மதுரை	54,000
திருச்சிராப்பள்ளி	35,000
தஞ்சாவூர்	13,000
சேலம்	12,000
திருநெல்வேலி	11,000
ராமநாதபுரம்	10,000
வட ஆர்க்காடு	6,500
தென் ஆர்க்காடு	4,000
செங்கல்பட்டு	4,000
நீலகிரி	500

சென்னையை நீக்கிவிட்டுப் பார்த்தால் எல்லா ஜில்லாக்களிலும் கோயமுத்தூர் தலைமை வகிக்கிறது. அமோகமான தேச பக்திக்கும் அபரிமிதமான தொழில் வளத்துக்கும் பெயர்போன கோயமுத்தூர் மேற்படி ஸ்தானத்தை வகிப்பது இயற்கைதான். ஆனால், கொஞ்சம் முனைந்தால் இன்னும் முன்னேறிச் சென்னையையும் முந்திக் கொள்ள முடியும். தேச பக்திக்குப் பெயர்போன கோயமுத்தூர் ஆலை முதலாளிகள் சிலர் இன்னும் தங்களுடைய பெரிய நன்கொடைகளை அளிக்கவில்லையென்று அறிகிறோம்.


போகட்டும்; தஞ்சாவூர் ஜில்லா ஏன் இப்படிப் பின்வாங்கியிருக்கிறது? தேசியப் போரில் எப்போதும் முன்னணியில் நின்றிருக்கும் தஞ்சை ஜில்லா, அறிவுக்கும் கல்விக்கும் பெயர்போன தஞ்சை ஜில்லா, தர்மத்துக்கும் தயாளத்துக்கும் உறைவிடமான தஞ்சை ஜில்லா,—ஏன் இவ்வளவு பின்னால் நிற்கவேண்டும்? "சங்கு சுட்டாலும் வெண்மை தரும்" என்பது முதுமொழி. தஞ்சை ஜில்லா என்னதான் தாழ்வை அடைந்தாலும், இப்பேர்ப்பட்ட அரிய தர்ம காரியத்துக்குத் தன்னுடைய நன்கொடையை அளிக்கச் சக்தியற்றுப் போய்விடவில்லை.

26உக்குப் பின்னர் வந்த பத்திரிகைச் செய்திகளிலிருந்து தஞ்சை காங்கிரஸ் தலைவர்கள் சமீபத்தில் முனைந்து வேலை செய்யத் தொடங்கியிருக்கிறார்களென்றும், ஐம்பதினாயிரம் ரூபாய் வசூல் செய்திருக்கிறார்களென்றும் தெரிகிறது. சந்தோஷம்; மேலும் சிறிது வேகங் காட்டித் தஞ்சை ஜில்லாவைக் கோயமுத்தூருக்கு முன்னால் கொண்டு

-உர்ரான்




அன்று
பிரிட்டன் சக்தியற்று நிராதரவாய்த் தரையில் கிடக்கும்போது, நாஜி ஜெர்மனியுடன் பிரான்ஸ் அன்னியோன்ய உறவு கொண்டாடிற்று.
ஜெர்மனி
பிரான்ஸ்
பிரிட்டன்



இன்று
பிரிட்டன் பலம்பெற்று ஜெர்மனியின் மென்னியைப் பிடிக்கும் சமயத்தில், பிரான்ஸ் "இதோ நானும் இருக்கிறேன்" என்று வந்து ஜெர்மனியின் கையைப் பிடித்துக் கொள்கிறது.
பிரிட்டன்
ஜெர்மனி
பிரான்ஸ்

அன்று

ஜெர்மனியின் கை ஓங்கி, ருஷியா மரணவஸ்தையில் இருந்தபோது,
சின்ன ருமேனியா தேசம் பின்னாலிருந்து உதைத்தது!



இன்று

ருஷியாவின் கை ஓங்கி ஜெர்மனியைத் தடியால் அடித்துத் துரத்தும்போது, ருமேனியா தானும் ஒரு தடியை எடுத்துக் கொண்டு கூடத் துரத்துகிறது!





மயிலை சங்கீத சபா - மயிலாப்பூர்

பி. எஸ். ஹைஸ்கூல் ஹாலில்

●

2-9-1944 சனிக்கிழமை மாலை 6 மணிக்கு

ஸ்ரீமதி சாந்தா — பரத நாட்டியம் & அபிநயம்

3-9-1944 ஞாயிற்றுக்கிழமை

ஸ்ரீமதி கே. பி. சுந்தராம்பாள் — பாட்டு
நாகர்கோயில் ஹரிஹரன் — பிடில்
ராமநாதபுரம் ஈஸ்வரன் — மிருதங்கம்
கல்யாணராமய்யர் — கஞ்சிரா
வில்வாத்திரி அய்யர் — கடம்

10-9-1944 ஞாயிற்றுக்கிழமை

திருவாங்கூர் ஆஸ்தான வித்வான்
செம்மங்குடி ஸ்ரீனிவாச அய்யர் — பாட்டு
மைசூர் சமஸ்தான வித்வான் சௌடய்யா — பிடில்
திருவாங்கூர் ஆஸ்தான வித்வான் வைத்யநாதய்யர் — மிருதங்கம்
வேணு நாயக்கர் — கஞ்சிரா

டிக்கெட் விவரங்கள்: ரூ. 5, 3 & 1.



கல்கி பொருளடக்கம்

மலர் 4 } இதழ் 5 } 1944 செப்டம்பர் 3 { தாரண ௵ { ஆவணி 1

"கல்கி"யில் வெளியாகும் கதைகளில் [illegible]

காயிதே ஆஜம் ஜனாப் ஜின்னாவின் படத்தை இன்னும் வெகு காலத்துக்கு முன்பே "கல்கி"யின் அட்டையில் நாம் வெளியிட்டிருக்க வேண்டியது. அதற்கு நாம் கொடுத்து வைத்திருக்கவில்லை! இன்னும், ஒரு வாரம் போனால், மறுபடியும் அந்த பாக்கியத்துக்கு நாம் கொடுத்து வைக்காமல் போனாலும் போய்விடலாம் என்று பயந்துதான், அவசர அவசரமாக இந்த இதழிலேயே வெளியிட்டிருக்கிறோம்.



இந்தியாவின் இந்தக் காலத்துச் சரித்திரம் எழுதப்படும்போது, அதில் ஜனாப் ஜின்னாவின் பெயர் மிகவும் பிரம்மாண்டமான கொட்டை எழுத்தில் விளங்கும் என்பதில் சந்தேகமில்லை. "இந்தக் காலத்தில் இந்தியாவில் உதித்த இணையற்ற இராஜதந்திரி" என்பதாக அவர் சரித்திரத்தில் பெயர் பெறுவார். ஒரு காலத்தில் முஸ்லிம் மக்களின் கூட்டத்தில் பேசுவதற்கே அநுமதிக்கப்படாதவர் ஜனாப் ஜின்னா. அத்தகையவர், தமது அறிவின் பலத்தினாலும், மற்றவர்களுடைய அரசியல் தவறுகளை உபயோகப்படுத்திக் கொண்டும், இந்திய முஸ்லிம்களின் இணையற்ற சர்வாதிகாரத் தலைமைப் பதவியை அடைந்து அதை நிலைநாட்டிக் கொண்டார். ஆனால், இவ்விதம் அவர் அடைந்துள்ள மகத்தான சக்தியை இது வரையில் தேச நலத்துக்காக உபயோகப்படுத்தவில்லை; தேச விடுதலைக்கு முட்டுக்கட்டை போடவே உபயோகப்படுத்தி வந்திருக்கிறார்.

காந்திக்கும் ஜின்னாவுக்கும் அதாவது காங்கிரஸுக்கும் லீக்குக்கும் சமரசம் ஏற்படாத வரையில், இந்தியாவுக்குக் கதிமோட்சம் இல்லை என்ற கொள்கையை நாம் தொடர்ந்து வற்புறுத்தி வந்திருக்கிறோம். அடுத்த வாரத்தில் காந்திஜிக்கும் ஜின்னா சாகிபுக்கும் சந்திப்பு நடக்கிறது.

மேற்படி சந்திப்பு வெற்றிகரமாக முடிய வேண்டுமென்று மனப்பூர்வமாக விரும்புகிறோம். அதன் பயனாக, ஜனாப் ஜின்னாவின் இராஜதந்திர சக்தியெல்லாம் தேச விடுதலைக்குப் பயன்பட வேண்டுமென்று பெரிதும் நாம் ஆசைப்படுகிறோம்.

எல்லோராலும் எவ்வகையிலும்
மேன்மையானதெனப் போற்றப்படும்

தமிழ்
ஹரிச்சந்திரா

ப்ரகதி
தயாரிப்பு

★

இப்பொழுது தமிழ் நாட்டிலும்
ஆந்திர தேசத்திலும் வெற்றி
கரமாக நடைபெறுகிறது

★

டிஸ்டிரிபியூடர்கள் :

FAMOUS TALKIE DISTRIBUTORS

MADRAS — MADURA — BANGALORE — BEZWADA — HUBLI